
பனிக்கால
வசந்தங்கள்
எஸ்.லதா சரவணன்

உள்ளே...

1. பனிக்கால வசந்தங்கள் 5

2. கள்வனின் காதலி 114

# பனிக்கால வசந்தங்கள்



## 1



"இங்க பாரு மரகதம்! இனிமே அந்த பய அருண் இந்த வீட்டு வாசப்படியை மிதிக்கக் கூடாது. அவனுக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தா நாம எல்லோரும் அவ்வளவு தூரம் சொல்லியும் இப்படியொரு மானக்கேட்டை நமக்கு உண்டு பண்ணியிருப்பான்?'' என்று ஹாலில் நின்று குதிக்காதக் குறையாகக் கத்தினார் சபேசன்.

"என்னங்க இப்ப என்ன ஆயிடுச்சின்னு கத்துறீங்க. விஷயத்தைச் சொன்னாத்தானே எனக்குத் தெரியும். எதுவும் சொல்லாம நீங்களா சத்தம் போட்டுட்டு இருந்தா என்ன அர்த்தம்?''

"என்ன சொல்லச் சொல்ற மரகதம்? அருண் அந்தப் பொண்ணை, அதான் அந்த ருத்ராவோ, உத்ராவோ அவளை ரிஜிஸ்டர் கல்யாணம் செய்துகிட்டானாம்.''

சபேசன் அந்தச் செய்தியை சொன்னதும் தலையில் இடி விழுந்ததைப் போல் இருந்தது மரகதத்திற்கு.

''நான் நம்ப மாட்டேன். நீங்க பொய் சொல்றீங்க. என் மகன் ஒரு நாளும் அப்படிச் செய்ய மாட்டான்!''

''அவன் எனக்கும் மகன்தான் மரகதம்! அதை மறந்திட்டுப் பேசாதே. ரகுதான் என் ஆபீஸிற்குப் போன் செய்து சொன்னான்'' என்று அவர் திட்டவட்டமாய் கூறியதும் மரகதம்மாளின் முகம் இருண்டது. வாய்க்குப் புடவைத் தலைப்பை கொடுத்து முதுகு குலுங்கினார்.

''நீ ஏன் அழுவுற? உயிர் கொடுத்து வளர்த்த நம்ம மனசை நோகடிச்ச அவங்கதான் அழணும்'' என்று சாய்வு நாற்காலியில் சோர்வுடன் சாய்ந்தார். இவர்களின் சம்பாஷணைகளை பக்கத்து அறையில் இருந்து கேட்ட நந்தினி ஆச்சரிய அதிர்வுற்றாள்.

இந்த விஷயம் அவளுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்திருந்தது. 'எந்த விஷயத்திலும் அப்பா அம்மாவை எதிர்க்காத அண்ணன் இதில் மௌனமாயிருந்தே காரியத்தை சாதித்து விட்டான். இன்று அதிகாலையிலேயே அதற்காகத்தான் புறப்பட்டு போனானோ. பாவி என்னிடம் கூட ஒரு வார்த்தை சொல்லவில்லையே.'

திருமண விவகாரம்தான் நந்தினிக்குத் தெரியாதே தவிர அவர்களுடைய காதல் விவகாரம் தெரியும். ஓரிரு முறை உத்ராவைப் பார்த்திருக்கிறாள். மாநிறம்தான் என்றாலும் எந்நேரமும் அவள் முகத்தில் புன்னகை பூத்திருக்கும். அவளின் கனிவு ததும்பும் பார்வையிலேயே மயங்கிய நந்தினி அவள்தான் தன் வருங்கால அண்ணி என்றதும் கண்ணை மூடிக் கொண்டு சம்மதம் சொன்னாள்.



இந்த மூன்று ஜீவன்களின் எதிர்பார்ப்பிற்கு உரிய அருண், உத்ரா இருவரும் புதுமணத் தம்பதிகளாய் காரில் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். மணமாலைகள் நெஞ்சின் மேல் அலங்கரித்து இருந்தாலும் மனதினுள் ஏதோ இனம் புரியாத பயம் கொண்டாள் உத்ரா.

சபேசன் - மரகதம் தம்பதியருக்கு மூன்று குழந்தைகள். மூத்தவன் ரகு தான் உண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவன். அதிகம் பேசமாட்டான். அப்பாவின் செல்லப் பிள்ளை. அடுத்தவன் அருண் படிக்கும்போதே கல்லூரியில் ரோமியோ என்று பெண்களால் புகழப்பட்டவன். பெரியோரை எதிர்த்துப் பேசாதவன் என்ற சபேசனின் எண்ணத்தை திருமண விஷயத்தில் முறியடித்தவன். கடைக்குட்டி நந்தினி குடும்பத்தாரின் ஒட்டு மொத்த அன்பையும் ஒன்றாய் பெற்று விட்ட கல்லூரிப் பட்டாம் பூச்சி.

சாதாரண குமாஸ்தா உத்தியோகத்தில் இருந்தே தன் குடும்பக் கப்பலை கரை சேர்த்தவர் சபேசன். கணவரின் மனமறிந்து அதற்கு உறுதுணையாய் துடுப்பிட்டவர் மரகதம்.

கார் அந்த வீட்டு வாசலில் நின்றது. உத்ராவும், அருணும் இறங்கினார்கள். கைகளில் மாலையோடு, அவள் கழுத்தில் புதுத்தாலிச்சரடு மின்னியது. கார் ஹாரன் சத்தம் கேட்டு தன்னறையில் இருந்து வெளியே ஓடி வந்த நந்தினியை சபேசன் தன் அனல் பார்வையால் தடுத்து நிறுத்தினார்.

அருண் யாரையும் பொருட்படுத்தாமல் டாக்ஸியை அனுப்பி விட்டு உள்ளே நுழைய முற்பட, ''அங்கேயே நில்லுடா!'' என்று சபேசன் கத்தினார்.

அதற்குள் ரகு ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான். ரகுவைப் பார்த்ததும்தான் நந்தினிக்கும், மரகதத்திற்கும் மூச்சே வந்தது. அவனால் மட்டுமே அப்பாவைச் சமாதானப் படுத்த முடியும். ரகுவின் பேச்சிற்கு மட்டும்தான் சபேசன் செவிசாய்ப்பார்.

''என்னப்பா இது? வந்தவங்களை வாசல்ல நிக்க வச்சி பேசிகிட்டு இருக்கீங்க. மொதல்ல அவங்களை உள்ளே வரச் சொல்லுங்க!''

''முடியாதுடா. இது என்னுடைய வீடு. என் பேச்சைக் கேட்காதவங்க யாரும் இங்கே இருக்கக் கூடாது. முதல்ல அவங்க இரண்டு பேரையும் வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லு ரகு.''

''அப்பா ப்ளீஸ் பொறுமையா இருங்க. வெளியே எல்லாம் பார்க்கிறதுக்கு முந்தி அவங்களை உள்ளே கூப்பிடுங்க. வீட்டுக்குள்ளே வைச்சி பேசி முடிவு பண்ணலாம்'' என்ற ரகுவின் வேண்டுகோளிற்கு இணங்க மணமக்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டார்கள்.

உத்ரா அருணின் விரல்களை இறுகப் பற்றியபடி தன் புகுந்த வீட்டு மனிதர்களை மிரட்சியோடு பார்த்தாள். கண்கள் எந்நேரமும் நீரை வெளியேற்றும் நிலையில் இருந்தது.

சபேசன் அவர்களுக்கு முதுகு காட்டி நிற்க, மரகதம்மாள் கணவரின் கோபத்திற்கு என்ன பலன் கிடைக்குமோ என்று நடுங்கிக் கொண்டிருந்தாள். அறையின் வாசலில் நின்று கொண்டு நடப்பவற்றை வேடிக்கைப் பார்த்தாள் நந்தினி.

''அருண் முதல்ல இரண்டு பேரும் அப்பா, அம்மா காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குங்க.''



''என்ன ரகு விளையாடுகிறாயா? அவங்களை வீட்டுக்குள்ளே விட்டதே தப்புன்னு நான் நினைச்சிகிட்டு இருக்கேன். நீ என்னடான்னா, கண்டவங்களுக்கு எல்லாம் என்னால ஆசீர்வாதம் பண்ண முடியாது'' என்று கர்ஜித்தார் சபேசன்.

''என்னப்பா பேசுறீங்க. இங்கே நிற்கிறவங்க ஒண்ணும் கண்டவங்க இல்லை. நீங்க பெத்து வளர்த்த பையன், அவனையும் நம்ப குடும்பத்தையும் நம்பி வந்திருக்கிற பெண்.''

''நீ ஆயிரம்தான் விளக்கம் சொன்னாலும், என்னால இதை ஒத்துக்க முடியாதுடா. அவனுக்கு நாம யாரும் வேண்டாமின்னு நினைச்சிதானே அவளை இழுத்திட்டு வந்திருக்கான்.''

''அப்பா!'' என்று ரகு அல்லாடிக் கொண்டு இருக்கும் போதே அருண் குறுக்கிட்டான்.

''விடுண்ணா, நான் அவங்களுக்கு விருப்பமில்லாத காரியத்தை செய்திட்டேன். அதனால அவங்களுக்கு வேண்டாத பிள்ளையாயிட்டேன். அவருக்கே தன் மகனுடைய வாழ்க்கை நல்லாயிருக்கணுங்கிற அக்கறை இல்லாதப்போ நீ ஏன் அண்ணா கிடந்து அடிச்சிக்கிறே?''

''யாருக்குடா அக்கறையில்லை? ஊர் பேர் தெரியாத யாரோ ஒருத்தியை நீ கூட்டிட்டு வருவே. உன்னை ஏன்னு கேட்டா நாங்க எல்லாரும் அக்கறையில்லாதவங்கன்னு அர்த்தமா? இவ்வளவு வாய் கிழியப் பேசறியே நீ மட்டும் என்ன ஒழுங்கா?''

''அப்பா இவ ஒண்ணும் ஊர் பேர் தெரியாதவ இல்லை. என்னுடைய மனைவி. உங்க மருமகள்.''

''வாயை மூடுடா என்ன உரிமை கொண்டாடுறியா? இப்படி வக்கணையாப் பேசுறவன் வயசுக்கு வந்த தங்கச்சி நமக்கு இருக்காளேன்னு யோசிச்சி இருக்கணும். இப்படி சுயநலமா நடந்திருக்கக்கூடாது. நீ செஞ்சி இருக்கிற இந்த காரியத்தினால நாளைக்கு நம்ம ஜாதி ஜனங்கள்ல அவளை யார் பெண் கேட்டு வருவா?''

''அப்பா!'' என்று ரகு அழைக்க அவனை நோக்கித் திரும்பினார் சபேசன். ''நந்தினியின் கல்யாணத்திற்கு இன்னும் எவ்வளவோ நாள் இருக்கு. அருண் அந்தப் பெண்ணை கல்யாணம் செய்துக்கறேன்னு பர்மிஷன் கேட்டப்போ நாம யாரும் அதை ஒத்துக்கலை.

எந்த விஷயத்திலேயும் பொறுமையா அணுகுற நீங்க இந்த விஷயத்தில் மட்டும் ஏன் இப்படி நடந்துக்குறீங்கன்னுதான் எனக்குப் புரியலை. நான்தான் அவங்க கல்யாணத்தை முன்னே நின்று நடத்தி வைச்சேன். அதனால எந்தத் தண்டனையா இருந்தாலும் எனக்குக் கொடுங்க அப்பா! அவங்களை இங்கே வாழவிடுங்க!

அப்பா! யாராக இருந்தாலும் ஒரு மனுஷன் தான் கொடுத்த வாக்கை எந்த நேரத்திலும், எவ்வளவு கஷ்டம் வந்தாலும் மறக்கக் கூடாதுன்னு நீங்கதானே சொல்லி இருக்கீங்க.

பெத்தவங்க இல்லாத ஒரு பெண்ணிடம் நான் உன்னையே கல்யாணம் செய்துக்கிறேன்னு சத்தியம் செய்திட்டு நீங்க ஒத்துக்கலைன்னா அதுக்காக அந்தப் பெண்ணை நிற்கதியா விட்டுட்டு வந்தான்னா அதுதான் மகாதப்பு. ஆனா அருண் அப்படிச் செய்யாம உங்க பேச்சை மதிச்சு அந்தப் பெண்ணிற்கு வாழ்க்கை கொடுத்திருக்கான்.



நான் எனக்குன்னு உங்களிடம் இதுவரையில் எதுவும் கேட்டது இல்லைப்பா. எனக்காக அவங்களை இந்த வீட்ல வாழ விடுங்கப்பா ப்ளீஸ்!'' என்று கை கூப்பினான் ரகு.

சபேசன் செய்வதறியாது நின்றார். ''என்ன இருந்தாலும் ரகு இதை என்னால இன்னும் ஜீரணிக்க முடியலை. இப்போதைக்கு என் மனசு முழுமையா இவங்களை ஏத்துக்காது. உள்ளே போகச் சொல்லு.''

அவர் அவ்வளவு தூரம் இறங்கி வந்ததே பெரிய விஷயம் என்று எண்ணிக் கொண்டு அருணும், உத்ராவும் அவருடைய காலில் விழச் சென்றார்கள்.

''இங்க பாரு ரகு! உன் ஒருத்தன் மேல உள்ள பாசத்திற்காகத்தான் இவங்களை இருக்கச் சொல்லியிருக்கேனே தவிர அப்பா, அம்மான்னு யாரும் உறவு முறை கொண்டாடிட்டு வரக்கூடாது. நான் வீட்ல இருக்கிற வரைக்கும் இவங்க ரெண்டு பேருடைய சப்தமும், பேச்சும் கேட்கவே கூடாது.

மாடியில் இருக்கிற அறையை ஒழுங்கு படுத்தி அங்கேயே தங்கி சமைச்சு சாப்பிட்டுக்க சொல்லிடு'' என்று விடுவிடுவென வெளியே போய் விட்டார், சபேசன்.

''என்ன அண்ணா அப்பா இப்படி பேசிட்டுப் போறார்'' என்று அருகில் வந்தாள் நந்தினி.

''ஆமாண்ணா அப்பாவோட மனசு இன்னும் எங்களை ஏத்துக்கலை. ஏதோ கடமைக்காகத்தான் இருன்னு சொல்லிட்டுப் போயிருக்கார்'' என்றான் அருண்.

''நீங்க நினைக்கிறது தப்புங்க'' என்று சொன்ன உத்ராவை மூவரும் வியப்புடன் பார்த்தார்கள்.



## 2



“என்ன சொல்ற உத்ரா?” - அருண்.

“ஆமாங்க! மாமா சொன்னதை நீங்க யாரும் சரியா புரிஞ்சிக்கலை. இப்போதைக்கு இவங்களை என் மனசு ஏத்துக்காதுன்னுதான் சொன்னாரே தவிர எப்பவுமே ஏத்துக்காதுன்னு சொல்லலியே. எனக்கு நம்பிக்கை இருக்குங்க அவருடைய மனசு கண்டிப்பா மாறும்.”

“என்ன அண்ணி வந்ததுமே மாமனாருக்கு சப்போர்டா?”

“சும்மாயிரு நந்தினி நீ மேலே உன் போர்ஷனுக்குப் போம்மா! அருண் கூட்டிட்டுப் போடா. எதுக்கும் கவலைப்படாதே எல்லாம் போகப் போக சரியாயிடும். நான் உங்களுக்கு வீட்டுக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் ஏற்பாடு செய்திட்டு வரேன்” என்று நகர முயன்ற ரகு உத்ராவின் பார்வை அடுக்களையின் பக்கம் செல்வதை கவனித்தான்.

“என்னம்மா தயங்கறே! நீ இப்ப இந்த வீட்டு மருமக. அந்த நினைப்பை மட்டும் மனசில வச்சிகிட்டு உரிமையோட உள்ளே போம்மா. எல்லாம் நல்லபடியா நடக்கும்.”

“ரகு அத்தான் எங்க கல்யாணம் பெரியவங்க முன்னிலையில் நடக்கலை. அதுவே எனக்குப் பெரிய குறையாத்தான் இருந்தது. இந்த வீடு நான் வாழப்போற இடம். இங்கே ஆரத்தி எடுத்து என்னை வான்னு கூப்பிடக்கூட ஆள் இல்லாம போயிட்டாங்க.”



“அண்ணி நான் எல்லாம் உங்களுக்கு ஒரு ஆளா தெரியலையா?”

“அப்படியில்லை நந்தினி பெத்தவங்க இல்லாத எனக்கு அத்தை அம்மாவா இருப்பாங்கன்னு நினைச்சேன்” என்று அவள் சொல்லி முடிக்கும் முன் மரகதம்மாள் கையில் ஆரத்தித் தட்டுடன் வெளியே வந்தார்.

ஹாலில் இருந்த அத்தனை விழிகளும் ஆச்சரியத்தில் விரிய, மரகதம்மாள் ஆரத்தி எடுத்துவிட்டு வாய் பேசாமல் உள்ளே சென்று விட்டார்.

“அப்புறம் என்ன அண்ணி? உங்க ஆசைதான் நிறைவேறிடுச்சே. இன்னும் என்ன தயக்கம். மேலே உங்க ரூமிற்குப் போங்க.”

அருணும், உத்ராவும் மாடியேறினார்கள். நந்தினி அவளறைக்குச் செல்ல, ரகு மரகதம்மாளை நோக்கிச் சென்றான்.

மதிய உணவைத் தயார் செய்து கொண்டிருந்தவரிடம், “எனக்கு ஒரே ஆச்சரியமா இருக்கும்மா. அப்பாவோட பேச்சுக்கு மறு வார்த்தை பேசாத நீங்க இப்ப தைரியமா வந்து அந்தப் பெண்ணுக்கு ஆரத்தி எடுத்தீங்களே என்னால இன்னும் கூட நம்ப முடியலை.”

“அப்பாவோட வார்த்தையை மீறுகிற அளவிற்கு எனக்குத் தைரியம் கிடையாது ரகு! தப்போ சரியோ அந்த பொண்ணு இங்கே வாழ வந்திட்டா. மணக் கோலத்தில் இருக்கிறவ கண் கலங்கக்கூடாது. அதுவும் இல்லாம இது தீட்டுக் கழிக்கிறா மாதிரிதான். அதைச் செய்யலைன்னா அந்தப் பொண்ணுக்கும் நல்லதில்லை. நம்ம குடும்பத்திற்கும் நல்லதில்லை.”

“எப்படியோம்மா எல்லாம் நல்லா நடந்தா சரி” என்றான் ரகு.

''ரகு ஒரு விஷயம்?''

''என்னம்மா சொல்லுங்க.''

''இது உன் பொண்டாட்டிக்குத் தெரிஞ்சா, சும்மாவே நம்ம மனுஷாளைப் பத்தி ஏகத்துக்கு பேசுவா. இப்ப என்ன பண்ணப் போறாளோ?''

''கல்யாணம் அருணுடைய சொந்த விஷயம். அவளுக்கு இதுல எந்த உரிமையும் இல்லை. நீங்க கவலைப் படாம இருங்கம்மா'' என்று கூறிவிட்டுச் சென்றான் ரகு.

அருணும், உத்ராவும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அறையை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்த அதே வேளையில் ரகு ஏற்பாடு செய்திருந்த வீட்டு சாமான் களும் வந்துவிட பொழுதும் சாய்ந்தது.

அருண் நாற்காலிகளை துடைத்து வெளியில் போட் டான். உத்ரா குளித்துவிட்டு மாற்றுச் சேலைக்கு மாறி விட்டிருந்தாள். இருவரும் இரவு உணவை முடித்துக் கொண்டு மாடியில் காற்றோட்டமாய் அமர்ந்திருந்தார்கள்.

சுற்றிலும் வீசிய குளிர்காற்றை அனுபவித்துக் கொண்டு மௌனமாய் ஒருவரையொருவர் பார்வையால் விழுங்கிக் கொண்டு இருந்தார்கள்.

''என்ன உத்ரா எதுவுமே பேச மாட்டேங்கிற. கல் யாணத்துக்கு முன்னாடி வாய் ஓயாம பேசுவ?''

''அப்ப என்னை வாயாடிங்கிறீங்களா?''

''கடவுளே, ஆரம்பிச்சிட்டியா?''

சிரித்துக் கொண்டே ''பெண்களின் திடீர் மௌனத் திற்கு காரணம் இதுதான்!'' என்று கழுத்தைத் தொட்டுக் காட்டினாள்.



''இதுதான் உத்ரா லேடீஸ்கிட்ட புரியாத லாஜிக். கல் யாணத்துக்கு முன்னாடி யாரா இருந்தாலும் வந்து பாருன்னு வம்பு பண்ண வேண்டியது; தாலியைக் கட்டிட்டா அடங்கிட வேண்டியது!''

''அதற்குப் பிறகு நாங்க வம்பு சண்டை போடத்தான் புருஷன்கிற போல நீங்க இருக்கீங்களே.''

''அப்படியா கதை அப்ப உன்கிட்ட நான் வசமா மாட் டிக்கிட்டேன்னு சொல்லு.'' - இருவரும் சேர்ந்து சிரித் தார்கள்.

''விளையாட்டு எல்லாம் இருக்கட்டும். இங்க இருக்கிற எல்லோருடைய குணத்தைப் பத்தியும் சொல்லுங்க. அவங்களுக்கு எது பிடிக்கும் பிடிக்காது. இதெல்லாம் தெரிந்தால்தான் அவங்க மனசு போல நான் நடந்துக்க முடியும்.''

''ரொம்ப சுலபம் உத்ரா. அம்மா ரொம்பவும் ரிஸர்வ் டைப்! அப்பாவுக்கு எதிராக இதுவரையில் சரிசமமா உட்கார்ந்தது கூட இல்லைன்னா பார்த்துக்கோயேன். சாமி பூஜைன்னு இருந்தே காலத்தை கழிச்சிட்டவங்க. அவங் களுக்கு உலகமே இந்த வீடும், நாங்களும்தான். அம்மா மட்டுமல்ல நானும், ஏன் ரகுண்ணா நந்தினி கூட அப்பா விடம் நேருக்கு நேர் நின்று பேசினது கிடையாது. எங்க எல்லோருக்கும் அப்பாவிடம் ஒரு பயங்கலந்த மரியாதை உண்டு.

ரகு அண்ணா ஒரு அப்பாவி அவனுக்கு எங்க சந் தோஷம்தான் முக்கியம். நந்தினி சிறகடிச்சு பறக்க துடிக் கிற ஒரு பறவை. எங்க எல்லாருடைய செல்லம்! துறு துறுன்னு இருப்பா. அதே நேரத்தில் எல்லோரையும்

அப்பாவுக்கு நிறைய கோபம் வரும். அவருக்கு எதிரா ஏதாவது நடந்திட்டா அவரால தாங்கிக்க முடியாது. அன் பிறகு கட்டுப்படுவார். மனசளவில் அவர் ஒரு குழந்தை மாதிரி. இவங்க எல்லாரும் தன்னோட உண்மையான குணத்தை மறைக்க முகமூடி போட்டுகிட்டு இருக்காங்க. அதை கழட்ட வேண்டியது உன்னுடைய பொறுப்பு. இங்கேதான் உன் திறமையே இருக்கு.''

''அருண் ஒரு பெண்ணால் முடியாதது எதுவுமில்லை. இன்னும் கொஞ்சம் நாள்ல நாங்களே பார்த்திருந்தாலும் இப்படி ஒரு நல்ல பெண்ணைப் பார்த்திருக்க மாட்டோம் என்று உங்ககிட்ட சொல்ல வைக்கிறேன்.''

''அப்படிச் சொன்னா அது எனக்குத்தான் பெருமை. இருந்தாலும் நீ கொஞ்சம் ஜாக்கிரதையா நடந்துக்கணும் உத்ரா.''

''ஏன் அருண் உங்களுக்குப் பயமா இருக்கா? இல்லை என்மேல நம்பிக்கை இல்லையா?''

நான் பயத்திலேயோ, இல்லை உன்மேல நம்பிக்கை இல்லாமலோ இல்லை. நீ இங்கே ஜாக்கிரதையா டீல் பண்ண வேண்டியது ஒருத்தரைத்தான்.''

''யாரை? அருண்?''

''வீணா! ரகு அண்ணாவோட மனைவி! கல்யாணம் ஆகி இரண்டு வருடம் ஆகிறது. ஆனா இந்த வீட்ல அவங்க இருந்ததே ஆறு மாசம்தான். மாதத்திற்கு நாலு தடவையாவது அவங்க அம்மா வீட்டிற்குப் போயிடு வாங்க. அப்படி அவங்க திரும்பி வர்ற ராத்திரியெல்லாம் அண்ணனுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் சிவராத்திரி தான்.''



''ஏன்'' என்பது போல் பார்த்தாள் உத்ரா.

''வீணா எங்களோட சொந்த அத்தை பெண்தான். அத்தை சாகும் போது சொந்தம் விட்டுப் போகக்கூடாதுன்னு வம்பு பண்ணி அண்ணா தலையில் கட்டிட்டாங்க. பிடிக்காத கல்யாணத்தை பண்ணிகிட்டதுனாலே அண்ணியோட கோபம் முழுக்க அண்ணன் மேலேயும் எங்க வீட்டு மேலேயும் திரும்பிடுச்சி.''

''மாமாவும் அத்தையும் ஏதும் கேட்க மாட்டாங்களா?''

''அண்ணி பெரியவங்க சின்னவங்கன்னு யாரையும் மதிக்க மாட்டாங்க. அப்பாவை எதிர்த்துப் பேசற முதல் ஆள்; அவங்க பிறந்த வீட்ல வசதியும் அதிகம். அதுவு மில்லாம ஒரே பொண்ணுன்னு செல்லம் கொடுத்து வளர்த்திட்டதனாலே பணத்திமிரும் அதிகம். ஆனா ரகு கிட்டே இப்பவும் யாராவது உன் குடும்ப வாழ்க்கை எப்படியிருக்குன்னு கேட்டால், வேதனையை உள்ளேயே மறைச்சிட்டு ஒரு புன்சிரிப்போட நிறுத்திப்பான். அந்த உணர்ச்சி துடைத்த முகத்தைப் பார்க்கும்போது எவ்வளவு சங்கடமா இருக்கும் தெரியுமா?''

''பாவங்க ரகு அத்தான்! அது சரி நம்ப விஷயம் உங்க அண்ணிக்குத் தெரியுமா அருண்?''

''நான் ஒரு பொண்ணை காதலிக்கிறேன்னு தெரியும். அது நீதான்னு தெரியாது. அனேகமா அவங்க பிறந்தகத் திற்கு போய் இரண்டு நாள் தாண்டியாச்சி. எங்க கணக் குப்படி நாளைக்கு காலையில் ஒரு சின்ன பூகம்பம் இருக்கு.''

''மறுபடியுமா?'' என்று வியந்தாள் உத்ரா.

''அதுக்கு உன்னை இன்னைக்கு நைட்டுக்குள்ளே நான் ... உள்ளே வாம்மா கண்ணு!''

"அய்யே நீங்க தயார் பண்ற லட்சணம்தான் எனக்குத் தெரியுமே" என்று அவள் பழிப்பு காட்டியதும் இருவரும் சிரித்துக் கொண்டே அறைக்குள் சென்றார்கள்.

இரவு அவர்கள் இருவரையும் இன்ப உலகிற்குள் ஆக்ரமித்துக் கொண்டது.



## 3



டைம்பீஸ் உலுக்கிய சப்தத்தில் உறக்கம் கலைந்தாள் உத்ரா. நேரம் காலை ஐந்து என்று கோடிட்டுக் காட்டியது. கடிகாரத்தை தலையில் தட்டி நிறுத்தினாள்.

தன் உடலைச் சுற்றி மாலையாய் படர்ந்திருந்த அருணின் கைகளை விலக்கிவிட்டு, எழுந்து ஆடைகளை சீர்படுத்திக் கொண்டு குளியல் அறையில் புகுந்தாள். ஷவரைத் திறந்து அதன் கீழே நின்றாள், சில்லென்ற தண்ணீர் பூஞ்சிதறலாய் அங்கங்களை நனைக்க ஒருவித சிலிர்ப்பு தோன்றியது. இரவின் நினைவுகள் இனித்தன.

ஒருவழியாய் குளித்து முடித்து புதிய உடையில் ஈரம் சொட்டும் கூந்தலை நுனியில் முடிச்சிட்டுக் கொண்டு பெட்டியில் வைத்திருந்த கற்பகாம்பாள் படத்திற்கு முன் கைகூப்பி சுலோகம் சொல்ல ஆரம்பித்தாள். அதே நேரம் கீழே பூஜையறையில் கத்திக் கொண்டிருந்தார் சபேசன்.

"மரகதம் இங்கே இருந்த டேப் ரிக்கார்டர் எங்கே?"

"எனக்குத் தெரியாதுங்களே. நான் காலையில் இருந்து இந்தப் பக்கம் வரவே இல்லையே. நந்தினி ஏய் நந்தினி



பூஜையறையில் இருந்த டேப்பைக் காணுமாம். நீ பார்த்தியா?"

"அது வந்து..." என்று நந்தினி தயங்க.

"என்ன வந்து போயின்னு இழுத்துக்கிட்டு இருக்கே. சீக்கிரமாச் சொல்லித் தொலையேன்" என்று கத்தினார் சபேசன்.

"வீணா அண்ணியோட ரூமில் இருக்குது!"

"அவ எப்போ இங்கே வந்தா?" என்றார் மரகதம்.

இன்னிக்கு காலையிலதாம்மா, பூஜைக்காக அப்ப யூஸ் பண்ற ஸ்லோக கேசட்டை அண்ணன் ரூமில் இருந்து எடுக்கப் போனப்பதான் அண்ணியைப் பார்த்தேன்."

"என்ன மரகதம் இது அவ ரூமில்தான் பெரிய ஸ்டீரியோ செட் இருக்குதே. அப்புறம் எதுக்கு இதை தூக்கிட்டுப் போகணும்."

"அய்யோ என்ன நீங்க மெதுவா பேசுங்க. அவ காதுல விழுந்திடப் போகுது. நாளும் கிழமையும் அதுவுமா என்னத்துக்கு அவகிட்ட பேச்சு வாங்கிக்கணும். நந்தினி நீ ஸ்லோகம் சொல்லு, அப்பா சாமி கும்பிடட்டும்" என்று முடிப்பதற்குள் கணீரென்ற குரல் அவர்களுடைய காதை வருடியது.

அக்குரலில் இருந்த இனிமையும், நளினமும் சபேசனை வெகுவாய் கவர்ந்திழுத்தது. கண்களை மூடிக் கொண்டு அதை ரசித்தபடியே "யாரது இவ்வளவு திருத்தமா ஸ்லோகம் சொல்றது?" என்றார் மரகதத்திடம்.

"அந்த பொண்ணு உத்ராதான். எவ்வளவு அழகா சொல்றா பாருங்க, பார்வைக்கு ரொம்பவும் நல்லவளா தெரியறாங்க."

"யார் எப்படீன்னு எனக்குத் தெரியும். பார்வையை வைச்சு யாரையும் எடை போடாதே" என்று கடவுளை சேவிக்க கண்களை மூடினார் சபேசன். அந்த பக்தி ததும்பும் குரல் காதில் தேனைப் பாய்ச்சுவது போலிருக்க ஹாலில் கேட்ட பெரும் சப்தம் அந்நேர இனிமையை குலைத்தது.

"நந்தினி!" என்ற ஆங்காரக் குரல் கேட்டு எல்லோரும் ஹாலுக்கு வந்தார்கள்.

நெருப்பைக் கக்கும் கண்களுடன் தலைவிரி கோலமாய் பிசாசைப் போல் வீணா கையில் டேப்புடன் நின்று கொண்டிருந்தாள். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

நந்தினி அவளெதிரில் வந்து "எதுக்கு அண்ணி என்னைக் கூப்பிட்டீங்க?"

"எனக்கு உன்மேல ஆசை பாரு அதான் கொஞ்ச நேரம் கொஞ்சலாம் என்று கூப்பிட்டேன்."

"எதுவாய் இருந்தாலும் சீக்கிரமா முடிச்சிடுங்க. நான் காலேஜுக்குக் கிளம்பணும்." நந்தினியின் துடுக்கான பேச்சு மேலும் அவளை கோபப்படுத்தியது.

"ஏதோ என்னைப் பத்தி உங்க அப்பாக்கிட்ட வத்தி வைச்சியே அது என்னன்னு எனக்கு இப்பத் தெரிஞ்சாகணும்."

"அந்த புத்தி எனக்கில்லை! பூஜையறையில் இருந்த டேப்பை காணமேன்னு கேட்டார், அண்ணியோட ரூம்ல இருக்குன்னு சொன்னேன் அது தப்பா?"

"சொன்னது தப்பு இல்லை. என்னுடைய அனுமதி இல்லாமல் என் ரூமிற்கு நீ வந்ததுதான் தப்பு!"

"நான் உங்க ரூமிற்கு வந்தது தப்புன்னா நீங்க யார் அனுமதியும் இல்லாம பூஜை ரூமிற்கு வந்து டேப் எடுத்ததும் தப்புதானே



"என்ன நீ கொஞ்சம் கூட மரியாதையே இல்லாமல் பேசுறே. நான் உன்னுடைய அண்ணி!"

"அப்படியா இப்படி அடிக்கடி எனக்கு நினைவுபடுத்திக் கொண்டே இருங்க. இல்லேன்னா எனக்கு மட்டுமில்ல, இங்கே எல்லோருக்குமே நீங்க யாருன்னு மறந்துடும்" என்ற நந்தினியை "சும்மாயிரு" என்று அடக்கினார் மரகதம்.

"ஆப்ட்ரால் ஆயிரத்து ஐநூறு ரூபாய் இருக்குமா இந்த டேப் ரிக்கார்டர்? இதுக்குப் போய் இப்படி அலட்டிக்கிறாங்களே, உங்க பொண்ணு பெரியவங்களுக்கு நல்லா மரியாதை செய்யறா" என்று மரகதத்திடம் பாய்ந்தாள்.

"ஏம்மா அதுதான் ஆப்ட்ரால் பொருளாச்சே அதை ஏன் நீ உன் ரூமிற்கு எடுத்துக்கிட்டு போனே?" என்றார், சபேசன்.

"என்னோட ஸ்டீரியோ செட் கெட்டுப் போச்சி. காலையில கொஞ்ச நேரம் பாப் மியூசிக் கேக்கலாமின்னு நெனைச்சித்தான் எடுத்துட்டுப் போனேன்."

சபேசனுக்குத் தலையிலேயே அடித்துக் கொள்ளலாம் போலிருந்தது. திரும்பி மரகதத்தைப் பார்த்தார். காலையில் வம்பு வேண்டாம் என்று அவர் கண்களால் கெஞ்சுவது புரிந்தது.

அதற்குள் ரகு வந்து வீணாவை உள்ளே இழுத்துச் சென்றான். "விடுங்க, விடுங்க என்னை எதுக்கு இப்படி இழுத்துகிட்டு வர்றீங்க" என்று அவனுடைய கைகளை உதறினாள்.

"விடிந்ததும், விடியாததுமா அங்கே என்ன ரகளை பண்ணிகிட்டு இருக்கே?"

"யார் ரகளை பண்ணியது நானா இல்லை உங்க தங்கச்சியா. அவளுக்குப் பரிஞ்சிக்கிட்டு உங்க அப்பா வேற ச்சே காலையில நிம்மதியா ஒரு பாட்டு கூடக் கேட்க முடியலை."

"கடவுளே வந்தாலும் உன்னைத் திருத்தவே முடியாது வீணா!"

"தெரிஞ்சா சரி. அதை விடுங்க உங்க தம்பி நேத்து யாரோ ஒருத்தியை கூட்டிட்டு வந்துட்டாராமே நிஜமாவா?"

"தப்பும்மா! கூட்டிட்டு வரலை. கல்யாணம் செய்திட்டு முறையோடு அழைச்சிட்டு வந்திருக்கான்!"

"சின்ன விஷயத்திற்கே மானம் போச்சு, மரியாதை போச்சுன்னு உங்க அப்பா குதிப்பாரே இப்ப எப்படி உங்க தம்பியையும், அந்த பொண்ணையும் உள்ளே விட்டாராம், எங்கே போச்சு அந்த மானம், ரோஷம் எல்லாம்?"

"வாய்க்கு வந்தபடி பேசாதே வீணா! அப்பாவுக்கு இதுல இஷ்டமேயில்லை. நான்தான் அவரை கன்வின்ஸ் பண்ணியிருக்கேன்."

"மத்த விஷயத்திலே நீங்க எப்படியோ ஆனா இந்த மாதிரி விஷயத்திலே முதல் ஆளா நிப்பீங்களே" என்று பல்லைக் கடித்தாள்.

"சே! உங்கிட்ட பேசிகிட்டு இருந்தா நான் ஆபீஸ் போனா மாதிரிதான்" என்று டவலை எடுத்துக் கொண்டு, நடக்க,

"பொண்டாட்டி மனசறிஞ்சி நடக்கத் துப்பில்லை பேச முடியாம ஓடறதைப் பாரு!"

குளியலறை நோக்கிச் சென்றவன் ஒரு கணம் திரும்பி அவளை உறுத்துப் பார்த்தான் ரகு. "உன் மனசை தொட்டுச் சொல்லு வீணா. நான் உன் மனசறிஞ்சு நடக்கலைன்னு.



இந்த இரண்டு வருஷத்திலே உன் அனுமதியில்லாமல் உன்னைத் தொட்டது கூடக் கிடையாது. நினைவு வைத்துக் கொள்."

"இன்னும் இருபது வருஷம் ஆனாலும் சரி என் இஷ்டப்படி இந்த வீட்டை விட்டுப் பிரிஞ்சு வராம என்னைத் தொட விடமாட்டேன்."

"இந்த வீட்டு மனுஷங்க மேலே உனக்கு என்ன குரோதம்? ஒரு வேலை செய்ய விடாம மகாராணி போல எங்கம்மா உன்னைப் பார்த்துக்கலையா? என்ன குறைச்சல் வீணா உனக்கு இங்கே? பிரிஞ்சுதான் போகணுமின்னு ஏன் குதிக்கிறே?"

"மறந்து விட்டதா ரகு. அமெரிக்காவில் போய் வாழணுமிங்கிற என்னோட கனவை கலைச்சது என்னைப் பெத்தவங்க! அதுக்கு உடந்தையா இருந்தது நீங்களும், உங்க குடும்பமும்தான். நம்ம கல்யாணம் ஒண்ணும், சொர்க்கத்திலே நிச்சயிக்கப்படலை. இரண்டு கல்லறைகள் மேல நிச்சயிக்கப்பட்டது ஒண்ணு எங்கம்மாவோடது, இன்னொன்று என் லட்சியம்" ஆக்ரோஷமாய் கத்தியவளை அமைதியாய் நோக்கிவிட்டுப் பேசாது சென்று விட்டான் ரகு.

தலையணையில் முகம் புதைத்தாள் வீணா. மனம் பின்னோக்கிச் சென்றது.

## 4

இயல்பிலேயே கலகலப்பான சுபாவம் கொண்டவள் வீணா. ஒரே பெண் என்பதால் செல்லமாய் வளர்ந்தவள்.

சிறு வயது முதலே நினைத்ததை அடைய முயன்ற பிடிவாத குணமும் வளர வளர அவளுடன் போட்டி போட்டுக் கொண்டு உடன் வளர்ந்தது.

''உங்களைப் போல அப்படியே பிடிவாதம்'' என்று கணவரிடம் அடிக்கடி சொல்லுவார் வீணாவின் தாயான மீனாட்சி.

மகளை இழுத்து அணைத்துக் கொண்டு ''என் பொண்ணுடி'' என பெருமையாய் புஷ்பலிங்கம் மார் தட்டுவார்.

''பெண் பிள்ளைக்குப் பிடிவாதம் தாங்க சத்ரு! நாளைக்கு போற இடத்திலே பிள்ளையை எப்படி வளர்த்திருக்கா பாருன்னு என்னைத்தான் குறை சொல்லுவாங்க. உங்களை இல்லை!''

''என்ன மீனாட்சி அதுக்கு இன்னும் எவ்வளவு நாள் இருக்கு வீணா குழந்தைம்மா!''

''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதுன்னு ஒரு பழமொழி உண்டு. இப்ப செல்லம் கொடுத்திட்டு அப்புறம் கஷ்டப்படாதீங்க. நான் சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன். இனி நீங்களாச்சி உங்க அருமை பொண்ணாச்சு. எனக்கென்ன?''

அவ்வப்போது கண்டித்தாலும் மகளுக்கு எக்குறையும் வைக்கவில்லை. மீனாட்சி அம்மாள். வீட்டில் அவள் வைத்ததுதான் சட்டமாக இருந்தது.

ஆட்டமும் பாட்டுமாய் சீராக ஓடிக் கொண்டிருந்த அவர்களின் குடும்ப வண்டி வீணாவின் 18-வது வயதில் தடம் புரண்டது. மீனாட்சி உடல்நிலை மோசமாக படுக்கையிலேயே இரண்டு வருடங்களைக்



மனைவி, மகள் மேல் ஒரு சிறு துரும்பு கூட படவிடாமல் பாதுகாத்தவர் மனைவி படுத்த படுக்கையானதும் மிகவும் மனமுடைந்தார். தாயை கவனிக்கும் பணியை விரும்பிச் செய்யாத பாசமில்லாத மகளைக் காணவும் மீனாட்சி சொன்னாற் போல் மகளைத் தானே செல்லம் கொடுத்துக் கெடுத்து விட்டோமோ என்று அவருடைய கலக்கம் மேலும் அதிகரித்தது.

ஒரு மாலை வேளையில் சாத்துக்குடி பழத்தை ரசமாக்கி மனைவியிடம் கொடுத்துவிட்டு மெல்லப் பேச்சை ஆரம்பித்தார். ''மீனாட்சி நம்ம வீணாவுக்குக் கல்யாண ஏற்பாடு பண்ணலாம் என்று நினைக்கிறேன்.''

''நானே உங்ககிட்டே இதைப்பத்தி பேசணுமின்னு இருந்தேன். மாப்பிள்ளை யாருங்க?'' மீனாட்சி தன் ஒன்று விட்ட அண்ணன் சபேசனின் மகனை மருமகனாக்கி கொள்ளும் எண்ணம் மனதில் இருந்தது. இருப்பினும், பொருளாதாரத்தில் தங்களைவிட ஒரு படி கீழே இருப்பதால் கணவர் கோபிப்பாரோ என்று அஞ்சி அமைதி காத்தார்.

''எல்லாம் உனக்குத் தெரிந்த பிள்ளைதான். உன் அண்ணன் சபேசனின் மகன் ரகு.''

மீனாட்சியம்மாளின் முகம் பூவாய் மலர்ந்தது. புஷ்பலிங்கம் மனைவியையே உற்றுப் பார்த்தார். முன்பெல்லாம் மீனாட்சி சிரிக்கும்போது லட்சுமி கடாட்சமாக இருக்கும். இப்போது கழுத்து எலும்புகள் துறுத்திக் கொண்டிருந்த நிலையில் அவர் சிரிக்கவே கஷ்டப்பட மனம் பாறையாய் கனத்தது புஷ்பலிங்கத்திற்கு.

''நானும் அவனையே தாங்க நினைச்சேன். ஆனா [illegible] வசதி குறைவாச்சே.''

''வசதி குறைவானா என்னம்மா? பையன் சுத்த தங்கம். வீணாவை நல்லா பார்த்துப்பான்னு நம்பிக்கை இருக்கு. அதுவுமில்லாம உன் மனசு எனக்குத் தெரியாதா?'' மீனாட்சி கணவனின் கைகளை அன்புடன் பற்றினார்.

''என்னங்க நான் கண்ணை மூடறதுக்குள்ளே வீணா வோட கல்யாணத்தை கண் குளிரப் பார்த்துடணுங்க.''

''அப்படியெல்லாம் பேசக்கூடாது தெரியுதா, வீணா வோட குழந்தைக்கு கல்யாணம் ஆகிற வரைக்கும் நீ இருக்கத்தான் போறே.'' என்றவரின் குரலும் நம்பிக்கை யின் தொனி சற்று குறைந்துதான் இருந்தது.

டாக்டர்கள் கைவிரித்த நிலையில் நாளுக்கு நாள் மீனாட்சியின் உடல்நிலை மோசமாகிக் கொண்டே வர, மனைவியின் கடைசி ஆசையை நிறைவேற்றும் வேகத் தில் மகளிடம் கூற அவள் வானத்திற்கும், பூமிக்குமாய் குதித்தாள்.

''எனக்குக் கல்யாணம் தேவையில்லை. நான் மேல் படிப்பிற்காக அமெரிக்காவிற்குப் போகிறேன். அங்கேயே நிரந்தரமாய் தங்கப் போகிறேன்'' என ஆணித்தரமாய் கூறியவளை அதிர்ச்சியாய் பார்த்தார் புஷ்பலிங்கம்.

''வீணா! நீ குழந்தை இல்லை, படித்த பெண்! நல்லது கெட்டது எதுன்னு தெரியும். உங்கம்மாவுடைய கடைசி ஆசையை நிறைவேத்தும்மா'' என்று கெஞ்சினார் தந்தை.

''முடியாதுப்பா அம்மா மேல எனக்குப் பாசம் இருக்கு. ஆனா அதுக்காக என் வாழ்க்கையை என்னால அழிச்சிக்க முடியாது.''

''ஏம்மா உனக்கு ரகுவைப் பிடிக்கலையா? வேற பையனைப் பார்க்கட்டுமா...



''பிரச்சினை ரகு இல்லை. கல்யாணம்தான்! அது என் லட்சியத்திற்கு இடைஞ்சல்'' என அவள் பிடிவாதமாய் மறுக்கவும் புஷ்பலிங்கத்திற்கு சினம் எட்டிப் பார்த்தது.

''கிளிப்பிள்ளைக்கு சொல்றா மாதிரி சொல்லிகிட்டு இருக்கேன். ரொம்ப ஓவரா பேசுறீயே. அவ்வளவு பிடி வாதமா? நான் உனக்கு அப்பன் நினைவிருக்கட்டும். கடைசி முறையாக் கேட்கிறேன். ரகுவை கல்யாணம் செய்து உங்கம்மாவின் ஆசையை நிறைவேற்றப் போறியா இல்லையா?''

''நானும் கடைசியா சொல்றேன் என்னால முடியாது.''

''அப்படின்னா இதையும் கேட்டுக்கோ. நான் சொல்றா மாதிரி நீ நடக்கலைன்னா இந்தச் சொத்துல சல்லி பைசா உனக்கு கிடைக்காது. பணம் இல்லாம நீ எப்படி அமெரிக் காவிற்குப் போறேன்னு பார்த்துடறேன். உனக்கு இன்னும் இரண்டு நாள் டயம் தர்றேன். அதுக்குள்ளே ஒரு முடிவு சொல்லு'' புஷ்பலிங்கம் போய் விட்டார், விக்கித்து நின்றாள் வீணா.

பணம் இல்லாமல் நிச்சயமாய் வீணாவால் வாழ முடி யாது. ஏஸி இல்லாமல் ஒரு நிமிடம் கூட அவளால் இருக்க முடியாது. என்ன செய்வது என்ற யோசனையில் மனம் நிலையில்லாமல் தவித்தது.

''என்னங்க, ஒரு மாதிரியா இருக்கீங்க உடம்பு ஏதும் சரியில்லை?''

''உடம்பிற்கு என்ன குறைச்சல் மனசுதான் சரியில்லை மீனாட்சி.''

''வீணா ஏதாவது சொன்னாளா?''

"இரண்டு நாள்ள யோசிச்சு முடிவு சொல்றதா சொல்லி இருக்கா." மகளுடன் தனக்கு ஏற்பட்ட வாக்குவாதத்தை மனைவியிடம் பகிர்ந்து கொள்ள அவர் விரும்பவில்லை.

"ஏங்க அவளை ரொம்பவும் வற்புறுத்த வேண்டாமே, ஏன்னா இது கல்யாண விஷயம். அவ விருப்பமும் முக்கியம்."

"இல்லே மீனாட்சி உன்னுடைய விருப்பத்தை மட்டும் அவ மேல திணிக்கலை அவளுடைய பழக்க வழக்கங்கள் கொஞ்ச நாளாவே சரியில்லை. இப்ப நம்ம நல்லவழி காட்டலைன்னா அவ பாதை மாறி போறது நிச்சயம். அதனாலதான் நான் அவ்வளவு கண்டிப்பு காட்டினேன்."

அந்நேரம் கதவைத் தட்டிவிட்டு அறைக்குள் நுழைந்தாள் வீணா, நேரே அம்மாவிடம் சென்று "இப்ப உடம்பு எப்படிம்மா இருக்கு?" என்றாள் கரிசனமாய்.

"நீ வந்து கேட்டதே மனசு நிறைஞ்சிடுச்சு வீணா சாப்பிட்டியா?"

"ம்... இப்பத்தான் பத்து நிமிஷம் ஆச்சு..." மகள் எதற்கோ தயங்கியது அந்த தாயுள்ளத்திற்கு புரிந்தது. "என்னம்மா என்ன விஷயம் தயங்காம சொல்லு?" என்றார்.

"அம்மா... என் கல்யாண விஷயம் பத்தி அப்பா என்கிட்ட பேசினார். எனக்கு..." அவள் யோசித்த அந்த அரை வினாடி புஷ்பலிங்கத்திற்கு ஒரு யுகம் போல் தோன்றியது. அவள் வாயிலிருந்து சம்மதம் என்ற ஒரு வார்த்தை வந்து விழுந்ததும் ஓடிச் சென்று மகளுடைய கைகளைப் பற்றிக் கொண்டார். "அப்பா உன் நல்லதுக்கு தாம்மா எல்லாம் செய்வேன். சொத்து முழுவதும் உன் பேருக்கே எழுதி வைச்சிடறேன். கல்யாணத்திற்குப்



பிறகு ரகு சம்மதிச்சா நீ அவனோட அமெரிக்காவிற்குப் போகலாம்."

அவள் பதிலேதும் சொல்லவில்லை பெயரளவிற்குத் தானே திருமணம்! சொத்துக்கள் கைக்கு வரட்டும்! அமெரிக்காவிற்குப் பறந்து விடலாம் என்று மனக் கோட்டை கட்டியிருந்தாள். ஆனால் நடப்பது வேறாக அல்லவா இருக்கிறது விதியை வெல்ல யாரால் இயலும்?

மீனாட்சியின் உடல்நிலை காரணமாக விரைவிலேயே திருமண ஏற்பாடுகள் நடந்தன. திருமண நாளும் வந்தது வெகு விமரிசையாய் நடக்க வேண்டிய திருமணம் மிக எளிமையாய் நடந்தது. அந்த வீட்டையே கல்யாண மண்டபமாய் மாற்றியிருந்தார் புஷ்பலிங்கம். அன்று இரவே மீனாட்சி மூச்சுவிடக் கூட சிரமப்பட்டார். டாக்டர் அருகிலேயே காவல் வைக்கப்பட்டார். நிலைமையறிந்து மற்ற சடங்குகள் எல்லாம் நம் வீட்டுக்கு வந்ததும் வைத்துக் கொள்ளலாம் என்ற நிலையில் ரகுவை மட்டும் அங்கிருக்கச் சொன்னார் சபேசன்.

மருத்துவர்கள் தீவிர சிகிச்சை மேற்கொண்ட போதிலும் இரண்டாம் நாள் மாலை ஏழு மணியளவில் மீனாட்சி நீளாத் துயில் எய்தி விட்டார். பெண்ணை மணக் கோலத்தில் பார்க்க வேண்டுமென்பதற்காகவே உயிரை கையில் பிடித்து வைத்திருந்தார் போலும். விருப்பம் நிறைவேறியதில் நிம்மதியான சாவு.

தமக்கை இழந்த சோகம் பெரிதாய் தாக்கியபோதும் மைத்துனருக்கு ஆறுதல் சொல்லும் பணியில் ஈடுபட்டார் சபேசன். கல்லாய் இறுகி இருந்தாள் வீணா. மரகதம் மாளின் ஆறுதல் பேச்சுக்கள் அவள் காதில் விழுந்ததா என்பதே சந்தேகம்தான். ஈமக்கிரியைகள் முடிவுற்றதும்

நல்ல நாள் பார்த்து புகுந்த வீட்டிற்கு புறப்பட்டாள் வீணா. கண்ணீரோடு மகளுக்கு விடை கொடுத்தார், புஷ்பலிங்கம்.

வீட்டிலும் அவள் அமைதியாகவே இருந்தாள். யாரிடமும் பேசுவதில்லை. மரகதம் வருந்தி அழைத்த பிறகு தான் சாப்பிடவே வருவாள். அறைக்கதவை திறப்பதும் இல்லை. இரவிலோ தடிமனான ஆங்கில புத்தகத்திலே மூழ்கி இருந்தபடியே தூங்குவதாய் பாவனை செய்வாள், ரகுவும் அதை உண்மையென்று நம்பி பாவம் தாயை இழந்த சோகத்தில் இருந்து இன்னும் மீளவில்லை என்று ஒதுங்கியே இருந்தான்.

ஒரு வாரம் இந்த கண்ணாமூச்சு ஆட்டம் தொடர்ந்தது. பெரியோர்களாய் பார்த்து சாந்தி கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தனர். அன்று காலையிலேயே வீணா வெளியே போயிருந்தாள்.

''என்ன மரகதம் இன்னைக்கு எங்கேயும் போகக் கூடாதுன்னு தெரியாதா. அவதான் சின்ன பொண்ணு நீயாவது சொல்லக்கூடாதா?''

''நான்தான் சொன்னேனேங்க! அவ போனதே எனக்குத் தெரியாதே!'' கைகளை பிசைந்தாள் மரகதம்.

இங்கே சபேசன் கத்திக் கொண்டிருக்க அதே சமயம் ஆட்டோவிலிருந்து ஆக்ரோஷமாய் இறங்கி தந்தையின் வீட்டிற்குள் நுழைந்தாள் வீணா.



## 5



**சோ**பாவில் நாளிதழ் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்த புஷ்பலிங்கம் மகளைப் பார்த்ததும் ஆனந்த



பரவசமுற்றார். ''வாம்மா வா மாப்பிள்ளை வரலியா தனியாகவா வந்திருக்கே?'' என்றவரின் கண்கள் மகளைத் தாண்டி வாசலில் மேய்ந்தது.

''நான் இப்ப அங்கேர்ந்து வரலை. அட்வகேட் தயாளன் வீட்டிலிருந்து வரேன் ஏமாத்திட்டீங்களேப்பா!''

''ஏமாத்திட்டேனா நானா என்னம்மா சொல்றே?''

''கல்யாணத்திற்கு பிறகு சொத்தை என் பேருக்கு மாத்தித் தரதா என்கிட்டே வாக்கு கொடுத்திருந்தீங்க. ஆனா இப்போ ரகுவுக்கும் சேர்த்து எழுதியிருக்கீங்களே.''

''இதுல தப்பு என்னம்மா இருக்கு. நீயும், ரகுவும் கணவன் மனைவி. தம்பதிகள் பேர்ல சொத்து எழுதி வைக்கிறது ஒண்ணும் தப்பு இல்லையே!''

''நீங்க தொடர்ந்து புரியாத மாதிரியே பேசுறீங்களே. சொத்தை என் பேர்ல எழுதி வைப்பீங்கன்னு நம்பித்தான் நான் இந்தக் கல்யாணத்தை...'' சட்டென நாக்கைக் கடித்தாள். புஷ்பலிங்கம் உஷாரானார்.

''அவ்வளவு சட்டமா கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்ன பொண்ணு திடீரென்று கல்யாணத்திற்கு எப்படி ஒத்துக்கிட்டேன்னு நான் அப்பவே சந்தேகப்பட்டேன். இப்ப உன் வாய் மொழி மூலமாகவே அது தீர்ந்தும் போச்சு. வீணா! உன் புகுந்த வீடு இருக்கே, ரொம்ப நல்ல குடும்பம். எங்கே அதை நீ பிரிச்சிடப் போறியோன்னு பயந்துதான் சொத்தை உன் பேருக்கும், ரகு பேருக்கும் சேர்த்து எழுதி வைச்சேன். இதை அனுபவிக்க உங்களுக்கு உரிமையுண்டு. ஆனா விக்கிறதுக்கு எந்த உரிமையும் இல்லை.''

மௌனமாய் தரையை வெறித்தாள் வீணா. புஷ்பலிங்கம் மகளின் தலையை ஆதரவாய் தடவிக் கொடுத்தார்.

''வீணா, அனாவசியமாய் ஆத்திரப்பட்டு கிடைச்ச நல்ல வாழ்க்கையை வீணடிச்சிக்காதே. ஒரு குடும்பத்திலே எல்லோரும் நல்லவங்களா இருக்கிறது இல்லை. ஆனா உன் புகுந்த வீட்டு மனுஷங்க எல்லாருமே நல்லவங்க. அவங்க மனசு கோணாம நடந்துக்கம்மா.''

''எம்பா நான் இங்கு வந்து போகலாம். இல்லே. அதுக்கு உங்க உயில் ஒண்ணும் தடை சொல்லாதே.''

பெருமூச்சுடன், ''நான் செய்வது உன் நல்லதிற்கு என்று உனக்கு பின்னால் புரியும். நீ எப்ப வேணா இங்கே வந்து போகலாம்மா.''

''ஆமா வந்து... போக வேண்டியதுதான்!'' பல்லைக் கடித்தபடி படியிறங்கினாள் வீணா! வெளியேறும் மகளை கவலையோடு பார்த்தார் புஷ்பலிங்கம். அவசரப்பட்டு இவளை அந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டோமோ என்று முதன் முறையாய் தனக்குள்ளேயே கேள்வி கேட்டுக் கொண்டார்.

தொடர் தோல்விகளால் அவளுக்கு வெறியே வந்து விட்டது. யார் அகப்பட்டாலும் கடித்துக் குதறும் வேகத்துடன் வீட்டிற்குள் நுழைந்தாள். வீணா எதிரே மாட்டியவர் மரகதம்மாள் பாவம் அவர் கெட்ட நேரம்.

''என்னம்மா இது வெளியே போறதா இருந்தா ஒரு வார்த்தை சொல்லிட்டு போகக் கூடாதா, மாமா எவ்வளவு கோபப்பட்டார் தெரியுமா?'' பொறுமையாகத்தான் கேட்டார் மரகதம்.

அவ்வளவுதான் எரிமலையாய் வெடித்தாள் வீணா. ''ஏன் நான் எங்கே போனாலும், வந்தாலும் உங்க எல்லார் கிட்டேயும் சொல்லிட்டுத்தான் போகணுமா. எங்கப்பா வீட்டுக்கு போகக்கூட நான் பர்மிஷன் கேட்டுத்தான் ஆகணுமா?''



''எம்மா இப்ப என்ன கேட்டுட்டோம் என்று இப்படி கத்துறே?'' என்ற கேள்வியோடு அறையை விட்டு வெளியே வந்தார் சபேசன்.

''யார் கத்துறா நானா இல்லை நீங்களா?'' வெடுக்கென அவள் கேட்கவும் கோபம் எல்லை மீறியது சபேசனுக்கு.

''ஏய் மரியாதை கொடுத்து மரியாதை வாங்க கத்துக்க.''

''அதே வார்த்தையை நானும் திருப்பிச் சொல்லலாம் இல்லே. என்னை யாரும் கேள்வி கேட்டா எனக்குப் புடிக்காது. அப்படியே வாழ்ந்து பழக்கப்பட்டவ நான்.''

''அது உங்க வீடு! வாழ வந்த இடத்திலே வாலைச் சுருட்டி கிட்டுத்தான் இருக்கணும். அப்பத்தான் மதிப்பு.''

''எனக்கு அந்த அவசியம் இல்லை. நான் யாருக்கும் இதுவரையில் அடிமையானதும் கிடையாது. தாலி விழுந்த ஒரே காரணத்துக்காக என் குணத்தை என்னால் மாத்திக்க முடியாது.''

அவள் எடுத்தெறிந்து பேசுவதைப் பார்த்தால் பிரச்சினை பெரிசாகி விடுமோ என்று பயந்த மரகதம் ''விடுங்க அவ சின்ன பொண்ணு ஏதோ தெரியாம பேசிட்டா நீங்களும் அவளுக்கு சரிசமமா பேசிகிட்டு இருந்தா என்ன அர்த்தம்? தயவு செய்து உள்ளே வாங்க'' என்று கணவரை சமாதானப்படுத்த முனைந்தார். வீணா தன் முதல் வெற்றியை நினைத்து குரூர உணர்வுகளால் சிரித்தாள்.

சாந்தி முகூர்த்தத்திற்கு என அறை சோடனை செய்யப்பட்டு இருந்தது. ரகு உள்ளே சென்று பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகி விட்டது. மரகதம்மாளிற்கு இருப்பு

கொள்ளவில்லை. மெதுவாய் வீணா இருந்த தனி அறைக் கதவைத் தட்டினார். நான்கு பலத்த தட்டலுக்குப் பிறகு வெளியே வந்தாள் வீணா.

"என்ன வேணும்?" அதட்டலாய் வெளிவந்தது அவள் குரல்.

"அது வந்து... நான்தான் காலையிலேயே சொன்னே னேம்மா. இன்னைக்கு உங்களுக்கு சாந்தி கல்யாணம் என்று."

"சாந்தி கல்யாணம் யாருக்கு?" விரல் நகங்களை அழகு பார்த்தபடியே ஏளனமாக கேட்டாள்.

"என்னம்மா இப்படி கேக்குற உனக்கும், ரகுவிற்கும் தான் போய் அலங்காரம் செய்து கொள்."

"ம்... எல்லாம் இதுவே போதும்" என அவர் கையி லிருந்த பால் சொம்பை பிடுங்கிக் கொண்டு ரகு இருந்த அறைக்குச் சென்றாள். கட்டிலில் வேட்டி சட்டையோடு அமர்ந்திருந்தவன் கதவு திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவளை கை பிடித்து கட்டிலுக்கு அழைத்துச் சென்றான்.

"என் வீணா அமைதியா இருக்கே. ஏதாவது பேசேன்?" பாவம் காலையில அவள் பேசியது எதையும் ரகு கேட்டிருக்காததால் அவன் வாயிலிருந்து காதலுடன் வந்து விழுந்தன வார்த்தைகள். அவள் மௌனம் காத்தாள்.

வெட்கப்படுகிறாள் என்று நினைத்து மெல்ல அவள் தோளைத் தொட்டான். அவள் முகம் உணர்ச்சிகளை துடைத்து விட்டிருந்தது. "எதுதான் என் விருப்பத்தோட நடந்தது இது நடக்க?" என்றாள் மெதுவாய். தீயை மிதித்தாற்போல் இருந்தது ரகுவிற்கு.



"என்ன சொல்றே? அப்ப இந்தக் கல்யாணத்திலே உனக்கு இஷ்டமேயில்லையா?"

"ரொம்ப லேட்! இந்தக் கேள்வியை என்னைப் பெண் பார்க்க வந்தப்ப கேட்டு இருக்கலாம் இல்லை? கல்யாணத் திற்கு ஒரு நாள் முன்னாடியாவது கேட்டு இருக்கலாம். அதை விட்டுட்டு இப்ப கேக்குறீங்களே. சரி சொல்றேன். இந்தக் கல்யாணத்திலே எனக்கு ஒரு சதவீதம் கூட விருப்பம் இல்லை.

என்ன ரகு அப்படியே திகைச்சுப் போயிட்டீங்க. என்னடா பர்ஸ்ட் நைட்ல போய் இவ இந்த மாதிரி பேசறா ளேன்னு பார்க்குறீங்களா. இது என்னுடைய குணம் மாத்திக்க முடியாது. எனக்காக நீங்கதான் மாறணும்."

"வீணா...!"

"ச்சு! கத்தி எந்த பிரயோசனமும் இல்லை. இந்த இரவு இன்பமாகறதும், துன்பமாகறதும் உங்க முடிவுலதான் இருக்கு!"

"எனக்குப் புரியலை!"

"புரியும்! புரியும்படியாவே சொல்றேன் ரகு. நீங்க என்னைத் தொடலாம். தாராளமா அதுக்கு நான் தடை சொல்லலை. ஆனா ஒரே ஒரு கண்டிஷன் மட்டும் போடறேன்."

"என்னது?" இப்போது அவன் குரலில் சற்று எரிச்சல் கூடியிருந்தது.

"என்னை உங்களுக்குத் தரத் தயாரா இருக்கேன். ஆனா அதுக்கு பதிலா நீங்க இந்தக் குடும்பத்தை விட்டு என் கூட தனியா வந்துடணும். இது சம்மதம் என்றால் நான் ஒன்றும் தடை சொல்லப் போவதில்லை" என

கட்டிலின் மேல் சாய்வாய் அமர்ந்து கொண்டு அவனைப் பார்த்தாள்.

"தாம்பத்தியம்கிறது பண்டமாற்று முறையில்லை வீணா. இதை கொடுத்தா அதைத் தர்றேன்னு சொல்றதுக்கு! நான் உனக்கு தாலிகட்டியிருக்கிறேன். அதனால மனைவியா நடந்துதான் ஆகணுமின்னு உன்னைக் கட்டாயப்படுத்த என்னால முடியும்."

அவள் நிமிர்ந்து பார்க்கவும், "என்ன பார்க்கிறே? ஆனா கட்டின மனைவியா இருந்தாலும் அவ அனுமதியில்லாம தொடறது ஒரு ஆண் பிள்ளைக்கு அழகில்லை. நீ உன் மனசை மாத்திக்கிற வரை அதாவது இந்த குடும்பத்தோட சேர்ந்து வாழ ஆசைப்படறேன்னு நீயா சொல்றவரை நான் உன்னைத் தொடப் போவது இல்லை!"

"ம்கூம்... பரவாயில்லே! கல்யாணத்துக்குச் சம்மதமான்னு என்னைக் கேட்கலை. அதே போல இதுலேயும் நடந்துப்பீங்கன்னு எதிர்பார்த்தேன். அந்த மட்டும் என் அனுமதி கேட்டதுக்கு ரொம்ப நன்றி. எனக்கு தூக்கம் வருது குட்நைட்! ஓ! ஸாரி! இனி எங்கே உங்களுக்கு நல்ல ராத்திரி கிடைக்கப் போகுது?" ஏளனமாய் சிரித்தபடியே உறங்கிப் போனாள் அவள்.


உறங்கும் அவளையே உறக்கம் தொலைத்த விழிகளோடு பார்த்தான் ரகு. இந்த குழந்தைத்தனமான முகத்திலா இத்தனை கொடூரம் வெளிப்பட்டது. என ஆச்சரியமாய் இருந்தது. அவள் ஆழ்ந்த நித்திரையில் வெளியிடும் மூச்சுக்காற்று அங்க அசைவுகளை இன்னும் வெளிக் காட்டத் தடுமாறினான் ரகு.

சிரமப்பட்டு மனதை கட்டுப்படுத்தி கண்களை வேறு




குளியலறைக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு பழைய நினைவுகளில் இருந்து திரும்பினாள். ரகு அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவள் விஷயத்தில் அன்று மூடிய அவன் கண்கள் இன்று வரை திறக்கவேயில்லை. ரகுவின் அலட்சியம் வீணாவை மேலும் கிளறியது.

கட்டிலில் இருந்தபடியே அவள் மனம் கணக்கு போட ஆரம்பித்தது. என்ன ஆர்ப்பாட்டம் செய்தாலும் இவங்களைப் பிரிக்க முடியலையே. இப்போது வந்திருப்பவளை நாம கூட்டு சேர்த்துக் கொண்டால் என் வாழ்க்கையை நாசமாக்கியவர்களை கஷ்டப்படுத்தலாமே! மனதிற்குள் வகுத்துக் கொண்ட வியூகத்தை செயல்படுத்த நேரம் பார்த்துக் கொண்டு இருந்தாள் வீணா.



# 6



உத்ரா காலை சிற்றுண்டி தயாரித்துக் கொண்டு இருந்தாள். "டியர் நான் ஆபீஸிற்குக் கிளம்பிட்டேன். நீ என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?"

"உங்களுக்கு டிபனும், லஞ்சும் தயார் செய்துகிட்டு இருந்தேன். சாப்பிட்டு, கேரியர் எடுத்துட்டு கிளம்புங்க."

"ஏய் என்ன உன்கிட்டே இன்னைக்கு ஒரு சேஞ்ச் தெரியுது, என்னது?" என்ற அவன் "கன்னம் இரண்டும் சிவந்து போயிருக்கு என் முகத்தைப் பார்த்தே பேசமாட்டேங்கிற என்ன விஷயம்?" என அவள் மோவாயைப் பிடித்து அவன் முகத்திற்கு நேரே தூக்க, "விடுங்க!" என்று வெட்கத்துடன் மார்பில் சரிந்தாள் உத்ரா.

''என்னப்பா விடுங்கன்னு என்னைச் சொல்லிட்டு எம்மேலேயே சாய்ந்துகிட்டா என்ன அர்த்தம்?''

''ச்சீ...''

''அய்யோ நீ கூட வெட்கப்படறீயே? முதல்ல, இதை நான் எல்லோர் கிட்டேயும் சொல்லணுமே!''

''அருண் ப்ளீஸ்...''

''அப்போ நிமிர்ந்து என்னைப் பாரு டார்லிங்!''

''சும்மா இருங்க அருண்! எப்பவுமே உங்களுக்கு விளையாட்டுதான். சாப்பிட வாங்க!''

''ஆமா சாப்பிடக் கூப்பிடறீயே எல்லாம் ரெடியா இருக்கா?''

''இட்லி பண்ணியிருக்கேன் தொட்டுக்க சட்னி, சாம்பார், பொடியெல்லாம் இருக்கு. வேறென்ன வேணும்.''

''வேறென்ன வேணுமா கடவுளே! புதுசா கல்யாணம் ஆன பொண்ணு மாதிரியா பேசுறே நீ, பத்து புள்ள பெத்த கிழவி மாதிரியில்ல பேசுறே. புருஷனை சாப்பிடக் கூப்பிடறப்போ எப்படி கூப்பிடணும் தெரியுமா?''

''எப்படி?''

''கண்ணில் ஒரு போதையோடு, உதட்டில் வெட்கச் சுழிப்போட வாங்க்த்தான்னு கூப்பிடணும். நீயென்னடான்னா ஏதோ கடன்காரனுக்குச் சாப்பாடு போடறா மாதிரி புடவைத் தூக்கி இடுப்பில சொருகிகிட்டு இதெல்லாம் நல்லாவா யிருக்கு. ஆமா ஏன் என்னை அப்படி பாக்குறே.''

''இல்லை ஒவரா பேசும் புருஷனோட வாயை எப்படி அடைக்கலாமின்னு பாக்குறேன்.''



''அதுக்கு ஒரே வழிதான் இருக்கு. சொன்னா செய்வியா டார்லிங்.''

''என்னது?''

''என் வாயை பூட்டுப் போடற சக்தி உன்னுடைய உதடுகளுக்குத்தான் இருக்கு'' என தன் விரலால் அவளுடைய இதழை வருடினான் அருண்.

''அடி ராஸ்கல் காலையில என்னைத் தொடறதுக்கு இந்த நிமிடத்திலிருந்து 144 போடறேன் ஒழுங்கா வந்து சாப்பிடுங்க'' என்று அவன் காதை திருகி அழைத்துப் போனவள்,

சுடச்சுட இட்லியும், சட்னியும் தட்டில் பரிமாறினாள். ''ஏன் உத்ரா நீ என்னைக்கு ஆபீஸிற்கு கிளம்பப் போறே?''

''நான் இனிமே ஆபீஸிற்குப் போகப் போறதில்லை. என் வேலையை ராஜினாமா பண்ணிடலாம்னு இருக்கேன். இதை என் ஆபீஸ் மானேஜர்கிட்டே கொடுத்திடுங்க!'' என்று ஒரு கவரை நீட்டினாள்.

அக்கவரை வாங்கி பாக்கெட்டிற்குள் திணித்துக் கொண்டான் அருண். ''உத்ரா வீட்டில் இருந்தா உனக்கு போர் அடிக்குமே, இங்கே உன்கிட்டே முகம் கொடுத்துகூட பேசமாட்டாங்களே!''

''அப்படியே நானும் இருந்திட முடியுமாங்க. அப்புறம் என்னுடைய சபதம் என்னாகிறது? அதுவும் இல்லாம நானும் ஒரு பையை தோளில் மாட்டிகிட்டு ஆபீஸிற்கு கிளம்பிட்டா இவங்க கூடப் பழகற வாய்ப்பும் குறைஞ்சிடும். நான் வீட்டிலே இருந்தா அடிக்கடி என்னைப் பார்க்கும்போது அய்யோ இந்த பெண்ணை இப்படி தள்ளி வைச்சிருக்கோமே அப்படீன்கிற நினைப்பும் அவங்களுக்கு வரும். இதெல்லாம் எனக்கு ப்ளஸ்தானே.

என்னைப் பொறுத்த வரைக்கும் அத்தையை என் பக்கம் இழுக்க எனக்கு ரொம்ப நாள் ஆகாதுன்னு தான் தோணுது.''

''அதெப்படி அம்மாவை அவ்வளவு சுலபமா மாத்த முடியும்?'' என்று ஆவலோடு கேட்டான் அருண்.

''எல்லாத்தையும் இப்பவே சொல்லிட்டா சுவாரஸ்யம் குறைச்சிடும் அதனால் அப்புறம்'' அவனை முன்னிற்கு இழுத்து நெற்றியில் இதழ் பதித்தாள்.

''நீயே தடை உத்தரவை மீறிட்டே ஆனால், என் அருமை பொண்டாட்டியே இப்படியெல்லாம் பண்ணாதே. அப் புறம் என்னால ஆபீஸிற்குப் போகவே முடியாது!'' என்று மேலும் அவளை இறுக்கினான்.

''அய்யோ நான் எதையும் பார்க்கலை'' என்ற குரல் கேட்டதும் இருவரும் சட்டென்று விலகினார்கள். கதவரு கில் கண்களை மூடிய வண்ணம் நின்றிருந்தாள் நந்தினி.

''ஏய் நந்தினி இங்கே ஒண்ணும் நடக்கலை உள்ளே வா!''

''ஸாரிண்ணா பூஜை வேளையில கரடியாய் வந்துட் டேனா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை யார்கிட்டே எப்படி நடந்துகிணுமின்னு உத்ராவிற்கு சொல்லிக் கொடுத் திட்டு இருந்தேன். அதுக்குள்ளே நீ வந்துட்டே அவ்வளவு தான்.''

நந்தினி உதட்டில் கேலி சிரிப்பை தவழ விட்டுக் கொண்டே, ''அண்ணா உன்னைவிட அண்ணிக்கு எல் லாரையும் பத்தி நல்லாவே தெரியும். ரொம்ப வழியுது பார் துடைச்சிக்கோ.''

''ஹி... ஹி...! சரி சரி நீங்க பேசிகிட்டு இருங்க. நான் ஆபீஸிற்கு கிளம்புகிறேன்'' என்று மனைவிக்கு கண்களா லேயே சைகை காட்டி படியிறங்கினான் அருண்.



''நந்தினி டிபன் சாப்பிடறியா?''

''அய்யய்யோ எனக்கு வேண்டாம்பா!''

''பயப்படாதே என் சமையல் அவ்வளவு மோசமா இருக்காது. சாப்பிடறா மாதிரியே இருக்கும்.''

''இன்னொரு நாள் கண்டிப்பா சாப்பிடறேன் அண்ணி. நான், அப்பா, அம்மா மூணு பேரும் இன்னைக்கு மதியம் வெளியே போறோம் வர லேட்டாகும்.''

''எங்கே?'' -. உத்ரா.

''என் தோழியோட பிறந்த நாள் விழாவிற்கு நானும் அம்மாவும் போறோம். ஆபீஸ் முடிஞ்சு அப்பா வந்து எங்களைப் பிக்கப் பண்ணிப்பார். ரகு அண்ணாவிற்கு தெரியாது. வந்தா நீங்க சொல்லிடறீங்களா ப்ளீஸ்.''

''என்னடா நந்தினி இது, ப்ளீஸ் அது இதுன்னு பெரிய வார்த்தை எல்லாம் யூஸ் பண்ணிகிட்டு, சொன்னா செஞ் சிட்டுப் போறேன். ஆமா அண்ணி ரூமில்தானே இருக் காங்க.''

''ம்... ம்... காலையில என்ன கூத்து பண்ணாங்கன்னு பார்த்தீங்கயில்லே. அவங்க மனுஷியே இல்லை.''

''ஏன் நந்தினி நாளைக்கு என்னையும் இப்படித்தான் சொல்வியா?'' பாத்திரங்களை ஒதுங்க வைத்துக் கொண்டே நந்தினியைப் பார்த்துக் கேட்டாள் உத்ரா.


''என்ன அண்ணி நீங்க. உங்க குணமும், அவங்க குணமும் ஒண்ணா? நீங்க ஒரு மென்மையான பூ மாதிரி! ஆன அவங்க புயல்! அழகழாய் அமைதியாய் காட்சி யளிக்கிற பூவைத்தான் மனிதர்களும் விரும்புவாங்க. கடவுளுக்கும் படைப்பாங்க. தவிர எல்லா பொருள்

களையும் தன்னோட ஆக்ரோஷமா இழுத்து அழிக்கிற புயலை யாரும் நேசிப்பது இல்லை.''

''ரொம்ப நல்லாப் பேசுறே நந்தினி!''

''டைம் ஆயிடுச்சு அண்ணி நான் கிளம்புறேன். வீணா அண்ணி கிட்டே வலியப் போய்ப் பேச வேண்டாம். உங்க மனசு நோகிற மாதிரி ஏதாவது சொல்லிடப் போறாங்க. ஜாக்கிரதை பை அண்ணி!'' சிட்டாய்ப் பறந்தாள் நந்தினி.

மதியம் வீடு வெறிச்சோடி கிடந்தது. வீட்டில் யாரும் இல்லை. உத்ரா கட்டிலின் மேல் படுத்துக் கொண்டு பிரபல நாவல் ஒன்றைப் புரட்டிக் கொண்டு இருந்தாள். நாவலில் மனம் லயிக்கவில்லை. அருணிடமே முட்டிக் கொண்டு நின்றது.



## 7

அது ஒரு காதலர் பூங்கா!

அருணின் புகைப்பட ஆல்பம் ஒன்றினை பார்த்துக் கொண்டிருந்த உத்ரா ஒரே ஒரு புகைப்படத்தை மட்டும் முறைத்துப் பார்த்தாள்.

''டியர் ஏன் அந்த போட்டோவையே முறைச்சு பார்த்துகிட்டு இருக்கே?''

''அருண் இந்த போட்டோ எப்போ எடுத்தது உங்களைச் சுற்றி நிறைய பெண்கள் இருக்கிறாங்களே.''

''இதுவா காலேஜ்லே படிக்கும்போது எடுத்தது. அப்போ அய்யா ரோமியோ போலத் தெரியுறா, எப்பவும் பெண்



களுக்கு நடுவிலதான் இருப்பேன். கண்டிஷனா இருக்கும் வர்ற மாதிரி ஏதாவது பேரு. என் பின்னாடியே சுத்தினாங்க... என் கஷ்ட காலம் அவங்களை எல்லாம் விட்டுட்டு உன்னைப் போய் காதலிச்சேன் பாரு.''

''ஏன் என்னைக் காதலிச்சதால உங்களுக்கு இப்போ என்ன கெட்டுப் போச்சு?''

''இரண்டு வருஷமா காதலிக்கிறோம்னுதான் பேரு கிட்ட வந்தா முள்ளா குத்துறியே...?''

''ரோஜாவுக்கு அழகே முட்கள்தானே அருண்?''

இந்த வாய்க்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. பார்த்துகிட்டே இரு. இப்படியே என்னை காய விட்டுட்டே இருந்தேன்னா நல்ல தாராள மனசு உள்ள ஒரு பொண்ணை பாத்து லவ் பண்ணப்போறேன்.''

''அப்படியா அப்ப அவளையே கட்டிக்கிட்டு அழுங்க நான் வரேன்'' என எழுந்தவளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டான் அருண்.

''இதுக்கு மட்டும் நான் வேணுமா? கண்டிஷனா இருக்கும் வரும்னு சொன்னீங்களே அவளைப் போய் கட்டி பிடிக்க வேண்டியதுதானே!''

''அது முடியாதே!''

''ஏன்?''

''அவ புருஷன் உதைப்பானே!''

''என்னது?''

''எனக்கு லட்டு மாதிரி ஒரு காதலியிருக்கும்போது நான் ஏன் வேற ஒருத்திய பார்க்கப் போறேன்?''

''இந்த டயலாக்கை எத்தனை பேருகிட்ட சொல்லி இருக்கீங்களோ...?''

''யப்பா இந்த பொண்ணுங்ககிட்டே எதையும் சொல்ல முடியாதே தோண்டித் துருவி குத்தம் கண்டு பிடிச்சிடு வீங்களே. உத்ரா எனக்கு எப்பவுமே உன் ஞாபகம் மட்டும் தான் என்னை நம்புடா.''

''இதான் சாக்குன்னு கையை மேல போட்டுடுவீங் களே!''

அவன் முகத்தை சுருக்கி அவளிடம் இருந்து கையை விலக்க ''சரி சரி இப்போதைக்கு இது போதும்'' என அவள் கைகளைத் திருப்பி இதழ் பதித்தாள் அவள்.

''தேங்க் யூ டார்லிங்'' என அவளை மறுபடியும் அணைக்க, ''போங்க!'' என்றவளின் குரலுக்கு, ''என்னம்மா முதமுதல்ல வீட்டுக்கு வந்திருக்கேன். போங்க போங் கன்னு வெரட்டுறீயே'' என்ற வீணாவின் குரலில் டன் டன்னாய் அசடு வழிந்தாள் உத்ரா.

''அய்யோ நான் உங்களைச் சொல்லலைக்கா. ஏதோ நியாபகத்திலே... மன்னிச்சிடுங்க ப்ளீஸ்.''

''மலரும் நினைவுகளா!'' என்று கிண்டலாய் பேசிய படியே கதவருகில் நின்றிருந்தாள் வீணா.

''வாங்க உள்ளே வாங்கக்கா, உக்காருங்க நின்னு கிட்டே இருக்கீங்களே'' உபசரித்தாள் இளையவள்.

உள்ளே நுழைந்த வீணாவின் பார்வையிலும், வார்த்தை யில் சர்வ நிச்சயமாய் அலட்சியம் தொனித்தது. ''பரவா யில்லேம்மா எல்லாம் கேள்விப்பட்டேன். உன்கூட கொஞ்ச நேரம் பேசலாமின்னு வந்தேன்.''



''அதுக்கென்னக்கா தாராளமா பேசலாம். முதல்ல உட் காருங்க.''

''இல்லை உத்ரா! இங்க ரொம்ப புழுக்கமா இருக்கு. என்னால ஏஸி இல்லாம இருக்க முடியாது. வாயேன் கீழே என் ரூமிற்குப் போயிடலாம். என்னுடைய அறையையும் பார்த்த மாதிரி இருக்கும் இல்லே.''

''அது வந்து...'' தயங்கிய உத்ராவை கையைப் பிடித்து அவளுடைய அறைக்கு கூட்டிச் சென்றாள் வீணா.

''வா உத்ரா உட்கார்!'' என்று சோபாவைக் காட்டி அவ ளிற்கு எதிர் சோபாவில் கால் போட்டுக் கொண்டு அமர்ந் தாள் வீணா.

''அப்புறம் சொல்லு. உன்னோட கல்யாண வாழ்க்கை எப்படி இருக்கு?''

''நல்லாயிருக்குக்கா!''

''உனக்கும், அருணுக்கும் எப்படி பழக்கம் உங்க லவ் ஸ்டோரியை கொஞ்சம் சொல்லேன்!''

உத்ரா கன்னக் கதுப்புகளில் சிவப்பேற நாணத்துடன் நான் ஒர்க் பண்ற விளம்பர கம்பெனிக்கு ஒரு வேலை விஷயமா வந்தார் அருண். அவருடைய ப்ராஜெக்ட் இரண்டை நான்தான் பண்ணினேன். அப்ப ஏற்பட்ட பழக்கம்தான் எங்களுக்குள் பின்னாளில் வளர்ந்து கல்யாணம் வரை வந்து விட்டது.''

''ஏன் உத்ரா இந்த வீட்லதான் காதலுன்னாலே யாரு கும் தெரியாதே. உன்னையெப்படி மாமாவும், அத்தையு உள்ளே சேர்த்துக்கிட்டாங்க?'' மெல்ல மெல்ல வார்த்தை யால் தூண்டிலைப் போட்டாள் வீணா.

"இல்லேக்கா மாமாவும், அத்தையும் என்னை ஏத்துக் கலை. ரகு அத்தான் இல்லைன்னா நான் இப்போ இந்த வீட்ல இருக்கவே முடியாது. இப்ப வேணுமின்னா மாமா வும், அத்தையும் என்னை ஏத்துக்காம இருக்கலாம். ஆனா இன்னும் கொஞ்ச நாள்ல அவங்க மனசு மாறும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. உத்ரா இதனை சொல்லிக் கொண்டிருக்கும் போதே சபேசன், மரகதம், நந்தினி வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்தனர்.

"மாமாவும், அத்தையும் உன்னை ஏத்துக்குவாங்கன்னு நீ நம்புறீயா உத்ரா?" என்ற வீணாவின் குரலில் சபேசனும் அவர் பின்னால் உள்ளே நுழைந்த மரகதமும், நந்தினியும் அப்படியே சிலையாய் நின்று விட்டார்கள்.

சபேசன் மரகதத்திடம், "இவ எதுக்குக் கீழே வந் தாளாம்?" என்று பற்களை கடித்தார்.

"தெரியலைங்களே ஒருவேளை வீணா கூப்பிட் டாளோ என்னவோ?" என்று கிசுகிசுத்தாள் மரகதம்.

"அவ கூப்பிட்டா இந்த பொண்ணுக்கு அறிவு எங்கே போச்சு, பாக்க நல்ல பெண்ணாத்தான் தெரியறான்னு காலையிலே சொன்னியே பார்த்தியா. வந்த அன்னைக்கே இவகூட சேர்ந்திட்டா?"

"அப்பா! கொஞ்சம் அமைதியா இருங்களேன் என்ன தான் நடக்குதுன்னு பார்ப்போம்" என்ற நந்தினியைத் தொடர்ந்து இருவரும் மௌனமானார்கள். நந்தினி பரிசுப் பொருளை எடுத்துச் செல்ல மறந்து விட்டதால் விழா வில் இருந்து மூவரும் விரைவாகவே திரும்பி விட்டனர். இதற்காக தோழியிடம் மன்னிப்புக் கோரி இருந்தாள் நந்தினி.



"என்ன உத்ரா மௌனமாயிட்டே. நான் சொல்றதை நல்லா கேட்டுக்க. என்னதான் நீ அவங்க காலுக்கு செருப்பா உழைச்சாலும் அவங்க உன்னை மருமகளா ஏத்துக்கப் போறதில்லை. ஏன்னா இந்த வீட்டு மனுஷங்களுக்கு மனசே இல்லை. அடுத்தவங்க உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கவும் தெரியாது. நீ மட்டும் நான் சொல்றா மாதிரி செஞ்சா நாம ரெண்டு பேரும் இவங்க கண்ணுல விரலை விட்டு ஆட்டலாம் நீ என்ன சொல்றே?"

"இதை சொல்லத்தான் அக்கா என்னைக் கூப்பிட்டீங் களா? நான் கிளம்புகிறேன்" என்று எழுந்தவளை "என்ன உத்ரா நான் சொன்னதுக்கே பதிலே சொல்லாம புறப் படறே?"

"இல்லேக்கா உங்க பேச்சுல எனக்கு உடன்பாடு இல்லை. நாம பேசினா தேவையில்லாத பிரச்சினைதான் வளரும். இருந்தாலும் ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்லிட றேன். இந்த வீட்ல இருக்கிறவங்களுக்கு மனசே இல்லைன்னு சொல்றீங்களே. ஒரு நாளாவது நீங்க அவங்ககிட்ட நல்ல மனசோட பழகி இருக்கீங்களா?"

"ச்சே இதுக்குத்தான் தராதரம் தெரியாதவங்க கூட எல்லாம் பழகக் கூடாதுன்னு சொல்றது! போனா போகு தேன்னு உன்னை கூப்பிட்டு புத்தி சொன்னேன் பாரு. எனக்கு இது வேணும்" எனப் பொரிந்தாள் வீணா.

"ஏங்க்கா புத்தி சொல்றதுன்னா என்னன்னு முதல்ல உங்களுக்குத் தெரியுமா? வீட்டுப் பெரியவங்க மனசு கோணாம எப்படி நடந்துக்கணும்? அவங்க அன்பை எப்படி பெறணும். எப்படி அதைக் காப்பாத்தணும் என்று சொன்னீங்கன்னா அது அட்வைஸ்! அதை விட்டுட்டு அவங்களை மட்டம் தட்ட துணைக்குவான்னு நீங்க கூப்பிடறது நியாயமேயில்லை."

''என்கிட்டேயே இவ்வளவு திமிரா பேசுறியே! கடைசி வரைக்கும் அவங்க உன்னை ஏத்துக்கவே போறது இல்லை. கல்லை உன்னால கரைய வைக்க முடியாது உத்ரா! மனசில வைச்சிக்கோ.''

''அதைப்பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். அவ் வளவு பெரிய கல்லை ஒரு சின்ன உளிதான் உடைக்குது. நான் அந்த உளியா இருந்து அவங்க மனசில் சிற்பமா இடம் பிடிச்சிடுவேன். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு. உங்க அட்வைசுக்கு ரொம்ப நன்றி வரேன்'' என்று விருட்டென வெளியேறினாள், உத்ரா.

''என்கிட்டேயே சவாலாடி விடறே உன்னை கவனிச் சிக்கிறேன்'' மனதிற்குள் கறுவினாள் வீணா.

உத்ரா ஒரு குட்டிப் புயலாய் அந்த அறையை விட்டு வெளியேறுவதைக் கண்ட சபேசனும், மரகதமும் இமை களைக் கொட்டக் கூட மறந்தனர். முதன் முதலாய் பார்த்த துமே வீணாவை எதிர்த்து உத்ரா பேசியது அவர்களுக்கு அவள் மீது மரியாதையை ஏற்படுத்தியது.

மரகதம் கணவரைப் பார்த்தார். ''இப்ப என்ன சொல் றீங்க?'' என்ற கேள்வி அதில் ஒளிந்திருந்தது. அவர் மௌனமாய் அந்த பார்வையை எதிர் கொண்டார். நந்தினி ஒன்றும் பேசாமல் தன் அறைக்குள் சென்று விட்டாள்.



## 8



நாட்கள் ஊர்ந்தன. உத்ரா இந்த ஒன்றரை மாதத்தில் நந்தினியுடன் நட்பையும், வீணாவுடன் பகையையும்



சம்பாதித்துக் கொண்டாள். மரகதத்திடம் அவள் உறவு இலைமறைவு காய் மறைவாக இருந்தது.

மேஜை விளக்கு ஒளியில் குனிந்து எழுதிக் கொண்டு இருந்த அருணின் பின்புறமாய் அணைத்தாள் உத்ரா.

''இந்த நேரத்திலே என்ன அருண் எழுதிகிட்டு இருக் கீங்க.''

''இப்போ நேரத்திற்கு என்ன குறைச்சல்?''

''குறைச்சல் இல்லே அதிகம்! மணி பதினொன்று முப்பது. நாளைக்கு ஆபீஸுக்கு போகணுங்கிற ஐடியாவே இல்லையா. அப்படி என்ன முக்கியமா எழுதுறீங்க?''

''அது லவ் லெட்டர் டார்லிங்!''

''லவ் லெட்டரா, யாருக்கு?'' என இடுப்பில் கை வைத்து அவனை முறைத்தபடியே கேட்டாள் உத்ரா.

''உனக்குத்தான்'' என்றான் கூலாக.

''எனக்கா? கடவுளே நான் உங்க பொண்டாட்டி அருண்.''

''ஏன்? பொண்டாட்டிக்கு லவ் லெட்டர் எழுதக் கூடா துன்னு சட்டம் ஏதாவது இருக்கா?''

''வர வர விதண்டாவாதமாகவே பேசிகிட்டு இருக்கீங்க. அப்படி என்னதான் எழுதியிருக்கீங்கன்னு பார்க்கலாம் கொடுங்க.''

''நான் கொடுக்கணுமின்னா நீ எனக்கு ஒண்ணு தரணும்'' என கன்னத்தைக் காட்ட அவனருகில் வந்த உத்ரா அவன் கன்னத்தில் பட்டென்று தட்டி விட்டு அருணின் முகம் போன போக்கைப் பார்த்து கலீரெனச் சிரித்தாள்.

''யூ சீட்! என்னை ஏமாத்திட்டேயில்லே. உன்னை என்ன பண்றேன் பார்'' என அவளைத் துரத்த அருணின்

கைகளில் இருந்த கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடி கட்டிலில் விழுந்தாள் உத்ரா. அருணும் அவள் அருகில் விழுந்தான்.

லெட்டரை அவன் முகத்திற்கு நேரே பிரித்துப் படித்தாள்.

''என் வசியக்காரப் பொண்டாட்டிக்கு உன் அத்தான் அன்பு முத்தங்களுடன் எழுதுவது, என் உள்ளத்தில் இருந்து எழும் உணர்வு பூர்வமான எண்ணங்களை எழுத்துக்களாக உன் இதயத்திடம் சமர்ப்பிக்கிறேன். முதலில் உன்னை எனக்கு மனைவியாக்கிய அந்த ஆண்டவனுக்கு என் உயிர் உள்ளவரை நன்றியை தெரிவிப்பேன். என் மேல் அளவுக்கு அதிகமாக நீ வைத்திருக்கும் அன்புதான் என்னுயிரில் கலந்து உன்னைச் சுற்ற வைத்தது.

என்னுடன் நீ இல்லையென்றால் நான் எப்படித் தவிப்பேன் தெரியுமா உத்ரா? பிறந்த குழந்தை அம்மாவிடம் பசிக்காக தவிப்பது போல, தண்ணீரில் உள்ள மீன் தரைக்கு வரும்போது துடிப்பதைப் போல தவிப்பேன், கண்மணி!'' - கடிதம் முற்று பெற்று இருந்தது. ஆனால் படித்தவளின் கண்களில் இருந்து முற்றுப் பெறாமல் கண்ணீர் துளிகள் சிதறின.

அருண் திடுக்கிட்டான். ''உத்ரா என்னம்மா இது. சின்ன குழந்தை மாதிரி? அந்த ஆதரவான பேச்சில் மேலும் அழுகை வெடிக்காத காதல் மிகுதியோடு அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

ஆறுதலாய் அவள் முதுகை நீவினான் அருண். ''எம் மேல உங்களுக்கு எவ்வளவு அன்பு அருண்! பெத்தவங்களை ஒதுக்கி என் கழுத்திலே தாலி கட்டினீர்கள்.



தரையில கால்படாம என்னை இந்த தாங்கு தாங்குகிறீங்களே உங்களுக்கு நான் என்ன பண்ணப்போறேன்?'' தடவிக் கொடுத்த அவன் கரங்களை கண்ணருகே வைத்து ஒற்றிக் கொண்டாள்.

''ஏய் என்னடா இது சின்ன பிள்ளை மாதிரி அழுது கிட்டு நீயும் நானும் கணவன் மனைவி! நமக்குள்ளே அன்பும் நேசமும்தான் இருக்கணுமே தவிர நன்றியுணர்ச்சிக்கும், கைமாறுக்கும் இடமே இல்லை. அப்படி எனக்கு கைமாறு செய்யணுமின்னா ஒரு குழந்தையை கூடிய சீக்கிரமா பெத்துப் போடு!''

கண்களைத் துடைத்து அவனைப் பார்த்தாள். ''அருண் உங்களுக்கு குழந்தைன்னா பிடிக்குமா?''

''பிடிக்கும்மாவா நீ தினமும் ஒரு குழந்தை பெத்து கொடுத்தேன்னா கூட சந்தோஷம்தான்?''

''அய்யே நீங்க ரொம்ப மோசம் அருண்!'' என்று மருதாணி பூசிய விரல்களால் அவன் மார்பில் கோலமிட்டாள்.

''என் பொண்டாட்டி அழுதாலும் சரி, வெட்கப்பட்டாலும் சரி அழகாகவே இருக்கா.''

''ச்சீ...'' என அவள் வெட்கிச் சரிய காதலுடன் மனைவியை நெருங்கினான் அருண்.

அது ஓர் ஏற்றுமதி நிறுவனம் உடைகள் முதல் டப்பாக்களில் அடைத்த பழங்கள் வரை ஏராளமான பொருட்களை ஏற்றுமதி செய்கிறார்கள். இறக்குமதியும் உண்டு. கோடிக் கணக்கில் பணம் புரளும் நிறுவனம்.

தலைமை அலுவலகம் பெங்களூரில் இருக்கிறது. சென்னையில் இருக்கும் இது கிளை அலுவலகம் ஏ[illegible]த மாடிக் கட்டிடத்தில் நான்காவது மாடியில் உதவி

மேலாளர் என்ற அறையில், பைலில் முகத்தை மறைத்துக் கொண்டிருந்த ரகு, ''ஸார் உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க'' என்ற ஆபீஸ் ப்யூனின் குரலுக்கு நிமிர்ந் தான்.

''யார் வந்திருக்கா ராஜா?''

''யாரோ புஷ்பலிங்கமாம் உங்க மாமான்னு?''

அவன் வார்த்தையை முடிக்கும் முன்னரே இடை மறித்து, ''இப்போ எங்கே இருக்கார்?'' என்றான்.

''விசிட்டர்ஸ் ரூமில் உட்கார்ந்திருக்கார் ஸார்.''

''ராஜா இரண்டு காபி வாங்கிட்டு வந்துடறீயா?'' என்று பத்து ரூபாய்த்தாளை நீட்ட அவன் தலையசைத்ததும் விசிட்டர்ஸ் அறையை நோக்கிச் சென்றான் ரகு.

''வாங்க மாமா நல்லாயிருக்கீங்களா? என்ன திடீர்னு ஆபீஸ் பக்கம்?''

''நல்லாயிருக்கேன் மாப்பிள்ளை உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும். இங்கயே பேசலாமா இல்லை வெளியில போலாமா?''

''இங்க எந்த டிஸ்டர்பன்சும் இருக்காது. அதனால இங்கேயே பேசலாம் உட்காருங்க!''

புஷ்பலிங்கம் மௌனமாய் இருந்தார். ஆயிரம் இருந்தாலும் தன் சொந்த மகளைப் பற்றி குறை சொல்ல எந்தத் தகப்பனுக்குத்தான் துணிவு வரும். மாப்பிள்ளை யாகவே இருப்பினும் வேறொரு ஆண் பிள்ளை அல்லவா பெற்றவருக்கு தயக்கம் இருக்கத்தானே செய்யும்.

எப்படி ஆரம்பிப்பது என்று அவர் தயக்கம் காண்பிக்க ''ஸார்!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே கையில்



பிளாஸ்க்குடன் உள்ளே நுழைந்த பியூன் காபியை சுடச்சுட கப்களில் வார்த்து விட்டு வெளியேறினான்.

''முதல்ல காபி சாப்பிடுங்க! அப்புறம் பேசலாம்'' என்ற மருமகனின் பேச்சிற்கு மதிப்பளித்து கோப்பையை சாய்த்து இரண்டு சிப் அருந்தி தொண்டையை நனைத்துக் கொண்டார் புஷ்பலிங்கம். சற்று தெம்பு வந்தபோதிலும், நாவை யாரோ இழுத்து கட்டியது போல் இருந்தது.

''வீணாவைப் பத்தி உங்ககிட்ட பேசலாமின்னு வந்தேன்.''

ரகு பேசவில்லை அவரே தொடர்ந்தார்.

''வீணா முன்ன மாதிரி அடிக்கடி வீட்டுக்கு வர்ற தில்லை. அப்படின்னா அவ உங்க கூட சந்தோஷமா இருக் காளா மாப்பிள்ளை?''

''என்ன மாமா இப்படி கேக்குறீங்க நாங்க எப்பவுமே சந்தோஷமா இருக்கோம்!''

விரக்தியாய் ஒரு சிரிப்பினை உதிர்த்தார் புஷ்பலிங்கம். ''ஏன் மாப்பிள்ளை வீணா உங்க கூட இருந்ததை விட எங்க வீட்ல இருந்ததுதான் அதிகம். புருஷன் கூட சந்தோஷமா இருக்கிற பொண்ணு வாராவாரம் பெட் டியைத் தூக்கிட்டு பொறந்த வீட்டுக்குத் தனியா வந்து நிக்கமாட்டா!

அவ ஒவ்வொரு முறை பெட்டியைத் தூக்கிட்டு வரும் போதும் என் மனசு ஒரு நிலையில இருக்காது. நிரந்தரமா ஒரு நாள் இப்படியே வந்துடுவேன்னு அவ சொல்லாம சொல்றா மாதிரி இருக்கும்!''

''மாமா நீங்க நினைக்கிறா மாதிரியெல்லாம் இல்லே. நாங்க நல்லாத்தான் இருக்கோம்!''

''மனசுக்கு நிம்மதியா இருக்கு மாப்பிள்ளை இந்த வார்த்தைகளை உங்க வாயிலிருந்து கேக்கறதுக்கு! ஆனா இதில் ஒரு சதவீதம் கூட உண்மையில்லைங்கிறது எனக்குத் தெரியும்!''

''மாமா...!''

''பதறாதீங்க மாப்பிள்ளை! என் மகளுடைய நடவடிக்கையில் இருந்து உங்க வாழ்க்கை முறையை ஊகிக்க முடியலைன்னா என் இருபத்தைந்து வருட தாம்பத்தியத்தை நான் சிறப்பா வாழ்ந்ததற்கு அர்த்தமேயில்லை. இந்த வேதனையிலும் ஒரு திருப்தி என்னன்னா என் மகளை விட்டுத்தராம பேசுறீங்களே அதான்!''

''வீணா என் மனைவி மாமா எந்த சூழ்நிலையிலும் அவளை நான் விட்டுத் தரமாட்டேன்!''

''அந்த நம்பிக்கை உங்க திருமணத்தின் போதே எனக்கு இருந்தது. அதனாலதான் உங்க அனுமதி இல்லாம அப்பவே என் சொத்தை உங்க இரண்டு பேர் பேரிலும் எழுதி வச்சிட்டேன்!''

''நீங்க என்ன மாமா சொல்றீங்க? வீணாவை நான் கல்யாணம் செய்துகிட்டது உங்க சொத்துக்காக இல்லை. இது என்னை அவமானப்படுத்தறா மாதிரி இருக்கு.''

''பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க மாப்பிள்ளை! இந்த ஆஸ்தியை உங்க பேர்ல எழுதினது உங்களை அவமானப்படுத்த இல்லை என் மகளைக் காப்பாத்த!''

புருவங்கள் முடிச்சிட்டுக் கொள்ள அவரைப் பார்த்தான் ரகு.

''திருமணப் பேச்சு எடுக்கும் முன் மகளுடன் தனக்கு ஏற்பட்ட வாக்குவாதங்கள் அனைத்தும் மருமகனுடைய



செவியில் கொட்டினார். நாகரீகம் என்னும் பேர்ல நம்ம நாட்டிலேயே இளைஞர்கள் குட்டி சுவரா போறாங்க. பண்பாடு இல்லாத அந்த ஊருக்கு அவளைத் தனியா அனுப்ப முடியலை அதனாலதான்!''

''கல்யாணத்தைக் காரணம் காட்டி ஆஸ்தியை என் பேர்ல எழுதினீங்களா மாமா! வீணா என்னை வெறுக்கிறதுக்கு இப்படி ஒரு வலுவான காரணம் இருக்குன்னு எனக்கு இதுநாள் வரை தெரியாது.''

''என்னை மன்னிச்சிடுங்க மாப்பிள்ளை என் பொண்ணோட வாழ்க்கை நல்லாயிருக்கணுமின்னு உங்களை நோகடிச்சிட்டேன். அதற்குப் பிராயச்சித்தமா பேசாம வீணாவை டைவர்ஸ் பண்ணிட்டு இனிமேலாவது நீங்க நல்லபடியா இருக்கணுமின்னு கேட்டுக்கிறேன்.''

''வீணா உங்க பொண்ணு மாமா! இதைச் சொல்ல உங்களுக்கு எப்படி மனசு வந்தது?''

''ஒரு நல்ல ஆத்மா நிம்மதியா வாழ வேண்டுமென்றுதான்...''

''நிறுத்துங்க மாமா! நீங்க வேணுன்னா உங்க மகளை விட்டுக் கொடுக்கலாம். ஆனா என்னால என் மனைவியை விட்டுத் தர முடியாது. இன்னொரு தடவை இந்தப் பேச்சை எடுத்துக்கிட்டு தயவு செய்து இங்கே வர வேண்டாம்.''

புஷ்பலிங்கத்தின் கண்களில் நீர் தளும்பியது. இரு கைகளைக் கூப்பி வணங்கிவிட்டு திரும்பிப் பாராமல் சென்று விட்டார். ரகு டேபிளுக்குச் சென்றான். புஷ்பலிங்கம் வந்துவிட்டுச் சென்றதும் ரகுவிற்கு மேலாளரிடம் இருந்து அழைப்பு வந்தது. முக்கியமான டாக்கு

மெண்டை தலைமை அலுவலகத்திற்கு சேர்ப்பிக்க நம்பகமான ஆளை ஏற்பாடு செய்யச் சொல்ல தானே அப்பணியை ஏற்பதாய் கூறிவிட்டு வந்தான்.

குழம்பிப் போயிருக்கும் தன் மனநினைவுகளை அகற்ற இந்தப் பயணம் ஏதுவாய் இருக்கும் என்ற முடிவிற்கு வந்தான் ரகு.



## 9



பொன்னிறமான பொழுது ஆனந்தமாய் விடிந்தது. மரகதம்மாள் பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது அவரின் உலகமான சமையலறையில்.

வீணா, ரகு, சபேசன், நந்தினி என்ற நான்கு ஜீவன்களின் வயிற்றையும் கவனிக்க வேண்டுமே, ரகுவும், சபேசனும் ஒன்பது மணிக்குள் அலுவலகம் செல்ல வேண்டியிருப்பதால் மரகதம்மாள் ஐந்து மணிக்கு எழுந்து சமையல் வேலையை கவனித்தால்தான் சரியாக இருக்கும்.

நந்தினி சில சமயங்களில் உதவிக்கு வருவாள். அவளுக்கும் தேர்வு இருக்கும் சமயம் மரகதம் மட்டுமே ஒண்டியாய் அல்லாட வேண்டியிருக்கும். வீணா இதுவரையில் ஒரு துரும்பைக்கூட எடுத்து அசைத்தது இல்லை. மரகதம் அவளிடம் எந்த வேலையும் சொல்வதும் இல்லை. என்றாவது நந்தினியிடம் மட்டும் குறைபட்டு கொள்வார்.

“இந்த பொண்ணு ஏன் நந்தினி இப்படி நடந்துக்கிறா வீட்ல ஒரு வேலை கூட செய்யறதில்லை. ஏதாவது



சொன்னா என்னால முடியலை, எனக்குத் தெரியாதுன்னு சொல்லிடறா அதுக்கு மேல நான் என்னத்த பண்றது?”

“அடப் போம்மா உனக்கு சமத்துப் பத்தாது வேலை வாங்கறதுக்கும் ஒரு திறமை வேணும் அது உனக்கு இல்லை.”

“வரவர உனக்கு வாய் நீளுது நந்தினி! ரொம்ப பெரிய மனுஷி மாதிரி பேச ஆரம்பிச்சிட்டே!”

“அம்மா உன்னுடைய இடத்திலே மட்டும் நான் இருந்தேன்னா இந்நேரம் வீணா அண்ணியோட இடுப்பெலும்பை முறிச்சிருப்பேன்.”

“முறிப்பே, முறிப்பே அவ காதுல விழுந்தா உன் பல்லைத் தட்டிடுவா. பேசாம வேலையைப் பாரு” என்பார் மரகதம்.

இந்த வாரம் நந்தினிக்கும் தேர்வு ஆரம்பமாகி இருப்பதால் அவரே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியிருந்தது. யோசனையோடு பருப்பு டப்பாவில் கைவிட்ட போது கையில் ஒரு சின்ன பார்சலும் கூடவே, ஒரு வெள்ளை காகிதமும் நான்காய் மடிக்கப்பட்ட நிலையில் இருந்தது அவருக்கு மிகவும் ஆச்சரியமாய் இருந்தது.

“என்ன பார்சல் இது? யார் இதைக் கொண்டு வந்து வைத்திருப்பார்கள்?” என்று எண்ணிக் கொண்டே பார்சலை பிரித்தபோது அதில் ஒரு ஜோடி தங்க வளையல்கள் அவரைப் பார்த்துச் சிரித்தன.

பிறகு கையிலிருந்த கடிதத்தை பிரித்தார். அதில் முத்துக்களை மாலையில் கோர்த்தாற்போல வரிசையாய் இருந்தது உத்ராவின் கையெழுத்து.

அன்புள்ள அம்மாவிற்கு,

என்னடா அத்தைன்னு கூப்பிடறதுக்கு பதிலாக அம்மான்னு எழுதி இருக்கேன்னு பாக்குறீங்களா. என்னைப் பொறுத்தவரையில் நான் உங்களைப் பெத்த அம்மாவாத்தான் நினைக்கிறேன்.

தாய்ப்பாசம் என்றால் என்னவென்று தெரியாத எனக்கு நீங்க தாயா இருப்பீங்கன்னு நம்பித்தான் நான் இங்கே வந்தேன். ஆனா இதுவரைக்கும் என்னுடைய நினைப்பு வெறும் கனவாகவே இருக்கு. அது கனவாகவே இருந்துடுமோ என்று பயமாயிருக்கு அம்மா.

இது உங்களுக்கு என்னுடைய அன்புப் பரிசு. பரிசுங்கிற சொல்லை விடவும் காணிக்கை என்கிற சொல் ரொம்ப பொருத்தமா இருக்கும்.

நான் என் கணவரை தெய்வமா நினைக்கிறேன். அவரை எனக்கு கொடுத்திருக்கிற உங்களையும், நான் அந்த ஸ்தானத்திலேதான் வைச்சிப் பாக்கிறேன். தயவு செய்து இதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

இப்படிக்கு,
உங்கள் மகளாய் வாழத்துடிக்கும்
உத்ரா.

மரகதம்மாளின் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இந்த பொண்ணு எப்போ கீழே வந்தது. என்னை இப்படி இக்கட்டுல மாட்டி விட்டுடுச்சே. இது மட்டும் அவருக்குத் தெரிஞ்சா வானத்துக்கும், பூமிக்கும் குதியாய் குதிப்பாரே நான் என்ன பண்ணுவேன்.

''மரகதம் இங்கே வாயேன்'' என்று சபேசனின் குரல் கேட்டதும் அவசரமாய் அதை உள்ளே போட்டுவிட்டு கணவர் இருக்கும் இடம்



''என்னங்க கூப்பிட்டீங்களா?''

''ஆமா குளிக்கணும் வெந்நீர் எடுத்து வைய்.''

''சரிங்க'' என்று தயங்கிய மனைவியை அன்போடு பார்த்தார் சபேசன். ''என்னம்மா தயங்கறே ஏன் உன் முகம் எல்லாம் இப்படி வியர்த்துப் போயிருக்கு. உடம்பு சரியில்லையா?''

''அது... ஒண்ணுமில்லைங்க. அடுப்பு பக்கத்திலேயே நின்னுகிட்டு இருந்தேனா அதான்.''

''மரகதம் உன்கிட்ட ஒண்ணு சொல்லணும் மேலே இருக்கே அந்த பொண்ணு நேத்து நான் லைப்ரரிக்குப் போகும்போது வெளியே நின்னுகிட்டு இருந்தது. நான் வீட்டுக்குள்ளே நுழையும்போது என்னைப் பார்த்து சிரித்தது. அப்புறம் மேலே ஒரு படி போய் அது என்ன புக் மாமான்னு கேக்குது.''

''நீங்க என்னங்க சொன்னீங்க?''

''காது கேட்காத மாதிரி நடந்து வந்துட்டேன். நான்தான் அவங்க ரெண்டு பேரையும் என் மூஞ்சிலேயே விழிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கேனே அப்புறம் என்ன வலிய வந்து பேசுறது. ஜாக்கிரதையா இரு அந்த பொண்ணு என்கிட்ட வந்து பேசினா மாதிரி உன்னிடமும் பேசுவா ஜாக்கிரதை!''

கணவரின் கோபம் கண்ட மரகதம் வளையல் பற்றிய விஷயத்தை தொண்டைக்குள்ளேயே விழுங்கினார்.

''என்னாச்சு மரகதம் உனக்கு! காய்கறிக்காரி குரல் கொடுக்கறா பாரு நீ என்ன பிரமை பிடிச்சா மாதிரி நின்னுகிட்டேயிருக்க?''

''ஆங்... ஒண்ணுமில்லைங்க இதோ வரேன்'' என்று அவருடைய அடுத்த கேள்விக்கு அவகாசம் கொடுக்காதபடி கூடையை எடுத்துக் கொண்டு வாசலுக்கு விரையும் மனைவியைப் பரிதாபமாய் பார்த்தார் சபேசன்.

வாசலில் உத்ரா நின்று கொண்டு இருந்தாள்.

''என்னம்மா தினமும் காய்கறியாவே வாங்கிற, புதுசா கல்யாணம் ஆன பொண்ணு நீ கறி, மீனுன்னு சாப்பிட்டாத்தானே உடம்புல தெம்பு இருக்கும்.''

''இது உங்களுக்குத் தெரியுது இங்கே இருக்கிறவங்களுக்குத் தெரியலையே. தக்காளி கால் கிலோ எவ்வளவு?''

''அஞ்சு ரூவாதாம்மா! பார்க்க மஹாலட்சுமி மாதிரி இருக்கே. நீ கவலைப்படாதே நான் வேணுமின்னா உனக்கு செஞ்சி எடுத்தாரேனே'' என்று காவிப் பற்கள் தெரிய, உத்ராவைப் பார்த்துக் கேட்டாள் வயதான அம்மாள்.

''வேண்டாம்மா இந்த வீட்டுப் பெரியவங்க எப்ப என்னை அவங்க மகளா ஏத்துக்கிறாங்களோ அப்போ நான் கறி சமைச்சிக்கிறேன். இப்போது இந்த கறிகாயே போதும். எடுத்துப் போடும்மா'' என்றாள் உத்ரா.

மரகதம் மனதிற்குள் தோன்றிய உணர்வை முகத்தில் காட்டாமல் காய்கறியை வாங்கிக் கொண்டு உள்ளே சென்று விட்டார்.

சமையல் அறையின் மேடையின் மீது காய்கறிகளை பரப்பும்போது அவருடைய கவனத்தை ஈர்த்தது அந்த துண்டு சீட்டு. அதில்,

*நான் கொடுத்த காணிக்கையை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. இது போல் என்னையும் ஒரு நாள் ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்குள் துளிர் விட்டு விட்டது.*

*நன்றி!*

*- உத்ரா.*



மரகதத்திற்கு வியப்பாய் இருந்தது. இந்த பெண் என்ன என்னை ஆழம் பார்க்கிறாளா. இப்படியே போனால் நான் அல்லவா வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டி வரும். எல்லோரும் ஆபீஸிற்குப் போகட்டும் அப்புறமாய் கொண்டு போய் கொடுத்து விடலாம் என அப்போதைக்கு அந்த விஷயத்தை மறந்தார்.



## 10



காலை உணவை எல்லோருக்கும் பரிமாறிவிட்டு உப்பில்லை, காரமில்லை என்ற வீணாவின் விமர்சனைக்கு நடுவே ரகுவிற்கும், சபேசனுக்கும் கேரியரில் உணவை எடுத்து வைத்து நந்தினிக்கும் டிபன் பாக்ஸில் அடைத்து, துணி துவைத்து பாத்திரம் தேய்த்து மதிய உணவை டேபிளில் பரப்பிவிட்டு நிமிர்ந்தபோது கடிகார நேரம் ஒன்றைக் காட்டியது..

மூச்சு விடக்கூட நேரமின்றி வேலை செய்த உடம்பு படுக்க சொல்லி கெஞ்சியது. காலையில் குடித்த காபிக்குப் பிறகு வயிற்றிற்கு ஏதும் வார்க்காததால் பசிக்கு இரண்டு கவளம் சாதத்தை உருட்டி விழுங்கினார்.

சற்றே உறங்கலாம் என்ற நினைப்பில் கட்டிலில்

நினைவிற்கு வந்தது. இது தான் சரியான தருணம் வளையலை அவளிடம் கொடுத்து விடலாம் என்று சமையலறை நோக்கி விரைவாய் கடந்தார்.

அவர் உள்ளே நுழையவும் வீணா சமையல் அறையிலிருந்து வெளியே வரவும் சரியாய் இருக்க, ''என்னம்மா பசிக்குதா சாப்பாடு டேபிள்ல எடுத்து வைச்சிருக்கேனே?''

''ஏன் இப்படி தொண தொணக்குறீங்க தாகமா இருந்து தேனனு தண்ணி குடிக்க வந்தேன்!''

''ஏம்மா இப்படி கோபப்படறே. நீ இந்தப் பக்கம் வந்ததே இல்லையேன்னு கேட்டேன்.''

''ஒகோ அப்ப நான் இந்த வீட்ல வேலையே செய்யறது இல்லைன்னு குத்திக் காட்டுறீங்களா?''

''அய்யய்யோ நான் சாதாரணமாதானேம்மா கேட்டேன்.''

''சே இனிமே தண்ணி குடிக்கணுமின்னா கூட எல்லோரையும் கூப்பிட்டு பர்மிஷன் வாங்கிட்டு அப்புறமா குடிக்கிறேன் போதுமா?'' என்று அவளறைக்கு சென்று விட, மரகதம்மாளிற்கு ஏன் தான் கேட்டோமோ என்றாகி விட்டது. ஆனாலும் அவளுடைய பதட்டம் அவருக்கு வியப்பையே தந்தது.

சாதாரணமாய் வீணா பதட்டப்படும் ரகமில்லை. அடுத்தவர்களைப் பதட்டப்படுத்துகிற ரகம். இன்று ஏன் இப்படி டென்ஷனா இருக்கிறா என்று முணுமுணுத்தபடியே பருப்பு டப்பாவை எடுக்க, அதன் மூடி லேசாய் அசைந்து கொடுத்தது. என்ன இது மூடி திறந்து இருக்கே. அய்யய்யோ வளையல் என்னாச்சோ தெரியலையே என்று துடிக்கும் இதயத்துடன் கையை உள்ளே விட பயந்தபடியே பார்சல் அங்கே இல்லை.



அதிர்ச்சியில் உறைந்து விட்டார் மரகதம். அதிவேகமாய் துடித்த அவரது இதயத்தின் ஓசை அவர் காதுகளுக்கே கேட்டது.

'எங்கே போயிருக்கும்? காலையில் இருந்து நான் மட்டும் தானே இங்கே இருந்தேன்! வெளியில் இருந்து யாரும் வரக்கூட இல்லையே! கடவுளே! இது என்ன சோதனை என்று கஷ்டப்பட்டு அந்த பெண் வாங்கினாளோ அதை இப்படி திருட்டுக் கொடுத்திட்டு நிக்கறேனே இப்ப என்ன செய்வேன்?' என்று தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டார்.

மூன்று மணி நேர வெயில் லேசாய் தலையில் உரைக்க வீட்டிலிருந்து இறங்கி ஒரு பத்தடி நடந்திருப்பாள் வீணா. எதிரே அவள் ஆருயிர் தோழி அபர்ணா வந்து கொண்டிருந்தாள்.

''ஹாய் அபி எப்படியிருக்கே? எங்கே இவ்வளவு தூரம்?''

''உன்னைப் பார்க்கத்தான் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன் கொஞ்சம் பேசணும்!''

''சரி வா! அந்த பார்க்கில உட்கார்ந்து பேசலாம்'' இருவரும் தெருமுனை பார்க்கினில் இருந்த மரபெஞ்சினில் அமர்ந்தார்கள்.

''என்ன பேசணும் அபி. ஏதாவது பிரச்சினையா?''

''ஆமா பிரச்சினைதான். ஆனா எனக்கில்லை உனக்கு.''

''எனக்கா எனக்கென்ன நான் நல்லாத்தானே இருக்கேன்?'' - அபி.

''நீ மட்டும் நல்லாயிருந்தா போதுமா வீணா? உன்னைச் சார்ந்தவங்க நல்லாயிருக்க வேண்டாமா?''

''சுத்தி வளைச்சு பேசாதே அபி நேரடியா விஷயத்திற்கு வா.'' - வீணா.

''அப்பாவைப் பார்த்தேன். எல்லாம் சொன்னார். ஏண்டி இப்படி? உனக்கு கிடைச்ச நல்ல வாழ்க்கையே நீயே அழிச்சிக்கப் பாக்குறே?''

''நல்ல வாழ்க்கையா? என்ன அபி கிண்டலா பண்றே? நான் படும் கஷ்டம் எல்லாம் உனக்குத் தெரியும். தெரிஞ்சே கேக்குறீயேடி!''

''என்ன கஷ்டப்படறே விரல் நகத்திலே கூட அழுக்கு சேராம உன்னை உங்க மாமியார் பார்த்துக்கலை? உன் மனசுப்படி ரகு நடந்துக்கலை, சொல்லுடி! இந்த இரண்டு வருஷ காலமா தன் மனைவி தன்னோட ஒரு நாள் கூட சந்தோஷமா இல்லைங்கிற வேதனையை மனசுலேயே சுமந்துகிட்டு வெளியிலே சிரிச்சுகிட்டு இருக்காரே உன் புருஷன் அவரை தப்பு சொல்றியா?''

''வெளியே இருந்து ஆயிரம் பேசலாம் அபி. உள்ளே இருக்கிறவங்களுக்குத்தான் அந்த வலி தெரியும்!''

''நானும் குடும்பத்திலே இருந்தவ தாண்டி! ஆனா என்னைச் சுத்தி ஆரோக்கியமான உறவுகள் இல்லை. என்ன அப்படி பாக்குறே உன்னுடைய அந்தரங்கத்தை நீ என்கிட்ட சொன்னப்ப கூட என் நிலைப்பற்றி நான் மூச்சு விடவில்லை! ஆனா இப்ப சொல்றேண்டி. இதனால என் மனபாரம் குறையறதோட மட்டுமில்லாம உனக்கும் ஒரு தெளிவு பிறக்கும்ங்கிறதுக்காக சொல்றேன்.

ஒவ்வொரு பொண்ணும் எவ்வளவோ எதிர்பார்ப்போட தான் புகுந்த வீட்டுக்குள்ளே நுழையறாங்க. ஆனா எத்தனை பேருடைய ஆசைகள் நிறைவேறுதுன்னு சொல்லு பார்க்கலாம். நானும் அப்படித்தான்.



முசல் ராத்திரியிலேயே அவர் குடிச்சார். ரொம்ப மூர்க்கமா நடந்துகிட்டார். ஏதோ நம்ப தலையெழுத்து இவ்வளவுதான்னு நினைச்சிகிட்டு மெளனமா இருந்தேன்.

ஆனா நாளுக்கு நாள் பிரச்சினை அதிகமாச்சு. பெத்த வங்களும் கண்டும் காணாம இருந்திட்டாங்க. ஆம்பிளைன்னா கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருப்பாங்கன்னு எனக்கே அட்வைஸ் பண்ணாங்க. பல்லைக் கடிச்சிகிட்டு பொறுத்துகிட்டேன்! ச்சே இந்த வாழ்க்கையே வேண்டாமின்னு நினைச்சப்போ காலம் கடந்திடுச்சு. நான் அப்போது மூணு மாசம் குழந்தையை காரணம் காட்டி என் கணவர்கிட்டே எவ்வளவோ மன்றாடினேன்.

கோபம், அன்பு எல்லா ஆயுதங்களையும் பயன்படுத்தி பார்த்துட்டேன். ஒரு பிரயோஜனமும் இல்லை. கொஞ்ச நாள் விட்டுப் பிடிச்சா எல்லாம் சரியாயிடுமேன்னு நினைச்சேன். ஆனா என் கண் முன்னாடியே அவர் வேறொருத்தியோட கை கோர்த்துகிட்டு சே! பார்க்க முடியலை வீணா!

கல்லூரி நாள்ல ஆம்பிளைங்க மட்டும்தான் இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கணுமா நானும் செய்வேன்னு வாய் கிழிய பேசினவதான் நான், ஆனா நடைமுறைக்கு சாத்தியப்படலைடி! ஒரு நரக வாழ்க்கையில் இருந்து வெளியே வர நான் இப்ப யோசிக்கிறேன் வீணா.''

''கடைசியில் நீயும் என் முடிவிற்கே வந்திட்டேன்னு சொல்லு'' - வீணா.

''உன்னை மாதிரி நல்லவங்க மத்தியில் இருந்து நான் வெளியேறத் துடிக்கலை. அதுதான் நம்ம இரண்டு பேருக்கும் உள்ள வித்தியாசம்.''

"வீணா சொல்றேன்னு தப்பா நினைக்காதே. அர்த்தமே இல்லாத ஒரு வாழ்க்கையை நம்பி அமைதியான இந்த பூங்காவை அழிச்சிடாதே. கடவுள் புண்ணியத்தில் உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைச்சிருக்கு.

ஆடம்பரம் இல்லைன்னாலும் தங்கமான குணத்தில ஒருத்தரை உனக்குக் கல்யாணம் செய்து வைச்சிருக்கார் உங்கப்பா. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யறா மாதிரி கிடைச்ச நல்லதை தொலைச்சிட்டு நிக்காதே!"

"அதுக்காக எனக்குன்னு லட்சியம் எதுவும் இருக்கக் கூடாதா அபி?"

"அது ஒரு வட்டத்திற்குள் இருந்தா தாண்டி நமக்கு பாதுகாப்பு. அதன் பின்னாடியே ஓடிகிட்டு இருந்தீன்னா ஒரு இடத்திலே நீ மூச்சு வாங்கி நிக்கிறப்போ உனக்காக ஒரு உறவு கூட இருக்காது. வாழ்க்கைக்கு வசதி முக்கியம் தான்! ஆன அதை விட அன்பு ரொம்பவே முக்கியம். நீ காலம் பூரா கன்னியாவே இருப்பியா, எப்படியும் கல் யாணம் பண்ணிக்குவேயில்லை, அப்புறம் என்னடி கோபம்? இப்ப நீ செய்யற ஒவ்வொரு செயலினாலும் பாதிக்கிறது. அவங்க இல்லை நீதான்!"

"இப்ப என்னை என்ன பண்ணச் சொல்றே?" வீணா வின் குரலில் சிறு எரிச்சல்.

"உன் குடும்பத்தோட சேர்ந்து நல்லபடியா வாழணுன்னு சொல்றேன்."

"எனக்கு ஒரே குழப்பமாயிருக்கு அபி! எந்த முடிவிற் கும் வர முடியலை!

"இதிலே குழம்பறதுக்கு ஒண்ணுமேயில்லை. நீ இவ்ளோ தயங்கிறதைப் பார்த்தா அந்த கிரிதரை இன்னும் மறக்கலை அப்படித்தானே?"



சுறுக்கென்று நெஞ்சில் முள் தைத்தது போல் இருந்தது வீணாவிற்கு!

பார்க்கில் தோழி பேசியதையெல்லாம் அசை போட்டுக் கொண்டிருந்தாள் வீணா. அபி சொன்ன வார்த்தைகளில் இருந்த நிஜம் அவளை உறுத்தினாலும் அதை யோசிக்க முடியாத அளவிற்கு கிரிதரின் நினைப்பு மூழ்கடித்தது.

அப்பாவுடன் கம்பெனி சம்பந்தப்பட்ட விழாவொன் றில் தான் கிரிதரை சந்தித்தாள் வீணா! எறும்புகளைப் போல் அவனைச் சுற்றி இளம் பெண்கள் மொய்த்துக் கொண்டிருந்தார்கள். எந்த பொண்ணையும் எளிதில் வசீகரிக்கும் திறன் உள்ளவன் கிரிதர், தன் புன்னகையால் வீணாவையும் ஈர்த்தான். அதன் பிறகு அவர்களுக்குள் எதைச்சையாக இரண்டு சந்திப்புகள் நிகழ்ந்தது.

புஷ்பலிங்கம் முதலில் திருமணப் பேச்சை எடுத்ததும் அவனைப் பற்றிச் சொல்லலாம் என்ற நினைப்பில் மண் விழுந்ததைப் போலிருந்தது. கிரிதர் யாரோ ஒரு பெண் ணுடன் வெளிநாடு சென்றிருக்கிறான் என்று அபி மூலம் வந்த தகவல்.

தன் மனதில் உள்ளதைப் பற்றி அவனிடம் தெரிவிக் காமல் அவனுக்காய் காத்திருப்பது மடத்தனம் என்றுணர்ந் தாலும் அப்பாவின் அவசரமும், சொத்து தன்னை விட்டுப் போய் விடும் என்ற நினைப்பும் ஒன்று சேர வேறு வழியின்றி தலையசைத்தாள் வீணா.

அன்று மனதில் புதைத்த கிரிதரின் நினைவுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து விட்டாள் அபி.

தொலைபேசி அழைக்க எடுத்து காதிற்கு கொடுத்தாள் வீணா.

''ஹலோ!''

''நான் லேடிஸ் கிளப் பிரசிடெண்ட் கமலா பேசுறேன் வீணா தானே பேசுறது?''

''சொல்லு கமலா நான்தான்.''

''நம்ம கிளப் மீட்டிங் நாளைக்கு ப்ளூ ஸ்கை ஓட்டலில் நடைபெற இருக்கு. மறக்காம வந்துடு!''

''எத்தனை மணிக்கு?''

''மாலை 6 மணிக்கு!''

''கண்டிப்பா வந்திடறேன்'' வீணா ரிசீவரைக் கவிழ்த் தாள். அறைக்குத் திரும்பினாள்.

அப்போது தான் கல்லூரி விட்டு வீட்டிற்குள் நுழைந்த நந்தினி, அம்மா வாசலில் நிற்காதது கண்டு திகைத்தாள். மூன்று மணிக்கே கல்லூரி விட்டு வருபவள் நந்தினி. இன்று நாலு மணி ஆகிவிட்டது. ஐந்து நிமிடம் லேட்டா னாலும் வாசலுக்கும், சமையல் கட்டிற்கும் நடையாய் நடப்பவர் மரகதம்.

இன்னைக்கு நல்லா திட்டு உண்டு என்று எண்ணி வந்தவளுக்கு அம்மாவின் தரிசனம் கிட்டவில்லையே என்று ஆச்சரியமாய் இருந்தது. ஒரு வேளை உடம்பு முடியாமல் படுத்து விட்டாரோ. மனதிற்குள் கலங்கியபடி சமையலறைக்குள் நுழைந்தவள்.

தலையில் கைவைத்து சுவரோடு சாய்ந்து அமர்ந் திருக்கும் தாயிடம் சென்று, ''என்னம்மா இது? மணி நாலாகப் போகுது இங்கே வந்து உட்கார்ந்துகிட்டு இருக் கீங்களே?'' என்று உலுக்க அதன் பிறகுதான் சுயநினை விற்கு வந்தார் மரகதம்.



''நந்தினி... நந்தினி... வந்துட்டியா?'' - பதறினார் மரகதம்.

தாயின் முகம் ஏகத்திற்கு வெளுத்து இருந்ததைக் கண்டு மகளும் பதற்றத்துடன் ''என்னம்மா என்ன ஆச்சு? உடம்பு சரியில்லையா?''

''உத்ரா ஏதோ காணிக்கை அது இதுன்னு சொல்லி இதோ இந்த பருப்பு டப்பாவில் ஒரு ஜோடி தங்க வளை யலைப் போட்டு வைச்சிருக்கா. நான் அதைப் பார்த்திட்டு அப்பா ஆபீஸ் போனதுக்கப்புறம் கொடுக்கலாம் என்று எடுத்து வைச்சிருந்தேன். வேலை ஜோரில் மறந்திட் டேன். ஞாபகம் வந்து பார்த்தா அதைக் காணலை நந்தினி.''

''என்னம்மா இது? இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறீங்க. நல்லா யோசிச்சு சொல்லுங்கம்மா. நிஜமா இங்க தான் வைச்சு இருந்தீங்களா?''

''எனக்கு நல்லா ஞாபகம் இருக்குடி'' இன்னும் சற்று நேரம் பொறுத்தால் மரகதம்மாள் அழுதே விடுவார் போலும்.

''சரிம்மா உன்னைத் தவிர வேறு யாராவது இங்கே வந்தாங்களா?'' என நந்தினி கேள்வியெழுப்பிய பிறகே வீணா இரண்டு முறை சமையலறைக்குள் வந்து போனது ஞாபகம் வந்தது. அதை நந்தினியிடம் சொல்லியதும் இருவரும் அவளிடம் எப்படி கேட்பது என்று குழம்பி னார்கள்.

''வேற வழியே இல்லைம்மா போய் அண்ணியை கேக்கிறதுதான் நல்லது கிளம்பும்மா'' என்று அவரை எழுப்பி வெளியே வரும்போது வாசலில் நிழலாடியது.

வாயிலில் உத்ரா நின்று கொண்டு இருந்தாள். மரகதம்மாளை நோக்கி வலக்கையை நீட்ட அதில் இரண்டு தங்க வளையல்கள் அவரைப் பார்த்து கண் சிமிட்டியது.

''அத்தை இப்ப வேணுன்னா நீங்க இந்தக் காணிக்கையை ஏத்துக்காம இருக்கலாம். ஆனா நிச்சயம் ஒரு நாள் ஏத்துக்குவீங்க. அதுவரையில் இது பூஜையறையில் இருக்கும்.''

''அங்கே வேண்டாம்மா வேற எங்கயாவது பத்திரமா நீயே வைச்சிக்க'' என்றார் மரகதம்.

''பயப்படாதீங்க அத்தை, மாமா கண்ணில் படறா மாதிரி நிச்சயம் வைக்க மாட்டேன்'' அவள் போய் விட்டாள்.

மரகதம்மாவும், நந்தினியும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர்.

''எம்மா காணாம போன வளையல் எப்படிம்மா அண்ணி கையில் கிடைச்சது?''

''அதாண்டி எனக்கும் தெரியலை. ஒரே குழப்பமா இருக்கு'' வாயிலில் சபேசன் வரும் அரவம் கேட்கவும் ''சரிசரி அப்பா வந்துட்டாரு. இதைப் பத்தி எதுவும் பேசாதே'' என்று நந்தினியிடம் கூறி விட்டு கணவரை கவனிக்க ஓடினார் மரகதம்.



## 11



கையில் ஏர் பேக்குடன் நிற்கும் மகனை அதிசயமாய்ப் பார்த்தார் மரகதம்மாள்.



''எங்கே கிளம்பிட்டே ரகு?''

''ஆபீஸ் வேலையா இரண்டு நாள் வெளியூர் போறேன்.''

''வெளியூருக்கா? எங்கே?''

''பெங்களூர்! வீணா எங்கேம்மா?''

''வழக்கம் போலத்தான். அவங்க வீட்டுக்கு அரைமணி முன்னாடித்தான் கிளம்பிப் போனா. ஆமா அப்பாகிட்ட சொல்லிட்டியா?''

''சொல்லிட்டேம்மா ட்ரையினுக்கு டயம் ஆயிடுச்சு வரட்டுமாம்மா?''

'வேலைக்குச் சென்று ஏழு வருடங்கள் ஆகிறது. இதுவரையில் எந்த வெளியூர் வேலைக்கும் சென்றதில்லை. இப்போது மட்டும் என்ன?' புறப்படுகையில் கேட்பது நன்றாயிராது என்று அவர் ஏதும் கேட்கவில்லை. ஆனால், ''தெருமுனையில் பிள்ளையார் கோவில்ல ஒரு நிமிஷம் நின்று கும்பிட்டுப் போப்பா போற காரியம் நல்லபடியா நடக்கும்'' என்று மட்டும் சொன்னார்.

''சரிம்மா'' என்று உரைத்து விட்டு கேட்டைத் தாண்டி தெருவில் நடந்தான் ரகு.

சோம்பலான ஞாயிறு காலையில் கட்டிலில் கண் மூடி கனவு ஒன்றில் லயித்திருந்தாள் உத்ரா.

அடுக்களையில் இருந்து ஏதோ சப்தம் கேட்க, அந்த அரைத் தூக்கமும் அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்றது. அடித்து பிடித்து சமையலறைக்கு ஓடினாள் அங்கே.

லுங்கி, பனியன் தலையில் முண்டாசு கட்டு சகிதமாய் கையில் கரண்டியோடு அடுப்புடன் போராடிக் கொண்டு இருந்தான் அருண்.

''இங்கே என்ன பண்ணிகிட்டு இருக்கீங்க?'' என்ற படியே அவன் முன்னால் வந்து நின்ற உத்ரா அவன் முகத்தைப் பார்த்ததும் அடக்க மாட்டாமல் சிரித்து விட்டாள்.

''ஏய் இப்ப எதுக்கு சிரிக்கிறே?''

''முதல்ல நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க. என்ன பண்ணிட்டு இருக்கீங்க?''

''பார்த்தா தெரியலை சமையல் பண்ணிகிட்டு இருக்கேன்.''

''உங்களுக்கு எதுக்கு இந்த வீண் வேலை?''

''எது வீண் வேலை? சமையல் என்ன உங்க ஏகபோக உரிமையா? இன்னைக்கு நான் சமைக்கிறேன். நீ சாப்பிடறே. தினம் தினம் உப்பு சரியா இருக்கா, வாசனை நல்லா இருக்கான்னு கேட்டு புருஷனை கஷ்டப்படுத்திற பொண்டாட்டிக்கு எல்லாம் இது ஒரு பாடமா இருக்கட்டும்'' என்று பாவனையோடு வீர வசனம் பேசிய கணவனை கண்டு கண்களில் நீர் பொங்கச் சிரித்தாள் உத்ரா.

''என்ன நீ சும்மா சும்மா சிரிக்கிறே. என்னை பார்த்தா கிண்டலா இருக்கா?''

''ஸாரி அருண் ஒரு சின்ன சந்தேகம் கேட்கட்டுமா?''

''சீக்கிரம் கேளு எனக்கு நிறைய வேலையிருக்கு.''

''சமையல் பண்றது கேஸ் அடுப்புல எப்படி உங்க முகத்திலே கரி வந்தது?''

''ஹி... ஹி... அது பிளாக் இங்க் நான் வேலை செய்யறேன்னு உனக்குத் தெரிய வேணாமா அதான்!''



''அய்யோ கடவுளே சரி. இவ்ளோ நேரம் என்ன சமைச்சீங்க?''

''அஞ்சு நிமிஷமா கஷ்டப்பட்டு சுடு தண்ணி வைச்சிருக்கேன். இன்னைக்கு முழுக்க நல்ல பிள்ளையா இதை குடிக்கிறே.''

''அய்யய்யோ'' என்று அவள் பதற என்ன என்ன என்று அவன் உருக, ''எனக்கு சுடு தண்ணி குடிச்சுப் பழக்கம் இல்லையே அருண்.''

''சரி இன்னைக்கு ஒரு அஞ்சு மணிக்கு ரெடியாயிடு நாம வெளியே போறோம்'' என்றான் முகத்தை சீரியஸாய் வைத்துக் கொண்டு.

''எங்கே?''

''ட்ரைனிங் இன்ஸ்ட்டியூட்டுக்கு'' - அருண்.

''அங்கே எதுக்கு?'' அவள் புரியாமல் விழிக்க, ''ஒரு மாதம் சுடுதண்ணி குடிக்க பழகிக்கோ'' என்று சிரிப்பை மென்றபடி அவன் சொல்ல.

''உங்களை?'' என்று அவன் மேல் பாய்ந்தவளை அணைத்தான்.

''விடுங்க அருண் விடிஞ்சு ரொம்ப நேரம் ஆகுது. நான் குளிக்கப் போறேன்.''

''நீயேன் கவலைப்படறே கண்ணம்மா! வா நான் எதற்கு இருக்கேன். நானே உன்னை குளிப்பாட்டி விடுகிறேன்!''

''அலையாதீங்க எனக்கு கையிருக்கு நானே குளிச்சிக்கிறேன்.''

''இது அநியாயம். ஒரு புருஷனுடைய ஜீவாதார உரிமையை நீ பலவந்தமா பறிக்கிறே?''

''என்ன இன்னைக்கு ரொம்ப ஜாலி மூட்ல இருக்கீங்க?''

''இரண்டு நாளா நீ ரொம்பவும் டல்லா இருக்கே? உன்னை நல்ல மூடுக்கு கொண்டு வரலாமின்னுதான்! ஏதாவது பிரச்சினையா டியர்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை அருண்!''

''உன் மனசில எதையோ வைச்சிகிட்டு புழுங்கிகிட்டு இருக்கே.''

அவள் மௌனமாயிருந்தாள். ஆதரவாய் தலையை வருடினான்.

''உத்ரா நடக்கறது எல்லாம் நல்லதுக்குத்தான். உன்னால எதையும் சாதிக்க முடியும். காரியம் சாதிக்க பொறுமையும் அமைதியும் மட்டுமில்லை தளராத மனசும் முக்கியம். உன்னை எல்லோரும் ஒரு நாள் நிச்சயம் புரிஞ்சிப்பாங்க அது மட்டுமில்லை. நீ சந்தோஷமா இருந்தாத்தான் நானும் நிம்மதியா இருப்பேன்.''

''சரி இனிமே எப்பவுமே நான் டூத் பேஸ்ட் விளம்பரம் மாதிரி சிரிச்சுகிட்டே இருக்கேன் போதுமா! விடுங்க அருண் நான் குளிக்கணும் ப்ளீஸ்.''

''ஓ. யெஸ்! நானும் ரெடி, வா சேர்ந்தே குளிக்கலாம்!''

''ச்சீ...'' என்ற அவளின் வெட்கத்தை தன் இதழால் துடைத்துக் கொண்டே குளியலறைக்குள் அழைத்துச் சென்றான் அவன். தண்ணீர் இரைச்சலையும் மீறி கேட்ட அவர்களின் கொஞ்சல் மொழிகள் ஜன்னலோரம் அமர்ந்திருந்த குருவியை அதன் துணை தேடி ஓடச் செய்தது.

ஹோட்டல் ப்ளூ ஸ்கை தங்க சரிகையை போர்த்திக் கொண்ட விளக்குகளிலிருந்து வெளிச்சத்தை பாய்ச்சிக்



கொண்டு இருந்தது. ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குரிய தகுதிகள் அனைத்தும் அங்கு நிரம்பி வழிய, விழா ஆரம்பித்து பதினைந்து நிமிடங்கள் கடந்த பின்னர் நீல நிற சீருடையணிந்த ஒருவன் வீணாவின் அருகில் வந்து ''மேடம் எங்கள் ஓட்டல் அதிபர் தங்களை பார்க்க விரும்புகிறார்!'' என்று காதருகில் கிசுகிசுக்க முகம் நிறைய திகைப்பை பூசிக் கொண்டு அவன் பின்னே தொடர்ந்தாள் வீணா.

விழா நடக்கும் தளத்தை விட்டு சற்று அதிகமாகவே ஒதுங்கி இருந்தது அந்த அறை. பணியாளன் விலகிக் கொள்ள கதவை ஒரு முறை தட்டி விட்டு உள்ளே நுழைந்தாள் வீணா.

''வெல்கம் வீணா!'' என ஆர்ப்பரிக்கும் குரலோடு வரவேற்றான் கிரிதர்.

''கிரி நீங்களா, நீங்க எப்படி இங்கே?'' ஆச்சரியம் கக்கும் விழிகளோடு கேட்டாள் வீணா.

''நான்தான் இந்த ஓட்டல் உரிமையாளன்! உங்க மீட்டிங் இன்று நடக்கப் போகிறது என்று தெரிந்துதான் நானே இங்கு வந்தேன். அதுவும் உனக்காக!''

''எனக்காகவா?''

''ஆமாம் வீணா உனக்காகத்தான்! உட்கார் என்ன சாப்பிடறே?''

''ஒண்ணும் வேண்டாம் கிரிதர் நீங்க எப்படியிருக்கீங்க!'' என்றாள் சேரில் அமர்ந்தபடியே,

''ம்... பைன் வீணா! எனக்கு சுத்தி வளைச்சு பேசத் தெரியாது. நேரடியாகவே கேட்கிறேன். நடந்ததெல்லாம் கேள்விப்பட்டேன். உன் வாழ்க்கையில் நீ சந்தோஷமா இல்லைன்னு எனக்குத் தெரியும்.''

"என்ன இன்னைக்கு ரொம்ப ஜாலி மூட்ல இருக்கீங்க?''

''இரண்டு நாளா நீ ரொம்பவும் டல்லா இருக்கே? உன்னை நல்ல மூடுக்கு கொண்டு வரலாமின்னுதான்! ஏதாவது பிரச்சினையா டியர்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை அருண்!''

''உன் மனசில எதையோ வைச்சிகிட்டு புழுங்கிகிட்டு இருக்கே.''

அவள் மௌனமாயிருந்தாள். ஆதரவாய் தலையை வருடினான்.

''உத்ரா நடக்கறது எல்லாம் நல்லதுக்குத்தான். உன்னால எதையும் சாதிக்க முடியும். காரியம் சாதிக்க பொறுமையும் அமைதியும் மட்டுமில்லை தளராத மனசும் முக்கியம். உன்னை எல்லோரும் ஒரு நாள் நிச்சயம் புரிஞ்சிப்பாங்க அது மட்டுமில்லை. நீ சந்தோஷமா இருந்தாத்தான் நானும் நிம்மதியா இருப்பேன்.''

''சரி இனிமே எப்பவுமே நான் டூத் பேஸ்ட் விளம்பரம் மாதிரி சிரிச்சுகிட்டே இருக்கேன் போதுமா! விடுங்க அருண் நான் குளிக்கணும் ப்ளீஸ்.''

''ஓ. யெஸ்! நானும் ரெடி, வா சேர்ந்தே குளிக்கலாம்!''

''ச்சீ...'' என்ற அவளின் வெட்கத்தை தன் இதழால் துடைத்துக் கொண்டே குளியலறைக்குள் அழைத்துச் சென்றான் அவன். தண்ணீர் இரைச்சலையும் மீறி கேட்ட அவர்களின் கொஞ்சல் மொழிகள் ஜன்னலோரம் அமர்ந்திருந்த குருவியை அதன் துணை தேடி ஓடச் செய்தது.

ஹோட்டல் ப்ளூ ஸ்கை தங்க சரிகையை போர்த்திக் கொண்ட விளக்குகளிலிருந்து வெளிச்சத்தை பாய்ச்சிக்



கொண்டு இருந்தது. ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குரிய தகுதிகள் அனைத்தும் அங்கு நிரம்பி வழிய, விழா ஆரம்பித்து பதினைந்து நிமிடங்கள் கடந்த பின்னர் நீல நிற சீருடையணிந்த ஒருவன் வீணாவின் அருகில் வந்து "மேடம் எங்கள் ஓட்டல் அதிபர் தங்களை பார்க்க விரும்புகிறார்!'' என்று காதருகில் கிசுகிசுக்க முகம் நிறைய திகைப்பை பூசிக் கொண்டு அவன் பின்னே தொடர்ந்தாள் வீணா.

விழா நடக்கும் தளத்தை விட்டு சற்று அதிகமாகவே ஒதுங்கி இருந்தது அந்த அறை. பணியாளன் விலகிக் கொள்ள கதவை ஒரு முறை தட்டி விட்டு உள்ளே நுழைந்தாள் வீணா.

''வெல்கம் வீணா!'' என ஆர்ப்பரிக்கும் குரலோடு வரவேற்றான் கிரிதர்.

''கிரி நீங்களா, நீங்க எப்படி இங்கே?'' ஆச்சரியம் கக்கும் விழிகளோடு கேட்டாள் வீணா.

''நான்தான் இந்த ஓட்டல் உரிமையாளன்! உங்க மீட்டிங் இன்று நடக்கப் போகிறது என்று தெரிந்துதான் நானே இங்கு வந்தேன். அதுவும் உனக்காக!''

''எனக்காகவா?''

''ஆமாம் வீணா உனக்காகத்தான்! உட்கார் என்ன சாப்பிடறே?''

''ஒண்ணும் வேண்டாம் கிரிதர் நீங்க எப்படியிருக்கீங்க!'' என்றாள் சேரில் அமர்ந்தபடியே,

''ம்... பைன் வீணா! எனக்கு சுத்தி வளைச்சு பேசத் தெரியாது. நேரடியாகவே கேட்கிறேன். நடந்தெல்லாம் கேள்விப்பட்டேன். உன் வாழ்க்கையில் நீ சந்தோஷமா இல்லைன்னு எனக்குத் தெரியும்.''

சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டான்.

"கடந்த ஆறு மாத காலமாக நான் உன்னை கவனிக்கிறேன். உப்பு சப்பில்லாத இந்த வாழ்க்கை வாழறதை விட என் கூட வந்துடேன். உன்னை ராணி மாதிரி நான் வைச்சிக்கிறேன்" அந்த கடைசி வார்த்தைக்கு அதிக அழுத்தம் கொடுத்தான்.

"அப்படின்னா என்னை கல்யாணம் செய்துக்கப் போறீங்களா கிரிதர்?"

"ச்சே கல்யாணமா எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கையே இல்லை. படிச்சவ நீயே இப்படி பத்தாம் பசலித்தனம் பேசுறீயே."

"கல்யாணம் பத்தாம் பசலித்தனமா கிரிதர்?" அவள் குரலில் ஏளனம்.

"நிச்சயமா நம்ம மாதிரி ஹை சொசைட்டி ஆளுங்களுக்கு அது பத்தாம் பசலித்தனம்தான். ஆப்ட்ரால் ஒரு கயிறு அதுக்கு நீ இவ்வளவு மதிப்பு கொடுக்கிறது எனக்கு ரொம்ப ஆச்சரியமாயிருக்கு. அதுவும் பாரின்ல போய் செட்டில் ஆகணும் என்று ஆசைப்படற பொண்ணு, இதெல்லாம் எதிர்பார்க்கலாமா? இந்த விஷயம் எல்லாம் அங்கே ரொம்ப சகஜம்."

"அப்ப என்னை உனக்கு வைப்பாட்டியா இருக்க சொல்றியா?" வார்த்தைகளில் கோபம் வெடிக்கக் கேட்டாள் வீணா.

"கெட்ட வார்த்தைகளை யூஸ் பண்ணாதே வீணா. ஒரு காலத்தில் நீ என்னை விரும்பினே! அப்ப எனக்கு நீ கிடைச்சிருந்தாலும் ஒரு வேளை கல்யாணம் பத்தி நான் யோசிச்சிருக்கலாம்! ஆனா இரண்டு வருஷம் ஒருத்த



னோட வாழ்ந்தவளைப் போய் என் மனைவியாக்கிகிட்டா என் கெளரவம் என்னாகுறது?"

வீணாவிற்கு நெருப்பின் மேல் நிற்பதைப் போல இருந்தது. எவ்வளவு மட்டமாய் எடை போட்டு விட்டான் இவன்.

"மனசில் இவ்வளவு அழுக்குள்ள உனக்கு என்ன கெளரவம் இருக்குன்னு நினைக்கிறே?"

"ஏய் என்ன வாய் ரொம்ப நீளுது?" கர்ஜித்தான் கிரிதர்.

"சும்மா கத்தாதே, உன்னைச் சொல்லித் தப்பில்லை. உன்கூட இவ்வளவு நேரம் பேசிக்கிட்டு இருக்கேன் பார் என்னைச் சொல்லணும்" அவள் எழுந்தாள்.

"எதுக்கும் உதவாத ஒருத்தனை புருஷனா அடைஞ்சிருக்கும் உனக்கு இவ்வளவு திமிரா?"

"ஏய் என் புருஷனைப் பத்தி பேசுவதற்கு உனக்கு என்ன தகுதியிருக்கு இடியட்! அவருக்கும் உனக்கும் ஏணி வைச்சாக்கூட எட்டாது. ச்சீ! உன்கூடப் பேசறதே எனக்கு அசிங்கம். இன்னையோட என்னைப் பிடிச்ச சனியன் தொலைஞ்சது என்று நினைக்கிறேன் குட்பை!" அவள் வெளியேறினாள்.

போகும் அவளையே பார்த்துக் கொண்டு அருகிலிருந்த இண்டர்காமில், "வீணா போயிட்டா! நீங்க வரலாம்" என புகை வழியும் வாயோடு ரகசியம் பேசினான் கிரிதர். அபி கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.



## 12



"ரொம்ப நன்றி கிரிதர் இவ்வளவு வேலைக்கு நடுவிலும் நீங்க செய்த உதவியை என்னால மறக்க முடியாது."

"இதிலென்ன இருக்கு? வீணாவின் அப்பா மேல் எப்பவுமே எனக்கு மரியாதை உண்டு. அவர் வருத்தப்படக் கூடாதுன்னுதான் இதை செய்தேன்."

"இனிமே அவர் கவலைப்பட மாட்டார் கிரிதர்!"

"எப்படி அவ்வளவு நிச்சயமா சொல்றீங்க?"

"ரகுவைப் பத்தி நீங்க பேசின ஒரு வார்த்தையைக்கூட அவளால் தாங்க முடியலை. அதனால ரகு மேல அவளுக்கு ஒரு மதிப்பு இருக்கு. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அது இன்னும் உயரும் என்று நினைக்கிறேன்."

வீணா சாலையோரம் நடந்து கொண்டிருந்தாள். மனம் நெருப்பாய் எரிந்தது. இந்த அயோக்கியனுக்காகவா பெற்ற தந்தையிலிருந்து கட்டிய கணவன் வரை எல்லோரையும் அவமதித்தேன்?"

சடசடவென்று மழை தூற நினைவுகள் கலைந்தவளாய் ஒரு வீட்டின் தாழ்வாரத்தில் அடைக்கலம் புகுந்தாள்.

உள்ளே யெழுந்த பேச்சுக் குரல்கள் யார் அனுமதியில்லாமலும் அவள் காதில் விழுந்தது.

"என்னங்க இது எவ்ளோ சீக்கிரம் கை அலம்பிட்டீங்க. கொஞ்சம் கூட சாப்பிடலையே?" ஏக்கமாய் கேட்டாள் ஒரு இளம்பெண்.



"போதும் கவிதா! எவ்வளவு சாப்பிடறது. நீ இங்கே உக்காரு உன்னோடு பேசணும். இதுநாள் வரை எப்படியோ, இனிமே உன்னை கண்கலங்காம நான் பார்த்துப்பேன். இது சத்தியம்!"

"அய்யோ இப்ப எதுக்கு பெரிய வார்த்தையெல்லாம் பேசுறீங்க?"

"இல்லை கவிதா எத்தனை தவறுகள் செய்திருக்கேன். அத்தனையும் பொறுத்துகிட்டே. என்னைப் பத்தி தவறா ஒரு வார்த்தை சொன்னதற்காக பெத்தவங்களையே தூக்கி எறிஞ்சிட்டியேம்மா" அவன் கண்கள் கலங்கியது.

"பெத்து வளர்த்த அப்பா அம்மான்னாலும் கூட தாலி கட்டின புருஷனை கேவலமாய் பேசினாலும் எந்த பெண்ணும் பொறுத்துக்க மாட்டாங்க. உங்களை விட வசதி வாய்ப்பு முக்கியமின்னு நான் என்றைக்குமே நினைச்சதில்லை. பிடிக்காத மனைவி கூட புருஷனை அடுத்தவன் தப்பா பேச அனுமதிக்கமாட்டா! அதுதான் தாலியோட புனிதம்! கண்டதைப் போட்டுக் குழப்பிக்காம போய் படுங்க உங்களுக்குப் பால் கொண்டு வரேன்."

அத்தனையும் வெளியே நின்றவளின் காதில் விழுந்தது. கடவுளே இந்த பெண் தன் தாலிக்கு எவ்வளவு மதிப்பளிக்கிறாள். நான் ஒரு நாள்கூட இதை பூஜிக்கவில்லை. நான்தான் ரகுவை தவறாக எடைபோட்டு விட்டேன். பகட்டை நம்பி பாசத்தை இழக்கத் தயாராய் இருந்தேனே.

மழை கொஞ்சம் விட்டிருந்தது. முதன் முதலாய் தந்தை தனக்கு நல்லதுதான் செய்திருக்கிறார் என்ற எண்ணம் எழுந்தது. வீட்டினுள் நுழைந்தவள் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள்.

வீணா இரவு உணவிற்கு கூட வெளியே வரவில்லையே, மாகதத்திற்கு அவளை அழைக்கவே பயமாயிருந்தது என்ன செய்வது என்று கைகளைப் பிசைந்து கொண்டே இருந்தபோது ரகு உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

''வாப்பா ரகு நாளைக்குத்தானே வருவேன்னு சொல் லிட்டுப் போனே?''

''வேலை சீக்கிரம் முடிஞ்சிருச்சிம்மா!''

''ரொம்ப களைப்பா தெரியிறியேப்பா வேலை ரொம்ப அதிகமா?''

''களைச்சிப் போயிருக்கிறது உடம்பு இல்லைம்மா மனசு'' என்று சொல்ல நினைத்தவன் வாயை மூடிக் கொண்டான்.

பின்கட்டுல சுடுதண்ணி வைச்சி அதிலே நீலகிரி தைலத்தை கலந்து வைக்கிறேன். முதல்ல குளி. உடம்பு வலி எல்லாம் பறந்திடும்.''

''சரிம்மா'' என்று நகர்ந்தவனை நிறுத்தி, ''ரகு! வீணா இன்னும் சாப்பிட வரலை. குளிச்சிட்டு அவளையும் கூட்டிட்டு வா தட்டு வைக்கிறேன்.''

''அவ ஏன் இன்னும் சாப்பிடலை?''

''என்னமோ பார்ட்டிக்கு போனா சீக்கிரமே திரும்பிட்டா அதிலிருந்து ரூமிற்குள்ளேயே இருக்கா. வெளியே வரவேயில்லை.''

ரகுவிற்கு துணுக்குற்றது ''நீங்க போங்கம்மா நான் இதோ வரேன்'' கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவனின் பார்வை வீணாவின் மேல் விழுந்தது.

''வீணா சாப்பிடலையா?''

''பசிக்கலை!'' கட்டிலில் இருந்து எழுந்தமர்ந்தாள். அழுதிருப்பாள் போலும் முகம் சற்றே வீங்கி களை இழந்



திருந்தது. ரகு மனம் குமைந்து போனான். ''எல்லாம் என்னால்தானே வீணா!'' என்று அவன் கேள்வியெழுப்ப-

''என்னது?'' - வீணா

''உன் அழுகைக்கு காரணம் நான்தானே! சொத்துக் காகத்தான் இந்தக் கல்யாணத்தை பண்ணிகிட்டாயாமே, மாமா சொன்னார் என்னிடம்! ஒரு வார்த்தை சொல்லி யிருந்தால் நான் மறுத்து இருப்பேனே உன்னுடைய சந்தோஷத்திற்குத்தான் நான் தடையாய் இருக்கிறேனே. அந்த நினைவே என்னைக் கொல்லுது வீணா!''

உன்னை நிம்மதியாகவும், அன்பாகவும் வாழ வைக் கிறேன் என்றுதானே அக்னி சாட்சியின் முன் வலம் வந்தேன். அன்பு என்னிடம் கொட்டி கிடக்கிறது. ஆனால் ஏற்க உனக்கு மனமில்லை. அந்த நிம்மதியை மட்டு மாவது உனக்குப் பரிசாய் தர நான் முடிவெடுத்து விட் டேன்.''

அவள் முன்னே இரண்டு பத்திரங்களை நீட்டினான். ''இதோ மாமா என் பெயரில் எழுதியுள்ள ஆஸ்தியை உன் பெயருக்கு நான் மாற்றியிருக்கும் பத்திரம்! அதோடு உனக்கு விடுதலைப் பத்திரமும் இதில் உள்ளது. அதில் கையெழுத்தும் போட்டு இருக்கிறேன்.''

''ரகு?''

''இரு வீணா! நான் இன்னும் பேசி முடிக்கலை. மனைவி யின் மீது உண்மையான அன்பு கொண்ட எந்த கண வனும் இதைத்தான் செய்வான். ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள். அடுத்த வாரம் என் பிறந்தநாள் வருது. அதுவரையில் கொஞ்சம் பொறுத்துக் கொள். அதன் பிறகு என்னுடைய தொந்தரவு உனக்கு இருக்காது''

உணர்ச்சிகள் அடைக்கச் சொல்லி விட்டு உடைகளை அள்ளிக் கொண்டு குளிக்கச் சென்று விட்டான் ரகு.

தலையில் பாறாங்கல்லைப் போட்டது போலிருந்தது வீணாவிற்கு. கிரிதர் மூலம் ஏற்பட்ட வாக்குவாதம் பகட்டில் உள்ள பயங்கரத்தை அவளுக்கு உணர்த்தினாலும் கணவன் - மனைவி உறவிற்குள் உள்ள அழுத்தத்தை ரகுமேல் உள் மனதில் தான் கொண்டுள்ள அன்பை அவள் புரிந்த இச்சமயம், ரகுவின் சுயநலமற்ற இச்செயல் அவளை மேலும் வெட்கமடையச் செய்தது.

வீணா ரகுவிற்கு கணவனுக்குரிய எந்த உரிமையும் கொடுத்ததில்லை. ஏன் அவனை ஒரு மனிதனாகக் கூட நடத்தவில்லை. தினம் தினம் விஷமான வார்த்தைகளால் அவனைக் கொட்டித் தீர்த்தவளுக்கு, அவன் நினைத்தால் சொத்துக்களைத் தராமல் காலம் பூராவும் பழி வாங்கியிருக்கலாமே. அப்படி செய்திருந்தால் கூட தற்போது இருக்கும் தெளிந்த மனநிலையில் தான் செய்த தவறுக்கு தண்டனை என்று அகமகிழ்ந்து இருப்பாளே.

ஆனால் அவனோ தன் நற்பண்புகள் கொண்டு தன் நெஞ்சில் அடிக்கின்றானே. அய்யோ ரகு உங்களைப் போன்ற ஒரு நல்ல மனிதனை கணவனாய் அடைய நான் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும். கையில் கிடைத்த பொக்கிஷமான உங்களை நான் தொலைக்கப் பார்த்தேனே. இனி நிச்சயம் அதை தவறவிட மாட்டேன் என்று மனதிற்குள் பெரிதாய் ஓலமிட்டாள்.

சட்டென ஜன்னலின் வழியே பின்கட்டில் இருந்து மரகதம்மாளின் கிசுகிசுப்பான குரல் கேட்டது. காதை கூர்மையாக்கினாள்.



ரகுவின் முடிவு கேட்டு அதிர்ந்தது வீணா மட்டுமல்ல, சாப்பாட்டுக்கு அவர்களை அழைக்க வந்த மரகதம்மாளும்தான்.

ரகுவின் பேச்சை பாதியில் இருந்து கேட்ட மரகதம்மாள் தன் மகன்தான் தவறான முடிவு செய்துள்ளான் என எண்ணி, "ரகு என்ன விளையாடுகிறாயா? புருஷன் பொண்டாட்டி உறவுன்னா கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருக்கும். அதுவும் வீணா பெரிய இடத்துப் பெண் கட்டுப்பாடு இல்லாமல் வளர்ந்தவள். அப்படி என்னடா அவ பெரிய தப்பு பண்ணிட்டா விவாகரத்து வரைக்கும் போறதுக்கு. ஏதோ கொஞ்சம் எதிர்த்து பேசுவா ஏன் நம்ம நந்தினி பேசலை? சின்ன விஷயத்திற்காக இப்படி எடுத்தேன் கவிழ்த்தேன்னு முடிவு எடுக்கிறா மாதிரி நான் என் மகனை வளர்க்கலை."

"அம்மா."

"நீ ஒண்ணும் பேச வேண்டாம். வீணாவுக்கு என்ன குறைச்சல்! அவ நல்ல பொண்ணு ரகு. இங்கே பாருப்பா பெண் பாவம் பொல்லாதது. என் பிள்ளைக்கு அது வேண்டாம். நீ வீசிட்டு வந்த வார்த்தைகளால் அவ மனசு எவ்வளவு காயப்பட்டு போயிருக்கும் தெரியுமா. முதல்ல அவகிட்ட அதுக்கு மன்னிப்பு கேட்டுட்டு, அப்புறம் என்கிட்ட வந்து பேசு. அப்பத்தான் நீ என் பிள்ளை ஆமா சொல்லிட்டேன்."

ரகு இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்தான்.


"அம்மா எனக்கு மட்டும் அவளை தள்ளி வைக்க ஆசையா? எல்லாம் அவ நல்லதுக்குத்தானே. என்னை மன்னிச்சிடுங்கம்மா" என்று தாயிடம் மானசீகமாய் மன்னிப்பு[illegible]டுக் கொண்டான்.

அவன் அறைக்குள் நுழையும் அரவம் கேட்டதும் வீணா தூங்குவதைப் போல் கண்களை இறுக மூடிக் கொண்டாள். உள்ளே நுழைந்தவன் தன் எண்ணம் நிறைவேறியதில் நிம்மதியாய் தூங்குகிறாள் என நினைத்து மனபாரத்துடன் விளக்கை அணைத்து விட்டு கண்களை மூடினான்.

இருவரின் கண்களும் மூடியிருந்த போதும் உறக்கம் வெகுதூரம் எட்டிப் போயிருந்தது. தான் செய்த தவறுகளெல்லாம் இந்த கண்ணீரிலேயே கரைந்து போய் விடாதா என்ற நினைப்பில், சத்தம் வராமல் தலையணையை நனைத்துக் கொண்டு இருந்தாள் வீணா.



## 13



ஆபீஸிற்கு செல்லும் பெண்ணின் அவசர ஒப்பனையைப் போல ஆங்காங்கே கலைந்திருந்த மேகங்களுக்கு நடுவே சூரியன் மின்னலாய் உதயமானான். கட்டிலில் இருந்து எழுந்த உத்ரா டேப்பில் மெல்லிய நாதஸ்வர இசையை சுழலவிட்டாள். பின்னர் தன் காலை வேலைகளில் ஈடுபட்டு கொண்டு இருந்தவளின் இடையைப் பற்றி தன் மேல் சாய்த்துக் கொண்டான் அருண்.

''என்ன அருண் ஆபீஸிற்கு கிளம்பலையா?'' என்று அவன் கையை விலக்க மனமின்றி இன்னும் அதிகமாய் நெருங்கினாள்.

கூந்தலில் ஷாம்பூவின் மணத்தையும், அவளின் கழுத்து வளைவுகளில் கஸ்தூரி மஞ்சளின் சுகந்தத்



தையும் நுகர்ந்து கொண்டே ''உன்னை விட்டுப் போகவே மனசில்லைடா'' என்று நெஞ்சில் புதைந்திருந்த மனைவியின் முகத்தை நிமிர்த்தி அதரங்களில் அழுந்த முத்தமிட்டான்.

கடிகார மணி எட்டுமுறை ஒலித்து அவர்களின் இன்ப நிலையை கலைத்தது.

''சரி விடுங்க மணி இப்பவே எட்டாயிடுச்சி. இப்ப சமையல் முடிச்சாத்தான் நீங்க லஞ்ச் கொண்டு போக முடியும்'' என்று அவனை விட்டு விலக முயற்சிக்க. ''அவசரமே இல்லாம வேலை செய் கண்மணி. நான் இன்று ஆபீஸிற்குப் போகலை. நாம எல்லோரும் கபாலீஸ்வரர் கோவிலுக்குப் போகப் போறோம்.''

''நாம எல்லோருமா?'' ஆச்சரியமாய் விழிகளை மலர்த்தினாள்.

''ஆமா நீ, நான், ரகு, நந்தினி எல்லோரும் கோவிலுக்குப் போய் ஸ்பெஷலா ஒரு அர்ச்சனை செய்திட்டு வர்ற வழியில் ஓட்டல்ல டின்னர் சாப்பிடப் போறோம்.''

''என்னங்க விசேஷம்'' - உத்ரா.

''இன்னைக்கு ரகு அண்ணாவுடைய பிறந்த நாள்! வருஷா வருஷம் இந்த ப்ரோகிராம் உண்டு. இந்த வருஷம் ஸ்பெஷல்! ரகுவுக்கு முப்பது வயசு முடியப் போகுது.''

''எத்தனை மணிக்குங்க கிளம்பணும்?''

''நாலு மணிக்கு அதுக்கு முன்னாடி ரகுவுக்கு ஒரு நல்ல பரிசு வாங்கணும். நீதான் செலக்ட் பண்ணப் போறே ஓ.கே.யா?''

சிரிப்புடன் தலையசைத்தவள் சந்தேகம் கொண்டவளாய் ''ஏங்க நாம எல்லோரும் சேர்ந்து வெளியே போறது தெரிஞ்சா மாமா கோபிக்கமாட்டாரா?''

''தெரிஞ்சாதானே? அதைப்பத்தி நீ கவலைப்படாதே கண்ணம்மா! என்னைப்பத்தி கவலைப்படு'' என்று மேலும் அவளை இறுக்கினான்.

அதே நேரம் ரகுவின் அறையில்,

''நான் எங்கப்பா வீட்டிற்குப் போறேன்'' என்று குளித்த தலையை துவட்டிக் கொண்டிருந்த ரகுவின் முன்னால் வந்து நின்றாள் வீணா.

''ரகு நான் கொஞ்சம் வெளியே போறேன்'' என்றவளின் குரலை கவனியாமல் மௌனமாய் இருந்தான் ரகு.

''நான் கேட்டுக்கிட்டே இருக்கேன் ஒண்ணுமே பேசலைன்னா எப்படி. ஏதாவது பதில் சொல்லுங்க?''

''நான் சொன்னா நீ போகாம இருந்திடப் போறியா?''

''அதெப்படி எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கே கட்டாயம் போகணும்!''

''அப்போ என்னிடம் கேட்பானேன் போயிட்டு வா'' என்று சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பிய ரகுவை ஏக்கம் வழியும் பார்வையோடு பார்த்தாள் வீணா.

கடந்த ஒரு வார காலமும் வீணா அதிகம் பேச வில்லை. ரகுவின் தேவைகளை கண்ணாய் கவனித்து வந்தாள் என்று சொல்ல முடியாது. ஆனாலும் அவனே அறியாமல் சிறுசிறு உதவிகளை செய்து கொண்டுதான் இருந்தாள்.

தனிமையில் இருவரும் ஒரே அறையில் இருந்தாலும் கூச்சலும், குழப்பமுமாய் பேசிக் கொண்டு இருந்தவர்கள் இந்த ஏழு நாட்களில் வெறும் பார்வைகளோடு மட்டும் நிறுத்திக் கொண்டார்கள்.



தயக்கம் தொடர இருவருக்கும் தனித்தனிக் காரணங்கள் இருந்தன.

எங்கே வீணாவிடம் பேசினால் தன்னுடைய இறுக்கம் தளர்ந்து, ''என்னை விட்டுச் சென்று விடாதே'' என்று கெஞ்சும் நிலை வந்து விடுமோ என்பதாலேயே மௌனம் காத்தான் ரகு.

வீணாவோ தன்னைத் தொட வேண்டுமெனில் உன் குடும்பத்தைப் பிரிய வேண்டும் என்று ஈவு இரக்கமின்றி பேரம் பேசியவள் இன்று, ''நான் உங்களுடன் வாழ விரும்புகிறேன்'' என்று ரகுவின் முகம் பார்த்துச் சொல்லும் தைரியம் அவளுக்கு இல்லை. அதுவும் இல்லாமல் விவாகரத்து வரை வந்துவிட்டவன் திரும்பவும் தன்னை ஏற்பானா அப்படியே பாவம் பார்த்து ஏற்றாலும் கருணை கொண்டு தொடங்கும் தாம்பத்தியம் எவ்வளவு காலம் நிலைக்கும்.

தாலி கட்டிய கணவனை மதிக்காத தனக்கு இந்த தண்டனை தேவைதான். அவனாக இதைப்பற்றி கேட்கும் வரை தானாக ஏதும் பேச வேண்டாம் என்று மௌனம் காத்தாள் வீணா. நானே என் தலையில் மண்ணைப் போட்டுக் கொண்டேனே என்று தன் மீதே தோன்றிய கழிவிரக்கத்தால் கண்களில் நீர் சுரந்தது அவளிற்கு.

டாக்ஸியில் இருந்த அந்த நால்வரும் இறங்கினார்கள். நந்தினி ரோஜா நிற கற்கள் வேலைப்பாடு அமைந்த காட்டன் சுரிதாரை அணிந்திருந்தாள். உத்ரா கடல் நிறத்தி னால் ஆன ஷிபான் சேலையில் மிளிர்ந்தாள். புதன் கிழமையாதலால் அந்நேரத்தில் கோவிலில் கூட்டம் இல்லை.

உத்ராவின் கைகளில் ரகுவிற்காய் வாங்கிய பரிசு முழித்துப் பார்த்தது. அர்ச்சனை முடித்து விட்டு ஆலமர நிழல் ஒன்றில் நால்வரும் அமர்ந்திருந்தார்கள்.

''உத்ரா நீ இந்தக் கோவிலுக்கு வந்திருக்கியா?'' என்ற ரகுவின் கேள்வியைத் தொடர்ந்து ''ஒரே ஒருமுறை'' என பதிலளித்து சிரித்தாள் அவள்.

''ஏண்டா அருண் கிப்ட் ரொம்ப பெரிசா இருக்கே. என்ன இருக்கு உள்ளே?''

''எனக்கே தெரியாது. என்னை வெளியில் நிக்க வைச்சிகிட்டு கிட்டதட்ட அரைமணி நேரமா அவளே செலக்ட் செஞ்சா அவளையே கேட்டுக்கோ.''

''நந்தினி கடவுள் முன்னாடி ரொம்ப நேரமா வேண்டிகிட்டு இருந்தியே இந்த தடவையாவது அரியஸ் இல்லாம பாஸ் பண்ணனுமின்னுதானே'' என அருண் தங்கையை வம்பிற்கு இழுக்க,

''போண்ணா உனக்கு எப்பவுமே கிண்டல்தான். அண்ணி நீங்க என்ன வேண்டிகிட்டீங்க?'' என்று கேள்வியை அவளிடம் திருப்ப,

''அடுத்த வருஷம் நம்மகூட வீணா அக்காவும் வரணுமின்னு வேண்டிகிட்டேன்'' என்றாள் அழுத்தமாய்.

''ஏம்மா அவரை பயமுறுத்தறே. கடவுள் ரொம்பவும் கறார் பேர்வழி எப்பவோ நான் செய்த தவறுக்காக இப்ப பழி தீர்த்துக்கிறார்.''

''நீங்க வேணுன்னா பாருங்கத்தான் அடுத்த வருஷம் கண்டிப்பா அக்கா நம்ம கூட வருவாங்க.''

''வீண் கற்பனையை வளர்த்துக்காதே உத்ரா! அப்புறம் நடக்கலைன்னா நீ தாங்கமாட்ட, சொல்ல வேண்டாமின்னு நினைச்சேன். நிலைமை கைமீறிடுச்சி டைவர்ஸ் நோட்டீஸ் கூட கொடுத்தாச்சு.''



''ரகு என்ன சொல்றே?'' மூவரும் அதிர்ந்தார்கள்.

''ப்ளீஸ் இதைப்பத்தி அப்புறம் பேசுவோம். கஷ்டப்பட்டு என்னை டைவர்ட் பண்ணியிருக்கிறேன். அதை ஞாபகப்படுத்த வேண்டாம்'' என்று ரகு திட்டவட்டமாய் உரைக்க,

''அத்தான் நல்லவங்களை கடவுள் ரொம்பவும் சோதிக்க மாட்டார். மனசை தளரவிடாதீங்க'' என உத்ரா சொல்லிக் கொண்டு இருக்கும் போது ''அச்சச்சோ'' என்று வீறிட்டாள் நந்தினி.

''என்னாச்சு நந்தினி ஏன் கத்தினே?'' என்று சகலரும் பதற,

''ரகுண்ணா உனக்கு நான் வாங்கின கிப்டைக் காணோமே.''

''நீ கொண்டு வந்திருக்க மாட்டே நந்தினி மறந்திருப்பே'' - அருண்.

''இல்லேண்ணா காரை விட்டு இறங்கும்போது கூட பார்சல் இருந்ததே ஆ... பிரகாரத்திலேயே விட்டு இருப்பேன் அண்ணி ப்ளீஸ் வாங்களேன்'' என்று உத்ராவையும் கிளப்பிக் கொண்டு செல்ல குருக்கள் அர்ச்சனைக்குத் தயாரானார்.

''யார் பேருக்கும்மா அர்ச்சனை?'' என்று எதிரே நின்ற பெண்ணிடம் வினவ, ''ரகுநாதன் மீனராசி, ரேவதி நட்சத்திரம்'' என்ற வீணாவின் குரல் இவர்கள் செவிப்பறையை நோக்கி வந்தடைய இரு பெண்களும் திடுக்கிட்டார்கள்.

"என்னம்மா விசேஷம்?"

"என் கணவருக்கு இன்று பிறந்தநாள் அவர் நல்லா இருக்கணும். அம்மனை வேண்டிகிட்டு அர்ச்சனை பண்ணுங்கோ" என கண்களை மூடி பிரார்த்தித்தாள் வீணா.

உத்ரா நந்தினியின் காதிற்குள் கிசுகிசுக்க, அவள் தன் சகோதரர்கள் இருக்கும் இடத்திற்கு விரைந்தாள். வீணா கண்களை திறந்து நெற்றியிலும், தாலிச்சரட்டிலும் குங்குமம் இட்டு பயபக்தியுடன் மாங்கல்யத்தை கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

இதை அருகிலிருந்து கவனித்த இளையவள் ஒரு கணம் வீணா ரகுவிடம் கொண்டுள்ள அன்பைப் புரிந்து கொண்டாலும், இவ்வளவு அன்புள்ளவளால் எப்படி கணவனை தூக்கியெறிந்து பேச முடிகிறது என்று குழம்பினாள்.

"எனக்கு பிரசாதம் இல்லையா?" என்ற பரிச்சையமான குரல் காதருகில் கேட்டதும் நிமிர்ந்த வீணா திடுக்கிட்டாள்.

"நீ... நீயெப்படி இங்கே?" என திணறியவளைப் பார்த்து மென்மையாச் சிரித்தாள் உத்ரா.

"இங்கே எல்லாரும் பார்க்கிறாங்க. அங்கே போய் பேசலாமே" என்று ஒரு மர நிழலிற்குப் பின்னால் அவளை இழுத்துச் சென்றாள் உத்ரா.

"ம்... இப்ப சொல்லுங்க."

"என்ன சொல்லச் சொல்றே?" எரிச்சலாய் கேட்டாள் வீணா.



"கணவனை வேப்பங்காயாய் நினைச்ச ஒரு பொண்ணு அவருக்காக இப்படி கோயில்ல வந்து விழுந்து விழுந்து சாமி கும்பிட வேண்டிய அவசியம் என்ன?"

"உத்ரா இது என்னுடைய குடும்ப விஷயம். இதில் நீ தலையிட வேண்டிய அவசியம் இல்லை."

"அக்கா! ஏன் இப்படிப் பிரிச்சு பேசறீங்க. ரகு அத்தான் மேல இவ்வளவு பாசத்தை வைச்சிட்டு உங்களால எப்படி வார்த்தைகளை விஷமா கொட்ட முடிஞ்சது. இங்கே பாருங்க அக்கா! என்னை உங்க சொந்த தங்கச்சியா நினைச்சிக்கோங்க. என்னிடம் சொல்றதால உங்களுக்கு நன்மைதானே ஒழிய தீங்கு இல்லவே இல்லை."

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்களே அது போல உத்ராவின் இதமான பேச்சில் கரைந்தாள் வீணா.

சில நிமிடங்களுக்குப் பிறகு வாய் திறந்தாள். "நான் வீட்டுக்கு ஒரே பெண் செல்வமும் செழிப்புமாய் வளர்ந்தவள். யூ நோ உத்ரா வீட்ல ஒரு பூச்செடி வாங்கணுமின்னா கூட என்னைக் கேட்டுத்தான் செய்வாங்க. ஆனா என்னுடைய திருமண விஷயத்திலே மட்டும் ரொம்ப பாராபட்சமாக நடந்துகிட்டாங்க."

"ஏங்க்கா ரகு அத்தானுக்கு என்ன குறைச்சல்?"

"அவரைப் பத்தி தப்பா சொன்னா நான் நல்லாவேயிருக்க மாட்டேன், உத்ரா! பணத்திலேயே வளர்ந்ததினாலேயோ என்னவோ உனக்கு இருக்கிற பொறுமை எனக்கு இல்லை. உறவுகளை மதிக்கத் தெரியலை. சுதந்திரமா இருந்திட்டு சிறைப்பட்டது போலிருந்தது என் புகுந்த வீட்டு வாழ்க்கை. பெத்தவங்க கிட்ட காட்ட

முடியாத என் கோபத்தை இவங்ககிட்ட காண்பிக்க ஆரம்பிச்சேன்.

இந்த இரண்டு வருஷத்திலே என்னைத் தொடறதுக்கு கூட நான் ரகுவை அனுமதிக்கவில்லை. வார்த்தைகளால் ரொம்பவும் புண்படுத்தினேன். ஆனா போகப் போக ரகுவுடைய அன்பும், பண்பும் என்னைக் கவர்ந்திடுச்சு. இருந்தாலும் என் வெளிநாட்டு மோகமும், ஒரு வித மயக்கமும் என்னை அவருடன் சேர விடாம தடுத்திடுச்சி.

ஆனா இப்போ எல்லா மயக்கத்தில். இருந்தும் விடு பட்டு ரகுவோட வாழலாமின்னும், இந்த அருமையான குடும்பச் சங்கிலியில் என்னையும் இணைச்சிக்கலா மின்னும் நினைச்சப்போ இவர் டைவர்ஸ் நோட்டீஸ்ஸோடு வந்து நிற்கிறார். சரி தப்புக்குக் கிடைச்ச தண்டனையா இருக்கட்டுமேன்னு நானும் அமைதியா இருக்கேன். என் நிலைமையைப் பார்த்தியா உத்ரா?''

''அருகில் இருந்து பார்த்த போது ரகுவின் மதிப்பு தெரியலை. ஆனா ரகு என்னை விட்டு விலகணுமின்னு நினைக்கிறப்போ மனசு அவரை தேடி ஓடுது. என் விருப் பத்தைச் சொல்ற வழி எனக்குத் தெரியலை. தூக்கி யெறிஞ்சவளை ஏத்துக்குவாரான்னும் தெரியலை. உப்பு சப்பில்லாத இந்த வாழ்க்கையை வாழறதை விட சாகிறதே மேல்.''

''என்னக்கா நீங்க? நேர்ல சொல்லக் கூச்சப்படுகிற விஷயங்களை உங்க செய்கையால ரகு அத்தானுக்குத் தெரியப்படுத்தி இருக்கலாமே!''

''செய்திருக்கலாம்தான் ஆனா புத்திக்கு அது எட்டலை. இந்த வாழ்க்கையில் ஒண்ணுமட்டும் நான் புரிஞ்சுகிட்



டேன் உத்ரா. கணவன் மனைவிங்கிற உறவுக்குள்ளே ஈகோ மட்டும் தலை தூக்கிடவே கூடாது'' என முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

இதமான சூட்டில் ஆதரவாய் அவளின் தோள் மேல் விழுந்தது ஒரு கை. நிமிர்ந்தவளின் கண்ணீர் திரைக்கு நடுவில் ரகுவின் அமைதியான முகம். இன்ப அதிர்வுற் றாள் வீணா. ''ரகு நீங்களா? நீங்க யெப்படி?''

''நாங்கதான் வருஷா வருஷம் இந்த கோவிலுக்கு வருவோமே'' - அருண்.

''ஆனால், காலையிலே இன்னைக்கு எனக்கு கிளாஸ் இருந்ததினால் சாயந்திரம்'' - நந்தினி.

சுற்றி இருந்தவர்களின் எந்த பேச்சும் அவர்களின் காதில் விழவில்லை. நாகரீகம் கருதி அனைவரும் ஒதுங் கினார்கள்.

''ரகு நிஜமாகவே என்னை மன்னிச்சிட்டீங்களா?''

''வீணா கணவன் மனைவிக்குள்ளே மன்னிப்பு, நன்றிங்கிற வார்த்தைக்கு எல்லாம் இடமேயில்லை. அது அன்னியத்தை உண்டு பண்ணிடும். நமக்குள்ளே இடை வெளி விழ இனியும் நான் அனுமதிக்க மாட்டேன்'' என்று காதலுடன் அவளுடைய கையைப் பற்ற வீணாவின் கண்களில் இருந்து வழிந்த நீர் இணைந்த அக்கைகளுக்கு அபிஷேகம் செய்தது.

''வினு ஒரு சின்ன விஷயம்.''

''சொல்லுங்க ரகு.''

''நீ என்னை விட்டுப் பிரியும் அந்த நேரத்தில் நான் இந்த ஊரில் இருக்கக்கூடாதுன்னு பெங்களுருக்கு வேலை

விஷயமா பதினைந்து நாள் டூர் ப்ரோகிராம் போட்டுட் டேன்!''

''இதை தள்ளிப் போட முடியாதா ரகு?''

''நிச்சயம் முடியாது. வம்பு பண்ணி வாங்கியது. அதுவு மில்லாம இன்னைக்கு நைட்டே கிளம்பணும்.''

''அதனாலதான் பிறந்த நாள்வரை பொறுமையா இருன்னு சொன்னீங்களா ரகு?''

''ஆமாம் நேரத்தைப் பார்த்தியா நாம இரண்டு பேரும் மனசு மாறி சேர்ந்தாலும் விதி தற்காலிகமா பிரிச்சுடுச்சு பார்த்தியா?''

''அதான் நீங்களே தற்காலிகமான பிரிவுன்னு சொல் லிட்டீங்களே. அப்புறம் என்ன நல்லபடியா ட்ரைனிங் போயிட்டு வாங்க.''

அவள் கைகளைப் பற்றி நெஞ்சின் மேல் வைத்துக் கொண்டு ''வினு எனக்காக பதினைந்து நாள் காத்திருப் பாய் அல்லவா?''

'வினு' என்ற அந்த செல்லச் சுருக்கத்திலே குழைந் தவள் ''ரகு வருடக்கணக்கில் எனக்காக நீங்க காத்து இருந் தீங்க. நாட்கணக்கில் உங்களுக்காக காத்திருக்கிறது தப்பு இல்லை. ஆனா ஒரே ஒரு கண்டிஷன். வேலை முடிந்ததும் உடனே வந்துடணும்.''

''இனிமே வெளியே எனக்கு என்ன வேலை. எப்பவும் உன்கூடத்தான் வினு.''

தம்பதியர் நெகிழ்ந்திருந்த நேரம் ''அண்ணா நாங்க வரலாமா?'' என்று குரல் கொடுத்தவாறே அவர்களருகில் வந்தார்கள், மற்ற மூவரும்.



உத்ரா அந்த பரிசை அவர்களிடம் நீட்டினாள். அதில் வெள்ளியால் செய்யப்பட்ட பதினைந்து செ.மீட்டர் நீளமுள்ள தங்க முலாம் பூசிய மரம் ஒன்று இருந்தது. அதன் இரண்டு பக்கத்திலும் இலைகளின் வடிவில் ரகு வீணாவின் படங்களும் அந்த இரண்டையும் இணைத்து தொங்கிய சங்கிலியில் கேள்விக்குறியுடன் குழந்தையும் போடப்பட்டு இருந்தது.

அதன் பொருள் புரிந்த வீணாவின் முகம் குங்குமக் குழம்பானது.

''அய்யே வெட்கத்தைப் பாரேன் அண்ணிக்கு'' குதித் தாள் நந்தினி.

மகிழ்ச்சியும், நிறைவுமாய் கழிந்தது அன்றைய மாலைப் பொழுது. இரவு டின்னரை முடித்து விட்டு ஒன்றாக வீட்டுக்குள் நுழைந்த மூவரைப் பார்த்ததும் ஹாலில் அமர்ந்திருந்த மரகதமும், சபேசனும் திகைத்தார்கள்.

''ஏய் நந்தினி இதென்னடி என்னைக்கும் இல்லாத திருநாளா இன்னைக்கு ரகுவும், வீணாவும் ஒண்ணா வராங்க. எங்கேடி போனீங்க'' மகளை தனிமையில் கேட்டார் மரகதம்.

''கோவிலுக்கு போனோம்! அங்கே அண்ணியைப் பார்த்தோம். நானும் வரேன்னாங்க. கூட்டிட்டு வந்தோம்'' நைட்டிக்கு மாறியபடியே தாயிடம் கூறினாள் நந்தினி.

''ஏண்டி அவங்க ரெண்டு பேரும் சந்தோஷமா அதா வது எதுவும் பிரச்சினையில்லாமதானே இருந்தாங்க?'' அவள் அம்மாவை ஒருமுறை ஊடுருவிப் பார்த்தாள்.

''நீ சொல்றது எனக்குப் புரியலைம்மா!''

வயது வந்த பெண்ணிடம் அதற்கு மேல் எப்படி கேட்பது என்று மரகதத்திற்கும் புரியவில்லை. தாயின் தடுமாற்றத்தை உணர்ந்த நந்தினி விளையாட்டை விடுத்து "இனிமே அவங்களுக்குள்ள எந்தப் பிரச்சினையும் வராது. கவலைப்படாமே இருங்க! ரகுண்ணா இன்னைக்கு ஊருக்கு கிளம்புறார். அதுக்கு வேண்டிய ஏற்பாடுகளை பண்ணுங்க."

மரகதம் ஏதோ சொல்ல வர "எனக்கு வேலையிருக்கும்மா" அவ்விடம் விட்டு ஓடியே விட்டாள் நந்தினி.

"ச்சே என்ன பொண்ணு இவ பொறுமையே இல்லாம" மகளை திட்டிக் கொண்டே ரகுவின் அறை வாசல் வரை வந்தவர், "ரகு நான் செய்த தவறுக்காக என்னை மன்னிச்சுடுங்க" என்று கணவனின் காலில் விழும் வீணாவைக் கண்டாள்.

"வினு ப்ளீஸ் நடந்ததையெல்லாம் மறந்திடு. இனி வாழ்க்கையை நாம புதுசா ஆரம்பிக்கலாம்." மார்பில் சாய்ந்திருந்த அவளின் தலையில் சூடாய் இறங்கியது ரகுவின் முத்தம். "நாம் தொடங்கப் போகும் இன்ப வாழ்க்கைக்கு இதுதான் ஆதாரம் நேரமாகுது நான் கிளம்பட்டுமா வினு?"

மகனும், மருமகளும் மாறிய நினைப்பே மரகதம்மாளின் வயிற்றில் பாலை வார்த்தது போல் இருந்தது. ஓசைப்படாமல் அங்கிருந்து நகர்ந்துவிட்டார்.

வீணாவின் பணிவு அடுத்து வந்த நாட்களில் சபேசனுக்கு வியப்பையே அளித்தது. விஷயம் தெரிந்ததால் மரகதம்மாளும், நந்தினியும் வாயே திறக்கவில்லை. வீணா ஒவ்வோர் இரவையும் ரகுவின் நினைப்புடன் கழித்தாள்.



தன் வேலைகளை விரைவாய் முடித்து விட்டு ரகு பன்னிரெண்டே நாட்களில் வந்து விட்டான். இரண்டு நாள் விஷயத்தை ஆறப்போட்ட சபேசன் பொறுக்க முடியாமல் அன்று கையில் இனிப்புடன் வழக்கத்திற்கு விரோதமாய் நான்கு மணிக்கே வந்துவிட்ட ரகுவை அருகில் அழைத்தார்.

"என்னப்பா?" - ரகு

"ரகு! நம்ம நந்தினிக்கு ஒரு வரன் வந்திருக்கு. நல்ல இடம் புரோக்கர் பொன்னுசாமி தான் சொன்னாரு. நந்தினியும் இந்த வருஷத்தோட படிப்பை முடிக்கப் போறா. இப்பவே கல்யாணத்தை முடிச்சிட்டா எனக்கும் ஒரு கவலை தீர்ந்திடும்."

"நல்ல இடம் என்றால் சரிப்பா! எப்ப பொண்ணு பார்க்க வர்றாங்களாம்?"

"வர்ற புதன்கிழமை இன்னும் இரண்டு நாள்தான் இருக்கு. நீதான் கூட இருந்து எல்லா ஏற்பாடும் பண்ணனும்!"

"கவலையை விடுங்கப்பா நான் பாத்துக்கிறேன்."

"அப்புறம் ரகு இன்னொரு விஷயம்?"

"சொல்லுங்க."

இந்த பதினைந்து நாளா நம்ம வீடு ரொம்ப அமைதியா இருக்கு. அதிரடியா நடந்த வீணா இப்பவெல்லாம் அமைதியா அடக்கமா நடந்துக்கிறா. உன் முகத்திலே இருந்த இருள் நீங்கி புதுசா ஒரு ஒளி தெரியுது. நடக்கிறதெல்லாம் உண்மைதானேப்பா?"

"எல்லாம் உண்மைதான்பா இதற்குக் காரணம் உத்ரா தான்! எங்களுக்குள்ளே இத்தனை நாள் விழுந்திருந்த மெல்லிய திரையை கிழிச்சவளே அவதான்."

''நீ சொல்றது...?''

''நூற்றுக்கு நூறு நிஜம்!'' ரகு தன்னறைக்கு சென்று விட்டான். சபேசனின் மனதில் உத்ராவை தள்ளி வைத்தது தவறோ என்ற கேள்வி முதன் முதலாய் பிறந்தது.



## 14



''உத்ரா டியர் நமக்கு எப்போ?''

அவன் மார்பிலிருந்து தலையை வெடுக்கென்று நிமிர்த்தி ''என்னது?'' என்றாள்.

''அதான் ரகுவோட பிறந்த நாளுக்கு ஒரு பரிசு கொடுத்தியே?'' புரியாமல் அவள் புருவம் சுருக்க. ''கேள்விக் குறியும் குழந்தை'' என அவன் முடித்தான்.

செல்லமாய் கணவன் மார்பில் குத்தினாள் உத்ரா. ''கொஞ்ச நாள் பொறுத்துக்கோங்க. நானே நல்ல விஷயமா சொல்றேன். இப்போ தூங்குங்க.''

'' நீ நல்ல விஷயம் சொல்ற வரையில் நானும் தூங்கப் போறது இல்லை. உன்னையும் தூங்க விடப் போறது இல்லை'' என அவள் மேல் படர்ந்தான் அருண்.

வெப்ப புன்னகை வீசிய சூரியன் மறைந்து குளிர் நிற மேகங்கள் வானைத் தழுவி நிற்க நந்தினி பட்டுப்புடவை கட்டி, முகத்தை அலங்கரித்து பவுடர் பூசி மையிட்டு, உதடுகளை ரோஜா நிற லிப்ஸ்டிக்கால் குளிக்க வைத்தாள். ஹால் முழுக்க ஒரே கூட்டம்.

''பெரியவங்களுக்கு நமஸ்காரம் பண்ணும்மா'' என்றார் சபேசன்.



''பரவாயில்லே இருக்கட்டும். நோ பார்மாலிட்டீஸ் இப்படி உக்காரும்மா'' என்று அருகில் காலியாய் இருந்த நாற்காலி ஒன்றைக் காட்ட, அதில் மௌனமாய் அமர்ந்தாள் நந்தினி.

''டேய் நந்து உன் செலக்ஷன் அற்புதம்டா'' என்று மகனைப் பாராட்டினார் ராஜலிங்கம்.

சபேசன் உட்பட அத்தனை பேரும் திகைத்தனர். ''என்ன சம்மந்தி அப்படி பாக்குறீங்க என் பையன் நந்தகுமாரன் உங்க பொண்ணை ஏற்கனவே இரண்டு இடத்திலே பார்த்திருக்கான். நேரா என்கிட்ட வந்து அப்பா விஷயம் இப்படின்னு போட்டு உடைச்சான்.

முதல்ல எனக்கு ஷாக்காத்தான் இருந்தது. அப்புறம் யோசித்தேன். அப்படியென்ன ஊர் உலகத்திலே நடக்காத தப்பை என் பிள்ளை செய்திட்டான்.

வாழப்போறவன் அவன்தானே! மனசுக்கு நியாயமா பட்டது. வறட்டு கவுரவத்திற்காக நம்ம பிள்ளைங்களோட வாழ்க்கையை நோகடிக்கக் கூடாது. நந்தினி பெஸ்ட் சாய்ஸ் அவளுடைய அடக்கம் எங்களுக்கும் நிறைவைத் தருது. எங்க சைடு ஓ.கே. உங்க பொண்ணுக்கு விருப்பமான்னு கேளுங்க.''

ராஜலிங்கம் பேசப்பேச சபேசனின் பார்வை அவனைக் கேளாமலே மாடி நோக்கிச் சென்றது. ரகு தன்னை கவனிப்பதைப் பார்த்ததும் சட்டென தலையைத் தாழ்த்தி எதிரே இருந்தவரின் பேச்சில் கவனத்தை செலுத்தினார். நந்தினியின் முகத்தில் நிலவிய திருப்தியைக் கண்டதும் சபேசன், ''எங்களுக்கும் சம்மதம்தான் மேற்கொண்டு பேசலாமா?''

புரோக்கர் பொன்னுசாமிக்கு வாயெல்லாம் பல். கமிஷன் கைவிட்டுப் போகாது என்ற நம்பிக்கையில்.

''சம்மந்தி! உங்க பொண்ணை எங்களுக்குப் பிடிச்சிருக்கு முக்கியமா என் மகனுக்கு அதனால இது ஒரு லவ் மேரேஜ் மாதிரிதான். அதனாலே டௌரிங்கிற பேச்சுக்கே இடமில்லை. உங்க மகளுக்கு நீங்க செஞ்சாலும் ஆட்சேபிக்கப் போவதில்லை. அப்ப நாங்க கிளம்புறோம். ஒரு நல்ல நாளாப் பார்த்து தேதி குறிச்சிடலாம்'' விடைபெற்றார் ராஜலிங்கம் குடும்பத்தினர்.

நந்தகுமாரின் கண்கள் நந்தினியை ஒரு வினாடி நோக்கி பின்பு விடைபெற்றது. வீட்டில் அனைவருக்கும் பரம திருப்தி; நந்தினியின் முகத்தில் மகிழ்ச்சி நர்த்தனமாடியது.

''என்னங்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க ரொம்ப நல்லவங்களா தெரியிறாங்க இல்லே.'' - மரகதம்.

''ஆமாப்பா மாப்பிள்ளையோட அப்பாவுக்கு துளிகூட கர்வமேயில்லை''-ரகு.

''மாப்பிள்ளை பையன் நம்ம நந்தினிக்கு ரொம்ப மேட்சா இருப்பார் அதுவுமில்லாம நந்தகுமாரன், நந்தினி பேர் கூட எவ்வளவு அழகா பொருந்துதுன்னு பாருங்களேன்.'' - இது வீணா.

எல்லார் பேச்சுக்களுக்கும் தலையாட்டினாலும் அவரது நினைவுகள் எங்கோ பறந்து கொண்டிருந்தன.

''அண்ணி என்ன பண்ணிட்டு இருக்கீங்க?'' என்ற குரலோடு அறையினுள் நுழைந்த நந்தினியின் குரலை கவனியாமல் உத்ராவின் பார்வையும், கவனமும் ஒரு சேர கையில் இருந்த காகிதத்தின் மேல் பதிந்திருந்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்தாள் நந்தினி.



''நான் வந்தது கூட தெரியாமல் அப்படியென்ன படிச்சிகிட்டு இருக்கீங்க?''

''வாம்மா கல்யாணப் பொண்ணு எல்லாம் நம்ம வீட்டு விவகாரம்தான்.''

''வீட்டு விவகாரமா? ஓ... அந்த வளையல் விஷயமா?''

''ஏய் எப்படி இவ்ளோ கரெக்ட்டா சொல்றே டெலிபதியா?'' என்றாள் உத்ரா கிண்டலாய்.

''போங்கண்ணி! டெலிபதியாவது, எலிபதியாவது. உண்மையைச் சொல்லப்போனா இந்த விஷயத்தைப் பத்தி பேசணுமின்னுதான் நான் வந்ததே.''

''என்ன பேசணும்?''

''அம்மா பருப்பு டப்பாவில் வைச்சிருந்த வளையல் உங்க கைக்கு எப்படியண்ணி வந்தது?''

''அன்னைக்கு மதியம் ஒரு மூணு மணி இருக்கும். மாடியில் உலர்த்தியிருந்த துணி எடுக்க மொட்டை மாடிக்குப் போயிருந்தேன். வந்து பார்க்கும் போது வாசலில் இந்த கடிதமும் அத்தைக்கு நான் கொடுத்த வளையலும் இருந்தது.''

''கடிதமா அதுல என்ன எழுதியிருந்தது.''

''நீயே படிச்சுப் பாரேன்'' என்று கடிதத்தை நீட்டினாள் உத்ரா.

''தெய்வம் தான் விரும்பாதவர்களிடம் இருந்து காணிக்கை பெறுவதில்லை?'' என்று எழுதியிருந்தது. இரண்டு நிமிடங்கள் அதையே உற்றுப் பார்த்து விட்டு ''இது வீணா அண்ணியோட கையெழுத்து'' என்றாள் நந்தினி.

''நந்தினி உளராதே நல்லாப் பார்த்துச் சொல்லு.''

''கட்டாயம் இது அவங்க கையெழுத்துதான்! வீணா அண்ணியோட ரூம்ல நிறைய புக்ஸ் இருக்கும். அதுக்கு மேலே அவங்க பேர் எழுதி வைச்சிருப்பாங்க. அதில் ஒரு நளினம் இருக்கும். அதனாலேதான் நிச்சயமா சொல் றேன்.''

உத்ரா மௌனத்தின் பிடியில் ஆழ்ந்தாள். ''அண்ணி பேசாம ஏன் இப்படி செஞ்சீங்கன்னு நேர்லேயே கேட்டுட லாமா?''

''வேணாம் நந்தினி. அக்கா என் மேல வெறுப்பு கொண் டிருந்த பொழுது செஞ்ச காரியம் இது. இப்ப அவங்க எல் லாத்தையும் மறந்திட்டு ஒரு புது வாழ்க்கை ஆரம்பிச்சி இருக்காங்க. இந்த நேரத்தில் பழைய தப்பை ஞாபகப் படுத்தினா அது அவங்க மனசைப் பாதிக்கும்! இந்த விஷயம் நம்மோடயே இருக்கட்டும் சரியா?'' என உத்ரா சொல்லிக் கொண்டு இருக்கும் போதே.

''என்னை மன்னிச்சிடு உத்ரா'' என்ற வீணாவின் குரல் இவர்களை நோக்கி வந்தது.

''அய்யோ என்னக்கா இது? பெரிய பெரிய வார்த்தை யெல்லாம் பேசிகிட்டு, நான் உங்களை விட சின்ன பொண்ணு என்கிட்ட போய்.''

''இல்லேம்மா உன் மனசுக்கு முன்னாடி எதுவுமே பெரியது இல்லை. அத்தை உன்னை ஏத்துகிட்டா நீ இந்த வீட்டு பொண்ணாயிடுவே. எங்கே என்னை மதிக்க மாட்டாங்களோன்னு தான் இந்த தவறை செய்திட்டேன்.''

''ஆனா இப்போ நான் செய்த தவறை வெளிப்படுத் தறது எனக்கு வேதனை அளிக்குமின்னு நீ நினைச்சிருக்



கியே அந்த நிமிஷத்திலே என்கிட்ட இருந்த கொஞ்ச நஞ்ச அகம்பாவமும் அழிஞ்சிடுச்சி'' உணர்ச்சி மிகுதி யில் அவள் கதறியழ மற்ற இருவரின் கண்களில் இருந்தும் நீர் சுரந்தது.

உத்ராதான் முதலில் சுதாரித்தாள். '''விடுங்கக்கா பழசையெல்லாம் மறந்திடுங்க. இனிமே சிரிப்பைத் தவிர உங்க முகத்திலே நான் வேற எதையும் பார்க்கக்கூடாது சொல்லிட்டேன். ரகு அத்தானை நல்லபடியாக கவனிக் கிறதுதான் உங்க வேலை புரிஞ்சுதா?''

''சீக்கிரம் சிரிச்சிடுங்க அண்ணி இல்லேண்ணா நாங்க இரண்டு பேரும் உங்களை டைவர்ஸ் பண்ணிடுவோம்'' என்று நந்தினி உத்தரவிட மூன்று பெண்களும் கொல் லென்று சிரிக்க நிலைமை சகஜமாகியது.

''கொஞ்சம் இருங்க உங்க இரண்டு பேருக்கும் காபி எடுத்திட்டு வரேன்'' என்று இரண்டு எட்டுத் திரும்பிய வள் அப்படியே அறுந்த மாலையாய் தரையில் சரிய வீணாவும், நந்தினியும் வீறிட்டனர்.

அந்நேரம் வீட்டிற்குள் நுழைந்த ரகு ஒரே பாய்ச்சலாய் மாடியேறினான்.

''என்ன? என்னாச்சு?'' - ரகு.

''என்னன்னே தெரியலைங்க நல்லா பேசிக்கிட்டுத் தான் இருந்தா. திடீர்னு மயக்கம் போட்டுட்டா எனக்கு ரொம்ப பயமாயிருக்குங்க.''

''பயப்படாதே. நந்தினி நீ போய் டாக்டருக்கு போன் பண்ணு.''

நந்தினி டெலிபோன் இருக்குமிடம் ஓடினாள்.

"அம்மா எங்கே வீணா?"

"கோவிலுக்கு போயிருக்காங்க."

## 15

உத்ரா மெல்ல கண்களை திறந்தாள் சுற்றிலும் பழகிய முகங்கள்.

"என்னம்மா இப்ப எப்படியிருக்கு" - டாக்டர்.

"பைன் டாக்டர் என்னாச்சு எனக்கு?"

"எல்லாம் நல்ல விஷயம் தான். உங்க ஹஸ்பெண்ட் கிட்டே சொல்லியிருக்கேன். கேட்டு தெரிஞ்சுக்கோங்க. அப்போ நான் கிளம்புகிறேன்."

"அருண் நான் டாக்டரை அனுப்பிவிட்டு வந்திடறேன். வீணா நீயும் வா!"

"இதோ!" என்று அவர்கள் நகர்ந்ததும், நந்தினியும் "கங்கிராட்ஸ்" என்று சொல்லியபடியே குறுஞ்சிரிப்புடன் வெளியேறினாள்.

அருண் அப்படியே உத்ராவை இறுக்கமாய் அணைத்தான். காற்று கூட நுழைய முடியாத அளவிற்கு இறுக்கம்.

"விடுங்க அருண் எனக்கு மூச்சு முட்டுது. நீங்க எப்ப வந்தீங்க?"

"இப்பத்தான்."

"டாக்டர் என்ன சொன்னாங்க?"

"நா சொல்றேன்! ஆனா ஒரு கண்டிஷன் இங்கே ஒண்ணு தரணும்" என்று கன்னத்தை காட்ட, "ஏற்கனவே



கொடுத்தது போலவா?" என்று அன்றைய நினைவை எழுப்பினாள் அவள்.

கன்னத்தை தடவிக் கொண்டு "அய்யய்யோ வேண்டாம் தாயே நானே உண்மையை சொல்லிடறேன்" என்றான் பயந்தவனாய்.

"சீக்கிரம் அருண்."

"பொறுமையா இரு உத்ரா. பொறுமை எருமையை விட பெரிசு."

"அப்போ உங்களை விடப் பெரிசுன்னு சொல்றீங்க."

"ஏய் என்ன நீ புருஷனைப் போய் எருமைங்கிற?"

"விளையாட்டு போதும் அருண் டாக்டர் என்ன சொன்னாங்க ப்ளீஸ்?"

"ஓ.கே. சரண்டர். நீ கூடிய சீக்கிரம் ஒரு குட்டி அருணையோ, குட்டி உத்ராவையோ பெத்து தரப் போறன்னு சொன்னாங்க."

"நிஜமாவா அருண்?" விழிகளை விரித்தாள் உத்ரா.

"ஆமாம் கண்மணி! ஏய் ஏன் அழறே? இது சந்தோஷப் பட வேண்டிய விஷயம். இதுக்குப் போய் கண்கலங்குறியே?"

"யாருமில்லாத அநாதையா இருந்த எனக்கு உங்களால ஒரு குடும்பம் கிடைச்சது. அந்த சந்தோஷத்தை நான் முழுமையா அனுபவிக்கும் போதே நீங்க எனக்கு கொடுத்த இந்த பரிசு என்னை திக்கு முக்காட வைக்குது."

"என்னடா இது பெரிய வார்த்தையெல்லாம் பேசுறே."

"ஒரு பொண்ணுக்கு தாய்மையடையிறது எவ்வளவு ஆனந்தம் தெரியுமா? நெஜம்மா சொல்றேன் அருண்.

இப்ப இருக்கிற மனநிறைவுல இந்த நிமிஷமே நான் இறந்தாலும் பரவாயில்லை.''

''சீ பைத்தியம் இன்னொரு முறை இப்படி பேசினா யானா உன்னை டைவர்ஸ் பண்ணிடுவேன் ராஸ்கல்'' என்று அவள் தலையில் குட்டினான் அருண்.

கணவனின் நெஞ்சில் கொஞ்சலாய் சாய்ந்து கொண்டாள் உத்ரா.

''டியர் இப்பவாவது நான் கேட்டதைத் தரக்கூடாதா?''

''இந்த மாதிரி அடிக்கடி கேட்டுகிட்டே இருந்தா நான் என் பையன்கிட்ட சொல்லிடுவேன் ஆமா!''

''நல்லாயிருக்கு குழந்தை பிறக்கிறதுக்கு முன்னாடியே இந்த ஜம்பமா? பிறந்திட்டா என்னை கவனிக்கவே மாட்டே போலிருக்கே?''

அவன் கைகளை எடுத்து தன் வயிற்றில் ஒட்டியவாறே ''இது நீங்க கொடுத்தது. என் உயிர், உடல், ஆத்மா எல்லாமே முதல் சொந்தமான உங்களுக்குத்தான்.''

நெகிழ்ந்த அவன் ''என் கையால உனக்கு ஏதாவது செய்யணும் போல இருக்கு கண்ணம்மா!''

''தயவு செய்து, மறுபடியும் சமையல்ல இறங்கிட மாட்டேன்னு எனக்கு ப்ராமிஸ் பண்ணுங்க அருண்!''

''ஏய்?'' என கையை ஓங்க பழிப்பு காட்டினாள் அவனின் காதல் மனைவி.

டாக்டர் அவர்கள் வீட்டிலிருந்து வெளியேறும் சமயம் உள்ளே நுழைந்த சபேசன், ''என்ன ரகு யாருக்கு உடம்பு சரியில்லை. டாக்டர் ஏன் வந்து போறார்?''



''எல்லாம் நல்ல விஷயம்தாம்மா? உத்ரா தாய்மை அடைஞ்சிருக்கா. நீங்க தாத்தாவாயிட்டீங்க!''

ஒரு நொடி அவருடைய முகத்தில் தோன்றிய மலர்ச்சி, துணி கொண்டு துடைத்தாற் போல் சட்டென மறைந்தது. இருப்பினும் ரகு அதை கவனித்து விட்டான்.

''அப்பா உங்களுக்கு சந்தோஷமா இல்லையா?''

''யாரோ பிள்ளை உண்டானதற்கு நான ஏன் சந்தோஷப் படணும்?'' என சாதாரணமாய் கேட்ட அவரை வெறித்தான் ரகு.

''உங்களை மீறி ஒரு காரியம் செய்ததினால் அவன் உங்க பிள்ளை இல்லேன்னு ஆயிடுமா?

''எதுக்காகப்பா அருணை ஒதுக்கி வைச்சிருக்கீங்க. காதல் கல்யாணம் பண்ணிகிட்டான்னுதானே. இப்ப நந்தினிக்கு நிச்சயமாயிருக்கே அது மட்டும் என்னவாம். ஒரு வகையிலே அதுவும் காதல் கல்யாணம் மாதிரி தானே. மகன் விஷயத்திலே ஏத்துக்கப்படாத காதல் மகள் விஷயத்தில் மட்டும் ஒத்துப் போச்சாப்பா. நீங்க எப்ப சுயநலவாதியா மாறினீங்க!''

''நானா சுயநலவாதி?''

''ஆமாம். தன் பொண்ணோட வாழ்க்கை மட்டும் நல்லாயிருக்கணும். வீட்டுக்கு வந்த பொண்ணு எப்படி போனா என்னங்கிற நினைப்புதானே உங்களுக்கு. இதே நிலைமை நாளைக்கு நந்தினிக்கு ஏற்பட்டா என்னப்பா செய்வீங்க. நந்தினிக்காவது, அண்ணன், அப்பாங்கிற உறவில் நானும் நீங்களும் இருக்கோம். ஆனா உத்ரா விற்கு அப்படியில்லையே.''

''உறவுகளை இணைக்கத் தானேப்பா அவ பாடுபடறா ஆரம்பத்திலே அவளை ஏத்துக்க தடையாய் இருந்தது நந்தினியோட கல்யாண விவகாரம்தான். ஆனா அதுவே இப்ப நல்லபடியா ஏற்பாடு ஆயிருக்கு?

இன்னும் என்னப்பா தயக்கம்? உத்ரா இந்த வீட்டு வாரிசை சுமந்திட்டு இருக்கா இப்பத்தான் அவளுக்கு நம்ம அன்பும், ஆதரவும், ஆசியும் வேணும்.'' - பக்குவமா சொன்னான் ரகு.

சபேசனின் மனம் மெதுவாய் அசை போட்டது. உத்ரா வந்த நாளில் இருந்து இன்று வரை மனதால் கூட யார்க்கும் தீங்கு நினைத்தது இல்லை. பெரிய கவலையாய் மனதை அரித்துக் கிடந்த நந்தினியின் கல்யாணமும் எந்த பிரச்சினையும் இன்றி நடக்கப் போகிறது. இனியேன் அந்தப் பெண்ணை வெறுக்க வேண்டும்?

யோசிக்க யோசிக்க ரகு சொல்வது போல் அவர்கள் மேல் எந்த தவறும் இல்லை என்றே தோன்றியது. மனதில் கொண்ட உறுதியை மனைவியிடம் தெரிவிக்க மரகதம் மாளின் இருப்பிடமான சமையலறைக்குச் சென்றார். அங்கு அதிசயமாய் வீணாவும், நந்தினியும் இருக்க, வீணா மாமனாரைப் பார்த்ததும் வெகு பவ்யமாய், ''மாமா காபி வேணுமா?'' என்று கேட்டாள்.

அவளின் கரிசனத்திற்கு காரணம் உத்ரா என்ற நினைப்பே இருந்த சிறு தயக்கமும் உதறப்பட்டு மனைவியை தனியே அழைத்து விவரம் தெரிவித்ததும் மரகதம் குதிக் காத குறைதான். ''நானே சொல்லலாமின்னு நினைச்சேன். நீங்க கோபிப்பீங்களோன்னுதான் சொல்லலை. நம்ம வீட்டுக்கு முத வாரிசை பெத்துத் தரப் போறாயில்லை. வவளை இனிப்போடதான் வரவேற்கணும்.''




''இனிப்போட ஐந்து வகை உணவும் தயார் செய் மரகதம் முறையோடு நம்ம மருமகளை கூட்டிட்டு வரலாம்!''

புளியோதரை, சாம்பாரின் வாசம் மூக்கைத் துளைக்க வாசம் பிடித்தபடியே உள்ளே நுழைந்த நந்தினி சபேசனை பார்த்ததும் ஜஹா வாங்கினாள். ''என்னம்மா என்ன வேணும். உள்ளே வந்துட்டு ஓடறே, என்றவரின் கேள்விக்கு நின்றாள் நந்தினி.

''சமையல் ஜோரா இருக்கே ஏம்பா நம்ம வீட்டுக்கு யாராவது கெஸ்ட் வர்றாங்களா?''

''கெஸ்ட் இல்லைம்மா என் இரத்தம். ரகு இங்கே வாப்பா.'' ரகு அவர் அருகில் வர ''இப்ப நல்லது கெட்டது எல்லாம் புரிஞ்சிட்டேன். மாடிக்குப் போய் என் மகனையும், மருமகளையும் கூட்டிட்டு வாப்பா.'' அவர் வாயிலிருந்து உதிர்ந்த அந்த வார்த்தைகளுக்காகவே காத்திருந்தவன் போல மாடிக்கு ஓடினான் ரகு.



## 16



தம்பதிகளாய் இருவரும் சபேசனின் கால்களில் விழுந்தனர்.

''நூறு வருஷம் சீரும் சிறப்புமா நீங்க நீடூழி வாழணும்.''

உத்ரா அருணின் கண்களில் ஆனந்த மழை ''எங்களை மன்னிச்சிடுங்கப்பா''-அருண்.

''நீ எந்த தப்பும் செய்யலை அருண்! நம்ம வீட்டுக்கு ஒரு தங்கத்தைக்கான் கொண்டு வந்திருக்கே. நான்தான்

மடத்தனமா அதை உரசி பார்த்திருக்கேன். உத்ரா நான் ஏதாவது தவறா பேசியிருந்தா அதையெல்லாம் பெரிசா எடுத்துக்காதேம்மா'' என்று மருமகளிடம் கோரினார் சபேசன்.

''என்ன மாமா என்னைப் பேசறதுக்கு உங்களுக்கு உரிமையில்லையா என்ன? நீங்க இப்படி வருத்தப்படறது தான் எனக்கு சங்கடமாயிருக்கு.''

''உன் நல்ல குணத்துக்கு நீ நல்லா இருப்பேம்மா'' என்றார் நெகிழ்வுடன்.

''இதோ பாரு உத்ரா இனிமே நீ மாடிப்படியெல்லாம் ஏறக்கூடாது. நல்ல சத்துள்ள ஆகாரமா நா சமைச்சுப் போடறேன் அதைத்தான் நீ சாப்பிடணும்'' மரகதம்மாள் தன் பங்கிற்கு ஆர்டர் போட்டார்.

உத்ராவின் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாய் பெருகியது.

வீணாவின் காதருகில் மெல்ல கிசுகிசுத்தான் ரகு.

''கூடிய சீக்கிரம் நீயும் இந்த மாதிரி... என்ன முறைக்கிறே நா எதுவும் தப்பா கேட்டுட்டனா?''

''என்னை இன்னும் பழைய வீணாவே நினைச்சிட்டு இருக்கீங்க. இதை நீங்க இப்படி பயந்துட்டு சொல்லக் கூடாது. ஆர்டர் போடணும். தெரியுதா?''

''உத்தரவு மகாராணி'' என ரகு சிரம் தாழ்த்தினான்.

''அண்ணா முன்னை விட அண்ணிக்கு இப்பத்தான் அதிகமா பயப்படறா மாதிரி இருக்கு'' என்ற நந்தினியை செல்லமாய் அடிக்க விரட்டினான் ரகு.

அன்று வீடே சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. நெடுநாள் கழித்து அந்த வீட்டில் நிம்மதி



நிழலாடியது. எல்லோரும் ஒன்றாய் அமர்ந்து உண வருந்திக் கொண்டிருக்க மரகதம்மாள் பரிமாறினாள்.

''அத்தே நீங்களும் உட்கார்ந்து சாப்பிடலாமே?''

''இல்லேம்மா ரகுவுக்கு கல்யாணம் ஆகுறதுக்கு முன்னாடி இப்படித்தான் எல்லாரும் ஒண்ணா சாப்பிடுவோம். மனசுக்கு ரொம்ப நிறைவா இருக்கும். ஆனா இரண்டு வருஷமா இந்த நாற்காலிகள் எல்லாம் நிரம்பாமே இருந்து மனதை பிசைஞ்சுட்டே இருந்தது. கடைசி வரைக்கும் இப்படியே இருந்துடுமோன்னு பயந்தேன். ஆனா இப்ப...'' மரகதம்மாளின் கண்களில் நீர் மின்னியது.

''அம்மா இனிமே நாங்க தினமும் இப்படியே உட்கார்ந்து சாப்பிடறோம். ஆனா எப்பவும் இந்த சாம்பாரையே போடாதேம்மா, தாங்க முடியலை!'' என்று நந்தினி போலியான சோகத்தோடு சொல்ல அங்கே சகஜ நிலைக்கு திரும்பி சிரிப்பலை எழுந்தது.

''நந்தகுமாரன் பாவம்! நந்தினி உன்னிடம் மாட்டி முழிமுழின்னு முழிக்கப் போறார்'' - அருண்.

அந்த பெயரைக் கேட்டதுமே நந்தினி லேசாய் ஆனால் அழகாய் வெட்கப்பட்டாள். மகள் வாயடைத்தது கண்டு சபேசனும் தாராளமாய் சிரித்தார்.

மாடியறையில்,

''உத்ரா உன்னைப் பார்க்க எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு. சொன்னா மாதிரியே மூணே மாசத்திலே எல்லோரையும் வசப்படுத்திட்டியே வெரிகுட்.''

''இதுக்கெல்லாம் எனக்கு பக்கபலமா இருந்ததே நீங்க தானே அருண். நீங்க இல்லேண்ணா இப்படி ஒரு அருமையான குடும்பம் எனக்கு கிடைச்சிருக்குமா?''

''என்னை மன்னிச்சிடு உத்ரா'' என மனைவியிடம் மன்னிப்புக் கோரியவனை வியப்பாய் பார்த்தாள் அவள்.

''என்கிட்ட எதுக்கு அருண் மன்னிப்புக் கேட்குறீங்க?''

''இத்தனை பேரையும் எப்படி சமாளிக்கப் போறியோன்னு ஆரம்பத்திலே நான் பயந்தேன். இவங்களை நெருங்க நீ எடுக்கிற முயற்சிகள் எல்லாம் அவங்களை நெருங்கிடுமோன்னு ரொம்ப யோசிச்சேன். அந்த நேரத்திலே உன் மேல முழு நம்பிக்கை வைக்க முடியலை. அதனாலதான் மன்னிப்பு கேட்டேன்.''

''பரவாயில்லே அருண் உங்க இடத்திலே நான் இருந்தாலும் எனக்கும் இதேதான் தோன்றியிருக்கும்.''

''இதெல்லாம் கனவோன்னு சந்தேகமா இருக்கு'' என்றவன் ''ஆ...'' என இடுப்பை பிடித்துக் கொண்டு வலியால் முனகினான்.

''அருண் நீங்க கனவுலகத்திலே இல்லைங்கிறதை உணர்த்தத்தான் கிள்ளினேன்.''

குறும்புடன் சிரித்தாள் அவள்.

''அருண் நம்ம குழந்தைக்கு என்ன பேர் வைக்கலாம்?''

''பெண்ணாய் பிறந்தா அருணி, ஆணாய் பிறந்தா உத்திரன் எப்படி என் அறிவு?''

''அய்யே! மூளை அந்த பக்கமா வழியுது துடைச்சிக் கோங்க'' என முந்தானையை நீட்ட அதை இழுத்து தன் அருகில் அவளை இறுத்திக் கொண்டான்.

''அருண் எனக்கு ஒரு சந்தேகம்?''

''இந்த அழகான மண்டைக்குள்ளே எத்தனை கேள்வியைத்தான் அடக்கி வைத்திருப்பாய்?''



''சும்மாயிருங்க குழந்தை பிறந்தா சில ஆண்களுக்கு பொண்டாட்டி மேலே உள்ள அன்பு மாறிடுமாமே, உண்மையா அருண்?

''எம்மேல உள்ள அன்பு மாறுமா?'' என்று உதடு குவித்துக் கேட்டாள் உத்ரா.

குவிந்திருந்த அந்த உதடுகளை ஆசையுடன் ஒரு முறை வருடிவிட்டு ''மற்றவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில் நிச்சயமாய் மாறும். நாளைக்கு இருமடங்கு அடுத்த மாதம் மூன்று மடங்கு என்று உன்மேல் உள்ள ஆசையை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டே போவேன். அன்பு வளர்ச்சியும் ஒரு மாற்றம் தானே கண்ணம்மா!''

குளிரில் நடுங்கும் கோழிக் குஞ்சாய் அந்த அணைப்பு தந்த கதகதப்பில் மேலும் ஒண்டிக் கொண்டாள் உத்ரா.

இனி வரும் பனிக்காலங்களில் தொடரும் வசந்தங்கள் அவர்களை வாழ்த்தட்டும் என்று சூரியனும் தன் முகத்தை மேகத்திற்கு இடையில் மறைத்துக் கொண்டான்.

# கள்வனின் காதலி

1



ஆயிரமாயிரம் பறவைகளுக்கு நடுவில் புதிதாய் பூத்தெழுந்த வெண்ணிற மேகத்தின் வானவீதியில் கோடு இழுத்தாற் போல் இயந்திர இறக்கை கொண்டு பறந்து வந்தது. அந்த உலோகப் பறவை தரையோடு காதல் கொண்டு தன் சிறகுகளை சிக்கென மூடிக் கொண்டது.

மீனம்பாக்கம் ஏர்போர்ட் திருவிழா பூண்ட கோவிலைப் போல கூட்டமும் நிரம்பி வழிந்தது. தோளில் கறுப்பு நிற ஹேண்ட் பேக், கண்களில் குளிர் கண்ணாடி சகிதம் சற்று முன்னரே பறித்த சிகப்பு ரோஜா போல் நின்றிருந்தாள் சித்ரஞ்சனி.



வழக்கம் போல் டாக்ஸிகாரர்களும், ஆட்டோ ஓட்டுநர்களும் பயணிகளை நெருக்கிக் கொள்ள, சந்தடியிலிருந்து சற்று தள்ளி வெள்ளை சீருடையில் மிஸ்டர் சாரதி எனும் பலகை தாங்கிய அந்த டிரைவரை நெருங்கினார்கள் இருவரும்.

''ஐ'யாம் சாரதி.''

''குட்மார்னிங் ஸார். உங்களை ரிசீவ் பண்ணிட சொன்னார் வெல்கம்'' என்று ஒரு பூச்செண்டை அவர் கையில் திணித்தான் அவன்.

''வாங்க ஸார், கார் அங்கேயிருக்கு.''

பவ்யமாய் அவர் கையிலிருந்த பெட்டியைப் பெற்றுக் கொண்டான். லக்கேஜ்கள் ஏற்றப்பட்டவுடன் தந்தையும், மகளும் அந்த சிகப்பு நிற ஜீப்சியில் அமர்ந்தார்கள்.

''அப்பா, யார் இந்த ரங்கராஜன்?''

''நம்ம சதாசிவம் அங்கிளோட ப்ரெண்ட் சன் தான் இந்த ரங்கராஜன். பாரினில் படிச்சிட்டு வந்து இங்கே பிஸினஸ் பண்றான். நல்ல பையன். சின்ன வயசிலேயே சாதிக்கணும்ங்கிற வெறி கொண்டவன்னு சதாசிவம் கூட சொல்லுவான். ஒரு டீல் விஷயமா அவனை நான் மீட் பண்ணணும்.''

''அடக் கடவுளே அப்ப இதுவும் அபீஸியல் ட்ரிப் தானா?''

''ஒரு நல்ல வியாபாரிக்குத் தூக்கத்தில் கூட அவன் தொழில்தான் நினைவிருக்குமாம்.''

''அத்தை வீட்ல நம்மளை எதிர்பாத்துக்கிட்டு இருப்பாங்க இல்லைப்பா?''

''ஆமாம் சித்ரா! ஏர்போர்ட்டில் இருந்து வரும் போதே போன் பண்ணிட்டேன்'' என்றார் தந்தை.

தன் கடல் நிறக் கண்களில் உற்சாகம் அலையலையாய் பொங்க கார் கண்ணாடிக்கு வெளியே பார்வையைப் பரப்பிக் கொண்டிருந்தாள் சித்ரஞ்சனி. சுவற்றில் புன்னகை சுமந்தபடி இருந்த யாரோ ஒரு இளம் நாயகனின் போஸ்ட்டரை பசு மாடு வெகு சுவாரஸ்யமாய் மென்று கொண்டு இருக்க, ஐஸ்கிரீமிற்காய் தன் தந்தையிடம் சிணுங்கிக் கொண்டு இருந்தாள் அந்த கான்வென்ட் பெண்.

மக்கள், புற்றிலிருந்து வெளியேறும் எறும்புகளாய் ஓடித் திரிந்தார்கள். பரபரப்பாக இருந்தாலும் இங்கே உள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையில் இல்லாத இயந்திரத்தனம் மனதிற்கு ஆசுவாசமாய் இருந்தது.

எத்தனை நாள் இந்தியாவிற்கு வர வேண்டும் என்று ஆசை எப்படியோ முட்டி மோதி ஒரு வழியாக வந்து குதித்தாகி விட்டது. மனம் குழந்தையாய் ஆர்ப்பரித்தது.

சித்ரஞ்சனியின் பிறப்பு இந்தியாவாய் இருந்தாலும், வளர்ந்தது என்னவோ அமெரிக்காவில் தான். ஆனால் சிறு வயது முதலே அந்த நாகரீகத்தில் மனம் ஒன்ற மறுத்தது.

அதற்கு ஒரு வகையில் அவளின் தாயார் மீனாட்சியும் அவரின் பண்புமிக்க வளர்ப்புமே காரணம் என்றால் மிகையாகாது. குழந்தை முதல் உணவு அளிக்கும் போதே பிறந்த நாட்டின் பெருமைகளை விடாமல் சொல்லிச் சொல்லியே மகளின் மனதில் இந்திய மோகம் வளர வித்திட்டு விட்டார். அன்னை மீனாட்சி சித்ரஞ்சனியின் தந்தை சாரதி ஒரு சுறுசுறுப்பான தொழிலதிபர். சாப்பிடக் கூட நேரமின்றி உழைத்தாலும் வாரக் கடைசியை மட்டும் குடும்பத்துடன்தான் செலவழிப்பார்.



சாரதிக்கு பூர்வீகம் சென்னைதான். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் அவரையடுத்துப் பிறந்தவர்கள் வசந்தா. பதினெட்டு வயதிலேயே புக்ககத்து ஜாகை. அவளின் கணவன் சிவசு என்ற சிவசுப்ரமணியம். கலெக்டர் அலுவலகத்தில் குமாஸ்தாவாய் பணிபுரிபவர். இவர்கள் திருமணம் முடிவான சமயத்தில்தான் சாரதி தொழிலில் காலூன்றிய நேரம், ஐந்து பவுன் நகையும், சீர்வரிசையும் செய்து தங்கைக்கு திருமணம் முடித்து வைப்பதற்குள் மூச்சு முட்டியது அவருக்கு.

வசந்தாவிற்குப் பிறகு சாரதி என்றாகிப் போக அடுத்த கல்யாண நச்சரிப்பு ஆரம்பித்தது.

மயிலாப்பூரில் ஒண்டுக் குடித்தனம் ஒன்றில் வாழ்க்கையை ஒட்டிக் கொண்டிருந்த கிருஷ்ணனின் மகள் மீனாட்சியை அவரின் சகதர்மிணியாய் நியமித்தனர் பெற்றோர்கள். மீனாட்சிக்கு அப்போது இருபது வயது. ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

அத்துடன் தங்கள் கடமைகள் முடிந்தது என எண்ணினார்களோ என்னவோ காசி, இராமேஸ்வரம் செல்ல முடிவு செய்தவர்களை பெருமாள் தன்னிடம் அழைத்துக் கொண்டார்.

அதன் பின்னர் சாரதி தன் பணியில் அதிக ஈடுபாடு செலுத்த ஆரம்பிக்க, புது விதமான ஆடைகளை ஏற்றுமதி செய்யும் காஸ்ட்யூம் டிஸைனரான அவரின் வடிவமைப்புகளில் ஈற்று அமெரிக்காவின் மிகப் பெரிய ஆடை

நிறுவனம் அவரைத் தன் பங்குதாரராய் சுவீகாரம் எடுத்துக் கொண்டது.

கிடைத்த வாய்ப்பை நழுவவிட அவர் தயாராக இல்லை. மீனாட்சிக்கோ இதில் சுத்தமாய் விருப்பம் இல்லை. வேறு வழியின்றி தன் வேலையையும் ராஜி னாமா செய்ய வேண்டியதாகியது. அந்நேரமே வசந்தா தன் மகள் ராதாவை ஈன்றெடுத்தாள்.

ஒரே பிடியாய் அன்று மூட்டை முடிச்சுகளுடன் கிளம் பியவர்தான் ஒரு முறை மகளை டில்லி, மும்பை அழைத்து வந்தார். இப்போது அவள் தொந்தரவு தாளாமல் தமிழ்நாட்டு மண்ணை மிதிக்கிறார்.

காற்று செய்த சில்மிஷத்தில் கலைந்த முடிக்கற்றை களை ஒற்றை விரலில் லாவகமாய் ஒதுக்கியபடி வேடிக்கை பார்க்கும் மகளைப் பார்த்தார். அச்சு அசலாய் மீனாட்சியின் பிரதி பிம்பமாய் இருந்தாள் அவள்.

''சித்ரா...'' தந்தையின் குரலில் ஈர்க்கப்பட்டு அவர் புறம் திரும்பினாள்.

''என்ன டாடி?''

''சித்ரா இதுவரையில் நீ வாழ்ந்த முறை வேற, இனிமே நீ வாழப் போற சூழ்நிலை வேற அதுவும் இல்லாம உங்க அத்தை அந்தக்கால மனுஷி! அவ ஏதும் சொன்னா மனசிலே வைச்சிக்காதே. படபடன்னு பேசுவாளே தவிர மனசில ஒண்ணும் வைச்சிக்க மாட்டா! உன் மாமாவும் அப்படித்தான்.''

''அதெல்லாம் நான் பார்த்துப்பேன் டாடி நீங்களும், அம்மாவும் கவலைப்படாம இருங்க.''



''சித்ரா நீ புத்திசாலிம்மா உங்கம்மாவுடைய அனுமதி யோட சென்னையில் வசிப்பதற்காக வந்து இருக்கியே அதுவே பெரிய விஷயம் இல்லையா?''

''முதன் முதலா இப்படித்தான் நாங்க ஸ்டேட்ஸ் போறப்ப இப்படி கடல் தாண்டிப் போற பொழைப்பு நமக்கு வேண்டாங்க. ஒண்ணுக்குள்ளே ஒண்ணா பழகின மனுஷங்கள விட்டுட்டு நான் வரமாட்டேன்னு முரண்டு பண்ணினா அவளை சமாளிக்கிறதுக்குள்ளே நான் பட்ட பாடுயிருக்கே... அப்பப்பா அதை நாள் முழுக்கச் சொல் லிக்கிட்டே போகலாம்!''

''லக்கேஜ்களை எல்லாம் பேக்கப் பண்ண பிறகு கூட, அவள் அழுகையை நிறுத்தலை. மீனாவை சமாளிக்கிற துக்கு ஒரு நாள் ஆச்சு. இதிலே வசந்தா வேற கூட சேர்ந்து கிட்டா இரண்டு பேரும் என்னை நேரடியாத் திட் டலையே தவிர மனசுக்குள்ளேயே திட்டினாங்க.

''அமெரிக்கா வந்த ஒரு வாரம் உங்கம்மா என்னிடம் பேசவேயில்லை. அவளைச் சொல்லியும் தப்பில் லைம்மா. பணம் பணமின்னு அது பின்னாடியே அலைஞ் சோமின்னா உறவுகள் தூரமாப் போயிடும். இருந்தாலும் உலகமே அது பின்னாடிதானே போகுது.''

எவ்வளவுதான் வளர்ந்தாலும் தாய் தந்தையின் பழங்கால நினைவுகளை கன்னத்தில் கை வைத்து கதை யாய் கேட்பது இனிமையல்லவா. அது போல் தந்தையின் அனுபவங்களைக் கேட்டு ரசித்துக் கொண்டே வந்தாள் மகள்.



## 2

மாம்பலம் அயோத்யா மண்டபம் அருகிலுள்ள தெருவினுள் நுழைந்தது டாக்ஸி. வீட்டு இலக்கு எண்ணைக் கூறிவிட்டு மகளின் லக்கேஜ்களை சரி பார்த்து மீட்டருக்கு உண்டான கட்டணத்தைக் கொடுத்தார். இந்த பதினெட்டு வருடங்களில் அத்தெரு ரொம்பவே மாறிப் போயிருந்தது. ஓடு வேய்ந்திருந்த வீடுகள் எல்லாம் கான்கிரீட் தளமாய் மாறி இருந்தன.

தெருக்கள் வெகு சுத்தமாய் இருக்க, அங்கிருந்த பெண்களில் சிலர் இவர்களை கேள்வியாய் நோக்கினார்கள். இதே சினிமாவாய் இருந்தால் நாலு பேர் கோரஸாய் ஆடி ஒரு பாட்டு பாடியிருப்பார்கள், ஆரத்தி எடுப்பார்கள். நிஜ வாழ்க்கையில் ஒரு நிமிடம் நின்று பார்த்துவிட்டு அவரவர் வேலைக்குச் சென்று விடுவார்கள்.

தெருமுனையில் சாயம் இழந்த சுவர்களுடன் இருக்கும் பிள்ளையார் கோயில் இப்போது வண்ணம் பூசப்பட்டு இருந்தது.

சாரதி தொழில் துவக்கிய போதும், வசந்தா சாரதி திருமணத்தின் போதும் இந்த முச்சந்தி பிள்ளையார்தான் அவர் வாழ்வில் பெரும் பங்கு வகித்தவர்.



வசந்தாவின் வீட்டிற்குள் நுழையும் போதே ஊதுபத்தியின் மணம் நாசியைத் தாக்க ''வசந்தா'' என உட்புறம் நோக்கிக் குரல் கொடுத்தார் சாரதி.

மஞ்சள் நிற மைசூர் சில்க்கில் ஈரக் கூந்தலை நுனியில் முடிச்சிட்டு துளியூண்டு மல்லிகையை அதில் சொருகியிருந்த 40 வயது பெண்மணி இவர்களைக் கண்டதும் முகம் நிறைய வியப்பையும், சந்தோஷத்தையும் காட்டினார்.

''வாங்க வாங்க எப்ப வருவீங்கன்னு எதிர்பார்த்துகிட்டே இருந்தோம்!''

''என்னங்க யார் வந்திருக்காங்கன்னு பாருங்களேன்! நம்ம சித்ராவா இது அடையாளம் தெரியாம வளர்ந்திட்டாளே.''

''நீயே பேசிகிட்டு இருந்தா அவங்க எப்படி வாயைத் திறப்பாங்க. நீ போய் காபி எடுத்திட்டு வா. நீங்க முதல்ல உக்காருங்க.'' அவர்கள் அமர்ந்ததும், ''எப்படியிருக்கே சாரதி?''

''நல்லாயிருக்கேன் அத்தான் நீங்க எப்படியிருக்கீங்க?''

''பெருமாள் கிருபையிலும், வசந்தா கருணையிலும் நல்லாவே இருக்கேன். பதினெட்டு வருஷமா பிஸியா இருந்திட்டே. இப்பவாவது வந்தீங்களே. ஆமா மீனா ஏன் வரலையாம்?''

''இல்லே அத்தான் அடுத்த வருஷத்திலே ஆறு மாச காலம் இங்கே வந்து தங்கிட்டுப் போக மீனா பிளான் பண்ணி இருக்கா! சித்ராவுக்கு படிப்பு முடிஞ்சிட்டு அவ

ளுக்கு சிற்பக் கலையில் இருக்கிற விருப்பம் காரணமாக அதைப் பற்றி ஆராய்ச்சி செய்யத்தான் வந்திருக்கா.''

''அப்போ படிப்பு சம்பந்தமா வந்திருக்கா, இல்லையா?''

''இல்லை அங்கிள்! இந்தியா பொருளாதாரத்திலே பின் தங்கி இருந்தாலும் கலாச்சாரத்திலே முதலிடத்தில் இருக்கு. நம் நாட்டு பாரம்பரியத்தைப் பற்றி தெரிஞ்சுக்க எல்லாரும் விரும்புறாங்க. அதனால இந்தத் தகவல்களை எல்லாம் சேகரிச்சு புத்தகம் எழுதலாம்னு இருக்கேன்.''

''வெரிகுட் சித்ரா! உன் முயற்சி வெற்றியடைய என் வாழ்த்துக்கள்.''

''மாமா, ராதா எங்கே?''

''நீ வர்றேயில்லை? ஆபீஸில் முக்கியமான பைல் ஒன்றை ஒப்படைத்துவிட்டு லீவ் சொல்லப் போய் இருக்கா. இப்ப வந்திடுவா...!''

நேரில் பழகும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்றாலும், ராதாவும் சித்ராவும் தொலை தொடர்பு சாதனங்கள் மூலம் நெருங்கிய தோழிகளாகவே இருந்தனர். அன்னிய தேசத்தில் இருப்பவரைக்கூட அண்டை வீட்டில் இருப்பவரைப் போல் பழகும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டதே, சித்ரா! ராதாவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரம் அந்த வீட்டைத் தன் பார்வையால் அளந்தாள்.

அடுக்கடுக்காய் தீப்பெட்டி அளவில் வீடுகளைப் பார்த்துப் பழகியவளுக்கு நான்கு புறம் தூண்களும், திண்ணைகளுடன் கூடிய வாசலும், ஊஞ்சல் அமைந்த முற்றமும் கொண்ட அந்த வீடு மிகவும் பிடித்துப் போனது.



''மீனாட்சி தான் மகளைப் பிரிய மனமில்லை'' - சாரதி.

''அண்ணியைக் கவலைப்படாம இருக்கச் சொல்லு அண்ணா. நம்ம வீட்டுப் பொண்ணு நான் விட்டுடு வேனா யென்ன?'' மணம் வீசும் டிகாஷன் காபியை விநியோகித்தபடியே வசந்தா சொல்ல,

''நீங்க எல்லாம் குளிச்சிட்டு சாப்பிடுங்கோ, நான் ஆபீஸ் போயிட்டு மதியம் சாப்பாட்டிற்கு வந்திடறேன். சாரதி சாக்குல வடை பாயாசத்தோடு சாப்பாடு நாக்குக்கு ருசியா கிடைக்கும். உன் தங்கை பால் பாயாசத்தை கண்லேயே காட்ட மாட்டேங்கிறா சாரதி. தினமும் வத்தக் குழம்பா வைச்சு கொல்றா.'' சிவசு பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொல்லவும் சித்ராவும், சாரதியும் சிரித்தனர்.

அந்நேரமே உள்ளே நுழைந்த ராதா ''என்ன ஒரே சிரிப்பு மயமா இருக்கு. நானும் கலந்துக்கலாமா'' என்று கூறினாள்.

''வாம்மா எப்படியிருக்கே?'' சாரதி.

''நல்லாயிருக்கேன் மாமா, அத்தை ஏன் வரலையாம்?'' அவர் அருகில் அமர்ந்து கொண்டாள்.

''அங்கேயெல்லாம் போட்டது போட்டபடி வந்திருக்கோம். அவளும் வந்திட்டா ரொம்ப கஷ்டம்மா.''

''என்ன சித்ரா உன்னோட ஆராய்ச்சி எல்லாம் அந்த அளவிலே இருக்கு?''

''உன்னைப் பார்த்தா அக்கறையா கேட்குற மாதிரி தெரியலையே! கிண்டலா கேக்குறா மாதிரி இல்லை இருக்கு.''

''பாருங்க மாமா வந்ததும் வராததுமா என்னை சண்டைக்கு இழுக்குறா. உன் மேல அக்கறை இல்லாமலா மகாபலிபுரத்திலே நடக்கிற கண்காட்சிக்கு நீயும் நானும் போக ஏற்பாடு செய்திட்டு வந்திருக்கேன்.''

''ரியல்லி...''

''யெஸ்! சரி குளிச்சிட்டு வா உன்கிட்ட ரொம்ப பேச வேண்டியிருக்கு'' இளசுகள் இரண்டும் பறந்து விட பெரியவர்கள் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தனர்.

விருந்து தயாரானது. குழம்பின் மணம் காற்றில் மிதந்து அனைவரின் மூக்கையும் பதம் பார்த்தது. தோட்டத்தில் தந்தையும், மகளும் அமர்ந்திருந்தனர்.

''அத்தையோட சமையல் வாசனை ஆளையே தூக்குதே.''

''வசந்தா வத்தக்குழம்பு வைத்தால் இன்னைக்கு முழுக்க சாப்பிடலாம் பேசாம நீயும் அவகிட்டேயே சமையல் கத்துக்கோயேன்.''

''ஏன்? அப்போ அம்மா சமையல் சரியில்லையா? இருங்க போன் போட்டு சொல்றேன்'' அவர் சிரித்தார்.

''இந்த வீடு ரொம்ப அமைதியா அழகா இருக்கு இல்லேப்பா. அங்கே எல்லா வசதியும் இருந்தாலும் ஒரு இயந்திரத் தனமான சூழ்நிலையில் உழண்டுண்டு இருந்தோம்.

இங்கேதான் இயல்பா மூச்சுவிட முடியுது. லைப்பில் ஒரு பகுதி நாட்களை வேஸ்ட் பண்ணிட்டேனோன்னு கவலையா இருக்குப்பா.''



''இப்பத்தான் சித்ரா எனக்கு நிம்மதியா இருக்கு. நீ பிறந்ததில் இருந்தே உன்னைக் கண்ணுக்குள்ளேயே வைச்சுப் பார்த்துக்கிட்டோம். புது இடமாச்சே நீ எப்படி இருப்பியோன்னு நினைச்சு கவலைப்பட்டேன். இப்போ அதுவும் நீங்கிடுச்சு'' மகளின் தலையை வாஞ்சையோடு நீவினார் தந்தை.

''மாமா, சித்ரா ரெண்டு பேரும் சாப்பிட வாங்க.'' ராதாவின் குரல் கேட்டு இருவரும் அமர்ந்திருந்த பிரம்பு நாற்காலிகளுக்கு விடை கொடுத்துப் புறப்பட்டனர்.

மேசையின் மேல் உணவு வகைகள் மிக நேர்த்தியாய் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது. உணவின் முன் அமர்ந்த அனைவரும் அரட்டையுடன் உண்ண அவ்விடத்தில் ஒரு இனிமையான சூழல் தோன்றியது.

''ஏன் சாரதி நாளைக்கு ஏதும் முக்கியமான வேலையிருக்கா?''

''இல்லே அத்தான் நாளைக்கு முழு ஓய்வு அதற்கு மறுநாள்தான் பிஸினஸ் விஷயமா ஒருவரை சந்திக்கணும்.''

''அப்போ ஸ்ரீரங்கம் போலாமா?'' - வசந்தா.

''நீங்க ஸ்ரீரங்கம் கோவிலுக்கு போங்க நானும், சித்ராவும் மகாபலிபுரம் போறோம்.''

குதூகலமாய் கூறினாள்.

''பாருங்க மாமா வந்ததும் வராததுமா என்னை சண்டைக்கு இழுக்குறா. உன் மேல அக்கறை இல்லாமலா மகாபலிபுரத்திலே நடக்கிற கண்காட்சிக்கு நீயும் நானும் போக ஏற்பாடு செய்திட்டு வந்திருக்கேன்.''

''ரியல்லி...''

''யெஸ்! சரி குளிச்சிட்டு வா உன்கிட்ட ரொம்ப பேச வேண்டியிருக்கு'' இளசுகள் இரண்டும் பறந்து விட பெரியவர்கள் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தனர்.

விருந்து தயாரானது. குழம்பின் மணம் காற்றில் மிதந்து அனைவரின் மூக்கையும் பதம் பார்த்தது. தோட்டத்தில் தந்தையும், மகளும் அமர்ந்திருந்தனர்.

''அத்தையோட சமையல் வாசனை ஆளையே தூக்குதே.''

''வசந்தா வத்தக்குழம்பு வைத்தால் இன்னைக்கு முழுக்க சாப்பிடலாம் பேசாம நீயும் அவகிட்டேயே சமையல் கத்துக்கோயேன்.''

''ஏன்? அப்போ அம்மா சமையல் சரியில்லையா? இருங்க போன் போட்டு சொல்றேன்'' அவர் சிரித்தார்.

''இந்த வீடு ரொம்ப அமைதியா அழகா இருக்கு இல்லேப்பா. அங்கே எல்லா வசதியும் இருந்தாலும் ஒரு இயந்திரத் தனமான சூழ்நிலையில் உழண்டுண்டு இருந்தோம்.

இங்கேதான் இயல்பா மூச்சுவிட முடியுது. லைப்பில் ஒரு பகுதி நாட்களை வேஸ்ட் பண்ணிட்டேனோன்னு கவலையா இருக்குப்பா.''



''இப்பத்தான் சித்ரா எனக்கு நிம்மதியா இருக்கு. நீ பிறந்ததில் இருந்தே உன்னைக் கண்ணுக்குள்ளேயே வைச்சுப் பார்த்துக்கிட்டோம். புது இடமாச்சே நீ எப்படி இருப்பியோன்னு நினைச்சு கவலைப்பட்டேன். இப்போ அதுவும் நீங்கிடுச்சு'' மகளின் தலையை வாஞ்சையோடு நீவினார் தந்தை.

''மாமா, சித்ரா ரெண்டு பேரும் சாப்பிட வாங்க.'' ராதாவின் குரல் கேட்டு இருவரும் அமர்ந்திருந்த பிரம்பு நாற்காலிகளுக்கு விடை கொடுத்துப் புறப்பட்டனர்.

மேசையின் மேல் உணவு வகைகள் மிக நேர்த்தியாய் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது. உணவின் முன் அமர்ந்த அனைவரும் அரட்டையுடன் உண்ண அவ்விடத்தில் ஒரு இனிமையான சூழல் தோன்றியது.

''ஏன் சாரதி நாளைக்கு ஏதும் முக்கியமான வேலையிருக்கா?''

''இல்லே அத்தான் நாளைக்கு முழு ஓய்வு அதற்கு மறுநாள்தான் பிஸினஸ் விஷயமா ஒருவரை சந்திக்கணும்.''

''அப்போ ஸ்ரீரங்கம் போலாமா?'' - வசந்தா.

''நீங்க ஸ்ரீரங்கம் கோவிலுக்கு போங்க நானும், சித்ராவும் மகாபலிபுரம் போறோம்.''

குதூகலமாய் கூறினாள்.

# 3



வாழ்க்கை, மனிதனுக்கு வாசற்கதவைப் போன்றது. இன்பமும், துன்பமும் ஜன்னல்களாய் மாறி இருளையும், ஒளியையும் பிரதிபலிக்கின்றன. நாளை நடப்பதை யாரறிவார்? இறைவனின் பொம்மலாட்டத்தில் ஈர்க்குச்சி பொம்மைகள் தானே நாம்.

காலை முதல் பணி செய்து களைப்படைந்த சூரியன் தன் கூட்டினை அடைந்தான். உறங்கும் சித்ராவின் முகத்தில் மெல்லிய கீற்றாய் ஒரு புன்னகை.

புன்னகை கடவுள் மனிதனுக்கு அளித்த வரப்பிர சாதம். துன்ப சாயை விரட்டும் சக்தி புத்திக்கு உள்ளதோ இல்லையோ புன்னகைக்கு உள்ளது. அந்த வீட்டுச் சூழலின் இனிமை, வசந்தாவின் அன்பு சித்ராவின் அழகிய முகத்தில் நிம்மதி எனும் பேரொளியைத் தோற்று வித்தது. அவளின் மொட்டு விழிகள் செருக தந்தையின் மடியில் கண் அயர்ந்தாள்.

சாரதி அவளையே உற்று நோக்கினார். கடவுளே எங்கள் வாழ்வின் ஆதாரமே இவள்தான் எக்காலத்திலும் என் மகளுக்கு துணையாய் இருப்பா என மனதிற்குள் இறைவனை வணங்கினார்.

மெல்ல மெல்ல ஆரஞ்ச் நிற சூரியனின் அழகு உதயம் அதிகாலை ஆறு மணியளவில் பனிக்காற்றை சுவாசித்த



படி நான்கு இஞ்ச் இடைவெளியில் தென்னை மரங் களின் நடுவில் சூரியனின் திருமுகம் காண்பது என்ன சுகம்.

அன்றைய பொழுது இனிமையாய் விடிய கடவுளை பிரார்த்தித்தார் வசந்தா. சித்ராவும், ராதாவும் மகாபலிபுரம் செல்ல ஆயத்தமானார்கள்.

‘‘இங்கே பாருங்க பொண்ணுங்களா! காலம் ரொம்ப கெட்டு கிடக்கு. அங்கே இங்கேயின்னு அலையாம காலாகாலத்திலே வீட்டுக்கு வந்து சேருங்க’’ வசந்தா.

‘‘உத்தரவு மகாராணி’’ தலை கவிழ்த்து வணங்கினாள் ராதா.

‘‘போக்கிரி ஒரே பொண்ணுன்னு செல்லங் கொடுத்தா கிண்டலா பண்றே?’’ வசந்தா மகளை அடிக்க வர அவளின் கைக்கு அகப்படாமல் ஓடினாள் ராதா.

மகாபலிபுரம் பல்லவர்கால தமிழகத்தின் சிற்பக்கலை சிறப்பை உலகுக்கு அறிவிக்கும் கலைக்கூடம். கடற்கரை கொற்வை கோவில். கொஞ்சம் மஞ்சள் நிற சிற்பங்கள். ஒரே கல்லில் செதுக்கிய ஐந்து ரதங்களும், சிலையாய் நிற்கும் யானையும் ஒற்றைக் காலில் நின்று கொண்டு பிடிவாதமாய் தவம் செய்யும் அர்ஜுனனின் சிற்பமும், நந்தீஸ்வரமும் கல்லில் இத்தனை வண்ணங்களா என்று வியப்பை உண்டாக்கின சித்ரஞ்சனிக்கு.

எத்தனையோ வெளிநாட்டவர்கள், இந்த அழகினை கண்டு களித்தும் தன் கேமராக்களில் அவற்றை சிறைப் படுத்தியும் இருந்தனர். தாகத்திற்கு பெண்கள் இருவரும் இளநீர் பருகினார்கள். சுட்டெரிக்கும் வெய்யிலில் தொண்

டைக்கு இதமாய் இறங்கியது அவ்விளநீர். சில்லென்று ஊதக்காற்று உடலினைத் தழுவி விளையாட காற்றோடு கலந்த மண் வாசம் மனதை மயக்கியது.

கடல்நீரில் காலை நனைத்தபடி நின்றிருந்தார்கள் சித்ராவும், ராதாவும் துள்ளி வரும் வெள்ளி மணி அலைகளை எடுத்து மாலையாய் அணியத் தூண்டுவது போல் அலையின் அழகு நெஞ்சை அள்ளியது.

''சரி வா சித்ரா உனக்கு உபயோகமான சில இடங்களைப் பார்க்கலாம். பிறகு கண்காட்சிக்குப் போகலாம்.''

கடற்பரப்பிற்கு சற்று தள்ளி மண் குடிசைக்குள் அலங்கரிக்கப்பட்ட பானைகள், சிற்பங்கள் இருந்தன. சில சிப்பிகளை ஒன்றாக கோர்த்துக் கொண்டு இருந்தவரிடம் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர்.

''புராதனமாக கலை சிற்பக் கலை கல்லிலே கலை வண்ணங்கள் சாதாரண விஷயமில்லைம்மா. இதோ இந்த சிறு உளியை வச்சுத்தான் கல்லில் உடைப்போம். அதை தேர்ந்தெடுக்கும் முறை கூட, வித்தியாசமானதாய் இருக்கும். ஒரே கல்லில் ஐந்து சிற்பங்கள் பார்த்து இருப்பீங்களே அதெல்லாம் அந்த காலம். இப்ப இதெல்லாம் விரும்பிப் படிக்க நிறைய பேர் முன் வருவதில்லை.''

மேற்கொண்டு அவர் கூறிய அனைத்து விஷயங்களில் தனக்கு வேண்டியதை மட்டும் குறிப்பெடுத்துக் கொண்டு அவருக்கு இரண்டு ஐம்பது ரூபாய்த் தாள்களையும் கொடுத்த பின் நகர்ந்தனர் கடற்கரையோரம்.

''ராதா நீ கரைக்குப் போ நான் கொஞ்ச நேரம் கழிச்சு வரேன். இங்கேயிருந்து போகவே மனசில்லை.'' ராதா



ஒரு சிரிப்புடன் நடந்தவள் ஈரத்தினால் உடலோடு ஒட்டிய ஆடைகளை சீர் செய்தபடியே அந்த படகின் மேல் அமர்ந்தாள்.

இரண்டு சிறுவர்கள் பந்து விளையாடும் அழகை ரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தான் மதனவர்மன். அவனுக்கும் தன்னுடைய பால்ய பருவம் நினைவுக்கு வந்திருக்கும் போல கண்களில் ஆர்வம் வழிந்தது.

மனது இலேசானது போலிருந்தது. இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகப் பாவிக்க இந்த அலைகள் தான் கற்றுத் தருகிறது. இந்தக் கடலைக் காணும்போது மட்டும் மதனவர்மனின் உள்ளத்தில் ஆர்வம் ஊற்றெடுக்கும்.

அமைதியாய், ஆவேசமாய், அழகாய் தன்னுள் எத்தனை உணர்வுகளை தோற்றுவிக்கிறது. மதனவர்மன் கடந்த ஆறு வருடங்களாக வணிகத் துறையில் கோலோச்சி வருகிறான். அவன் தந்தை இறந்தபோது வயது இருபத்தியிரண்டு. படிப்பை முடித்துவிட்டு வந்த நேரமே அவ்வளவு கம்பெனிப் பொறுப்புகளையும் கையில் எடுக்க வேண்டிய நேரம். ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்று எண்ணியவர்களின் மத்தியில் அந்த சாம்ராஜ்ஜியத்தையே கட்டிக் காத்தவன்.

தந்தையின் இழப்பு தந்த சோகத்தை தாய் நாயகியின் அரவணைப்பு தான் தீர்த்து வைத்தது. கண்களை மூடி ஒரு நொடி சிந்தனையில் ஆழ்ந்தான். கண்களைத் திறந்த நேரம் தனக்கு நேரெதிரே ஒரு பெண் அலைகளுக்கு போக்கு காட்டி விளையாடியது அவனுக்கு வியப்பை உண்டு செய்தன.

நிச்சயம் அவளுக்கு 20 வயதிற்கு மேலிருக்கும். ஆனால் ஒரு குழந்தையின் உற்சாகம் தெரிந்தது. அவளின் செயலில். சித்ராதான் கடலோடு கொஞ்சிக் கொண்டு இருந்தாள். பந்து விளையாடிய சிறுவர்களில் ஒருவன் அலையை நோக்கிச் சென்ற பந்தை எடுக்க விரைய பெரிய அலையொன்று சிறுவனை தன் வசம் இழுக்கவும், சித்ரா அவனை பலங்கொண்ட மட்டும் இழுத்து கரைக்கு தள்ளி விட்டாள்.

ஆனால் அடுத்த முறை வந்த அலையில், நிலை தடுமாறி அவளும் விழ தான் உள்நோக்கி செல்லப் படுவது புரிந்தது. எத்தனை முயன்றும் அந்த அசுர அலையுடன் போராட முடியாமல் துவண்டாள்.

பயத்தில் உடல் மேலும் உதற, கண்கள் செருக யாரோ தன் கையைப் பிடித்து இழுப்பது போல் தோன்றவும் ஏதோ கடல் ஜீவராசிக்கு இன்று இரையாகப் போகிறோம். இனி அவ்வளவுதான் என எண்ணி ''வீல்'' என்ற அலறலோடு எதன் மீதோ மோதினாள்.

அரை மயக்கத்தில் வெகு சிரமத்துடன் கண்களைப் பிரித்தாள். மிக நெருக்கத்தில் ஒரு ஆடவனின் முகம்! பரிச்சயமான முகம்!

## 4



சித்ரஞ்சனி கண் விழித்துப் பார்த்தபோது அவள் இருந்தது ராதாவின் மடியில். சுற்றிலும் கவலையாய் சில அறியா முகங்கள்.



''சித்து ஆர் யூ ஆல்ரைட்?'' ராதா.

''ஐ'ம் ஆல் ரைட் நா எப்படி கரைக்கு வந்தேன்?''

''யாரோ ஒருத்தர் உன்னைக் காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்தார். எனக்கு ஒரே பயமா போச்சு தெரியுமா? வெறும் மயக்கம்தான். குணமாயிடும்னு சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

''அப்படியா?'' அரை மயக்கத்தில் பார்த்த அவன் முகம் கண்களுக்கு மசமசப்பாய் தெரிந்தது. ''யாரோ முன் பின் தெரிஞ்சவர் போல்... யார் ராதா அவர்?''

''முதல்ல இந்த காபியைக் குடி'' பிளாஸ்க்கில் இருந்து ஊற்றி கோப்பையை முன் நீட்டினாள். சோர்ந்திருந்த அவளுக்கு அச்சமயம் காபி தேவைப்பட நன்றியுடன் வாங்கி உறிஞ்சினாள்.

''அவர் பெயர் மதன்னு சொன்னார். பாவம்டீ மனுஷன் உன்னை அந்நிலையில் கண்டதும் ரொம்ப துடித்துப் போனார்! உனக்கு ஒண்ணும் ஆயிடக்கூடாதுங்கிற தவிப்பு அவருடைய கண்களில் தெரிஞ்சுது...!

''அப்புறம் ஏதேச்சையா இந்த பக்கம் வந்த டாக்டர் பயப்பட ஒன்றுமில்லை வெறும் மயக்கம்தான் என்று சொன்ன பிறகு இயல்பு நிலைக்கு வந்தார். அவருடைய பதற்றம் விழிகளில் வழிந்த அன்பு இதெல்லாம் வச்சுப் பார்த்தால் அவர் உனக்கு முன்னமே பழக்கம் என்று தோன்றுகிறது.''

''முதன் முதலா சென்னைக்கு வந்து இருக்கேன். இங்கே எனக்குத் தெரிந்தவர் யாராக இருக்க முடியும்?''

ராதாவிடம் அப்படிக் கேட்டு விட்டாலும் 'மதன்' என்ற பெயர் உறுத்திற்று. மதன் பெயரின் உச்சரிப்பே நாடி நரம்புகளை ஊடுருவியது.

''இங்க பாரு சித்ரா உன்னால முடிஞ்சா இன்னைக்கு கண்காட்சிக்குப் போகலாம். இல்லேன்னா இன்னொரு நாள் போகலாம்'' பரிவுடன் ராதா கேட்க, இன்று உள்ள மனநிலையில் கண்காட்சிக்குச் சென்றாலும் அதில் மனம் நிச்சயமாய் லயிக்காது என்றுணர்ந்தவள் ''வீட்டிற்குப் போவோம்'' என்றாள்.

இருவரும் உடலோடு ஒட்டியிருந்த உடையையும், மணலையும் தட்டிவிட்டு எழுந்து நடந்தனர். சில மணி நேரப் பயணத்திலும் சித்ரஞ்சனி மௌனமாகவே இருந்தாள். வீடு திரும்பியபோது கோவிலுக்குச் சென்றிருந்த பெரியவர்கள் யாரும் வரவில்லை, என்று தெரிய வந்தது சித்ரஞ்சனிக்கு அது சற்று நிம்மதியாகவே இருந்தது.

நேராக சென்று கட்டிலில் விழுந்தாள். ராதாவும் அவள் ரெஸ்ட் எடுக்கட்டும் என்ற நினைப்பில் தன் அறைக்குச் சென்று விட்டாள். மனதின் ஆழத்தில் புதைத்து வைத்திருந்த அந்த வலி மீண்டும் வந்து விட்டேன் என்பது போலக் குத்தியது சித்ரஞ்சனிக்கு.

எத்தனை மறைத்தாலும் மனதில் தண்ணீருக்குள் இடப்பட்ட பந்தாய் மதன் எம்பிக் குதித்தான். ஒரு வேளை அவனாக இருக்குமோ? மதனும் இங்கே தானே இருக்கிறான் என்று முதற் சந்திப்பில் கூறினான். கடவுளே நிச்சயம் அது மதனாய் இருக்கக் கூடாது. அவன் முகத்தைக் கண்டால் நான் என் கட்டுப்பாட்டை இழந்து விடுவேன்.



இங்கிருந்து திரும்பவும் ஸ்டேட்ஸ் கிளம்பும் வரையில் மதனை என் கண்களில் பார்க்க வைத்து விடாதே என்று மனமுருக வேண்டிக் கொண்டாள்.

ஆனால் விதியின் விலை மதிப்பற்ற அர்ச்சனைக்கு முன் இந்த இளம் பெண்ணின் வெற்று வேண்டுதல் கடவுளின் செவிக்கு எட்டவில்லை போலும். அவனைப் பற்றிய நினைப்பே வேண்டாம். சிரமப்பட்டு மனதை வேறு வகைக்குத் திருப்ப எண்ணினாள். சண்டிக் குதிரையாய் அது மதனிடமே போய் நின்றது கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

கிட்டத்தட்ட அதே நிலைமையில்தான் மதனும் இருந்தான். பட்டு மெத்தையில் படுத்து, விட்டத்தை வெறித்தபடியே, ரஞ்சனி என்ன அற்புதமான பெயர் முதற் சந்திப்பிலேயே என் மனம் நிறைந்து விட்டவள் நீ. இதே போல் ஒரு அசம்பாவிதத்தில் தானே மூன்று வருடங்களுக்கு முன்பு மும்பைக்கு சென்றபோது உன்னைச் சந்தித்தேன்.

காலம் காயங்களை ஆற்றும் என்பார்கள். ஆனால் அது உண்மையில்லை. அது மூடி போட்டு மட்டுமே வைக்கிறது. என்றாவது ஒரு நாள் காயம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் தோன்றினால், அது உடனே புற்றுயிர் பெற்று விடுகிறது. அப்படித்தான் மூன்று வருடங்கள் கடந்த நிலையில், இனி அவள் தனக்கில்லை என்ற எண்ணம் அவ்வப்போது மதனவர்மனுக்கு தோன்றும்.

என்று அவளைக் கண்டாலும் என் உண்மை நிலையை விளக்க வேண்டும் என்று துடித்தேனோ அந்த சித்ரஞ்சனியைத் தான் இன்று கடல் அலைகளில் சந்தித்தான்.

ஆனால் எதும் பேச முடியாமல் நாக்கு ஒட்டிக் கொண்டது. சித்ரஞ்சனி நீ கண் விழித்திருப்பாயா உடல் சோர்ந்து இருக்கும் நிலையில் நீ என்னைக் கண்டால் உன் மனம் நோகுமே என்று தான் நான் வந்து விட்டேன். அவளோடு பழகிய அந்த இரு தினங்கள் மனதில் பசுமையாய் மணந்தன.

## 5



மும்பையில் மூன்று ஆண்டுகளுக்கு முன் ஒரு வியாபார நிமித்தமாய் சென்றிருந்த நேரம் தான் சித்ரஞ்சனியை முதன் முதலில் சந்தித்தான் மதனவர்மன்.

ஒவ்வொரு முறையும் வெளியூர் சென்று திரும்பும் நேரம் ஏதேனும் ஒரு பொருளைத் தாய்க்கு வாங்கிச் செல்வது வழக்கம். அதன்படி ஹேண்ட்லூம் ஷோரூமில் ஸின்தெடிக் பட்டுப் புடவை வாங்கிச் செல்வோம் என்ற நினைப்பில் ஒரு மாலை வேளையில் ஷாப்பிங் சென்றிருந்தான் மதனவர்மன்.

சற்று நேரத்திற்குள் பஜாரில் ஒரே சலசலப்பு யாரோ ஒரு பெரிய மனிதரைக் கைது செய்ய அதன் எதிரொலியாய் கல்லெறியவும், கடைகளை உடைத்தும் கலவரம் செய்தார்கள். மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடிட, மதனவர்மன் முன்னேற எத்தனித்த நேரம், அவன் மீது



மெத்தென்று மோதி இறுக அணைத்துக் கொண்டாள் அந்தப் பெண்.

மதனுக்கு மிகவும் தர்ம சங்கடமாய் இருந்தது. இருப்பினும் ஒரே இடத்தில் நின்றால் ஆபத்து என்பதையுணர்ந்து அந்தப் பெண்ணையும் இழுத்துக் கொண்டு அருகில் இருந்த சிறு பூங்காவினுள் நுழைந்து பூச்செடிகளுக்குப் பின் ஒடுங்கினார்கள்.

பயத்தில் அப்பெண்ணின் உடல் நடுங்குவது தெரிந்தது. ''பயம் வேண்டாம். பாதுகாப்பாய்த்தான் இருக்கிறோம்'' என்றான் காதோரம் கிசுகிசுப்பாய்!

அவளின் அல்லி மலர் கண்கள் விரிந்தன.

''ஸாரி நான்...''

''பரவாயில்லை! நாம் இருக்கும் இடம் அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. அதுவுமின்றி போலீஸ் வந்தாச்சு. இனி பயமில்லை.'' மதனவர்மனின் தெளிந்த வார்த்தைகள் அவளின் நடுக்கத்தைக் குறைத்தன.

''நீங்க மும்பையா?''

''இல்லை ஸார்! நான் தமிழ்நாடு தான்! ஆனா ஸ்டேட்ஸ்ஸில் வசிக்கிறோம். அப்பா ஒரு பிஸினஸ் விஷயத்திற்காக மும்பை வந்து இருக்கோம். நானும் அவர் கூடவே வந்தேன். ஷாப்பிங் வந்தப்ப இங்கே கலவரத்தில் சிக்கி கிட்டேன்.''

''நான் மதன் உங்க பெயர்?''

''சித்ரஞ்சனி.''

''பெயர் அற்புதம். ஆனா கொஞ்சம் சரித்திர நெடி அடிக்கிறதே.''

''அப்பாவுக்கும் எனக்கும் வரலாற்றில் ஆர்வம் அதிகம்.''

அவர்களுக்குள் இருந்த இறுக்கம் மறைந்து இயல்பு நிலை திரும்பியிருந்தது. சித்ரஞ்சனி நிமிர்ந்து அவன் முகம் நோக்கினாள். ஆண்மையின் வசீகரம் நிறைந்த கம்பீரமான முகம்! உள்ளே ஊடுருவிப் பார்க்கும் கூர் விழிகள் சிவந்த நிறம் சிகரெட் சுவைக்காத உதடுகள் போலும் சிவந்திருந்தன.

''இங்கே ஒரு அகில இந்திய சிற்பக் கண்காட்சி நடக்குது! ஆனால் அதைப் பார்ப்பது என் நோக்கம். ஆனால் அப்பாவுக்கு முக்கியமான பிஸினஸ் மீட்டிங் இருக்கு.''

''ஒரு சிற்பம் அதை சொல்வது வியப்பாய் உள்ளது'' அவள் முகம் சிவந்தது. முகம் முழுக்க ரத்தம் பாய்ந்து செந்தாமரையாய் காட்சியளிக்க, அதில் லயித்துப் போனவன் தன்னை மறந்து நின்றான்.

ஒருவரையொருவர் பார்வையாலேயே விழுங்கிக் கொண்டார்கள். எத்தனை நேரம் நின்றார்களோ மதனின் செல்போன் சிணுங்கியதும் சிலையானவர்கள் உயிர் பெற்றார்கள்.

மதன் அதைப் பேசாமலேயே அணைத்தான். அதற்குள் கலவரமும் சற்று, அடங்கியிருந்தது. சித்ரஞ்சனி புறப்பட்டாள்.

''நான் ஹோட்டல் ''ஸ்கை விலாவில்'' தங்கி இருக்கிறேன். ஒரு கான்பிரஸ்ஸுக்காக வந்தேன். நேரம் இருந்தால்... நீ.''

''நிச்சயம் வருகிறேன்'' என்றவளின் கைகளைப் பிடித்தபடி ''காத்திருப்பேன் ரஞ்சனி'' என்றான் ஏக்கக் குரலில்...



பிரிய மனமின்றி திரும்பித் திரும்பி நடந்தபடி சென்றாள் சித்ரஞ்சனி.

சித்ரஞ்சனிக்கு இன்னமும் தன் செயலை தன்னாலேயே நம்ப முடியவில்லை.

யாரோ ஒருவன் ஒரே நாளில் இப்படி மனதை கொள்ளையடித்து விட்டானே, ஒரு விபத்திலிருந்து காப்பாற்றிய மனிதரிடம் நன்றி உணர்வு ஏற்படலாம். ஆனால் என்னுள் ஏதோவென்று உழல்கிறதே.

அது ஏன் ஒரு நிமிட சந்திப்பில் ஒரு யுகம் அவனுடன் கழித்தது போல் தோன்றுகிறதே. மதன் என் கைகளைப் பற்றியபோது நான் ஏன் மௌனித்தேன். அந்த ஆசையான தொடுதல் அதைப் பிரியும்போது உயிரை ஊடுருவியது போல் வலித்ததே மதன் ஒரு சந்திப்பிலேயே என்னை வீழ்த்தி விட்டீர்களே.

மதனைப் பற்றி ஒரு விவரமும் அறிந்திருக்கவில்லை. நாளை கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். நினைவுகள் தாலாட்ட உறங்கிப் போனாள்.

## 6



மதனவர்மனுக்கு வேலையே ஓடவில்லை. சுற்றிலும் கண்ணாடிகள் பதித்த அந்த உயர் ரகமான அறையில்

அலங்கரிக்கப்பட்ட ஒரு பூங்கொத்து சித்ரஞ்சனியின் வருகைக்காய் காத்திருந்தது.

காலிங் பெல் சப்தம் மதனவர்மனின் இதயத்திற்குள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் பறக்க கதவைத் திறந்ததும் முகம் தொங்கிப் போனது.

''என்ன மதன் நூறு வால்ட் வெளிச்சத்தோட கதவைத் திறந்தே என்னைப் பார்த்ததும் பவர் கட் ஆன மாதிரி மூஞ்சியையே வைச்சிருக்கே நான் என்ன அழையா விருந்தாளியா?''

''ச்சீ... அப்படியெல்லாம் இல்லை. முக்கியமான ஒரு ஆளுக்காக வெயிட் பண்ணிட்டு இருந்தேன்.''

''அது யாரு மதன் எனக்குத் தெரியாம?''

''நேத்து ஒரு பெண்ணை பார்த்ததா உன்னிடம் சொன்னேனே அருண். அவளை நினைத்துதான்.'' அருண் மதனவர்மனின் பால்ய நண்பன். பள்ளிப் படிப்பை முடித்த உடனே அவர்கள் குடும்பம் மும்பைக்கு, குடி புகுந்து விட்டது. மதனவர்மன் எப்போது மும்பை வந்தாலும் அவனைப் பாராமல் செல்ல மாட்டான்.

''அடப்பாவி வருஷக் கணக்கில் பழகினவனுக்கு ஒரு வரவேற்பு கூட இல்லை. ஒரே நாள் பார்த்த பெண்ணுக்கு வெயிட்டிங்கா? பேஷ்... பேஷ்...''

''அது எப்படிடா ஒரே நாள்லேயே மடக்கிட்டியே?''

மதனவர்மன் சிரித்தான்.

ஓட்டல் வரவேற்பு பெண்ணிடம் மதனின் அறையெண்ணை விசாரித்து வந்த சித்ரஞ்சனி, கதவை தட்ட



நினைத்து கைவைத்ததும் அது இலகுவாய் நகர்ந்து உள்ளே சென்றது.

''ஆமா பொண்ணு பேரு என்ன? ஆள் எப்படி? ஒத்து வருமா?'' அருண்.

''பேரு சித்ரஞ்சனி ஆளும் அழகுதான்.''

மதனவர்மனின் குரல் கூட இருப்பது யார்? பேச்சின் நடுவே தன் பெயர் அடிபடவும் ஓசை எழுப்பாமல் வாயிலிலேயே நின்றாள் சித்ரஞ்சனி.

தந்தை வெளியே சென்றவுடன் மதனுக்காய் தான் ஆசையாய் தேர்ந்தெடுத்து வைத்திருந்த கடிகாரத்துடன் அவனைக் காண புறப்பட்டவள் இன்னும் இரண்டு நாளில் வேலை முடிந்து விடும் ஸ்டேட்ஸுக்கு சென்று விடலாம் என்ற தந்தையிடம் இன்னும் சில நாட்கள் தங்கலாம் என்றும், முடிந்தால் மதனுக்கும், தந்தைக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தலாம் என்ற நினைப்பில் அவனைக் காண ஆவலாய் ஓடோடி வந்தவளுக்கு பேரிடி தாக்கியது போல் இருந்தது.

''உனக்கு மட்டும் எப்படி மதன் சொடக்கு போடற நேரத்திலே பொண்ணு மாட்டுது? மெட்ராஸில் கூட யாராவது மாடலிங் சசிரேகா உன் மேலேயே வந்து விழுவாளே!''

''அவையெல்லாம் ரஞ்சனி முன்னாடி நிக்கக் கூட முடியாது அருண் அவ்வளவு அழகு. ஆள் எப்படின்னு ஆழம் பார்க்க இலேசா கை வைச்சேன். அப்பாவியாய் ரசிச்சா, நீ வேணுன்னா பாரு! இன்னும் இரண்டே நாளில் மதனே தஞ்சம் என்று சுத்த வைக்கிறேன்.''

''முடியுமா மதன்?''

''சந்தேகமா? மதன் ஐ லவ் யூன்னு அவளை உருக வைக்கிறேனா இல்லையான்னு பாரேன். பந்தயம் வைச்சிக்கலாமா?''

சித்ரஞ்சனிக்கு திக்கென்றது. நண்பர்களின் பேச்சில் ஒரு உண்மை தெளிவாய் புரிந்தது. மதனின் நேற்றைய அன்பு உண்மையில்லை. போலியானது. தன்னை எப்படியாவது பணிய வைத்துவிட துடிக்கிறான் என்ன நினைத்து விட்டான் என்னைப் பற்றி ஆண்களை கண்டவுடனே பல்லிளிப்பவள், என்றா.

பெண்கள் என்றால் அத்தனை இளப்பமா. ச்சே இத்தனை கர்வம் பிடித்தவனையா நான் என் கற்பனை நாயகனாக வரித்தேன். ச்சீ இவனுக்கு ஒரு பரிசு வேறு? கோபத்துடன் கையில் மினுமினுத்த பார்சலை உள்நோக்கி வீசினாள்.

மதனவர்மன் ஒருவித திடுக்கிடலோடு வெளி வந்தவன் வாயிலில் சித்ரஞ்சனியைக் கண்டதும் ''வா ரஞ்சனி'' ஆசையோடு வரவேற்றான்.

''ஸாரி மிஸ்டர். மதன் நான் உங்களிடம் அன்பு பாராட்ட வரவில்லை'' அவளின் விட்டேத்தியான பேச்சு மதனவர்மனை வியப்புக்குள் ஆழ்த்தியது.

நேற்று அன்பும், ஆசையும் பார்த்த விழிகளில் இன்று கோபம், அழுகை வெறுப்பு எல்லாம் கலந்திருந்தது. ''என்னாச்சு ரஞ்சனி ஏனிந்த கோபம்?''

''உங்க கூட பேசுவதை விட எனக்கு வேற முக்கியமான வேலையெல்லாம் இருக்கு'' அவள் நகர முற்படவும்.



''ரஞ்சனி இப்படி பேசி என் மனதை நோகடிக்கணுமா?''

''நோடிக்கிறேனா நானா? நீங்களா? அதெப்படி மிஸ்டர் மதன் நட்பு ரீதியிலே நாலு வார்த்தை பேசிட்டா உடனே உங்களை லவ் பண்றேன்னு அர்த்தமா?''

''ரஞ்சனி நீ ஏதோ தப்பா...?''

''ஆமா உங்க குணத்தை தப்பா புரிஞ்சுகிட்டேன் அதெப்படி, கையை சொடக்கிறதுக்குள்ளே உங்க மடியில் விழற கீழ்த்தரமான பொண்ணுன்னு நினைச்சீங்களா?'' என்ன அவள் கேள்வியில் உக்கிரம் கூடியிருந்தது.

மதனுக்குப் புரிந்து விட்டது. சற்று முன் நானும் அருணும் வேடிக்கையாய் பேசியதை இவள் அனர்த்தம் செய்து கொண்டாள். ''ரஞ்சனி அது இரண்டு நண்பர்கள் வேடிக்கையாய் பேசிய சம்பாஷணை.''

''நண்பர்களைக் கண்டு குணத்தைத் தெரிந்து கொள் என்பார்களே உங்களுக்கு அது நன்றாய் பொருந்துகிறது. ஒரு பெண்ணின் மன உணர்வுகளோடு விளையாடுவது தான் வேடிக்கையா?''

''ரஞ்சனி ப்ளீஸ் ஒரு நிமிடம் நான் சொல்வதைக்கேள்'' மதனின் குரல் தழுதழுத்தது.

''என் வாழ்நாளில் உங்களை நான் இனி சந்திக்கவே கூடாது'' புயலாக வெளியேறினாள் சித்ரஞ்சனி.

மதனவர்மனின் இதயத்தை யாரோ சுக்கு நூறாய் உடைத்தது போலிருந்தது. கீழே சிதறிக் கிடந்த அந்த ஜரிகை கவர் சுற்றிய பெட்டியை எடுத்துப் பிரித்தான். உள்ளே, தங்க நிறப் பட்டையில் ரோலக்ஸ் வாட்ச் ஒன்று தகதகவென ஒளிர்ந்தது.

ஒவ்வொரு முறை அலாரத்தின் போதும் இனிமையான இசை ட்யூன் செய்யப்பட்டு இருந்தது.

சித்ரஞ்சனிக்காக வாங்கிய பூச்செண்டை கையி லெடுத்தான். அதில் சிவந்த ரோஜாவினுடைய முள் ஒன்று அவன் கையைப் பதம் பார்த்தது. அன்றைய சம்பவத்திற்குப் பிறகு அவன் இன்று தான் சித்ரஞ் சனியை சந்திக்கிறான். இனி எங்கு பார்க்க நேர்ந்தாலும் தான் கீழ்த்தரமானவன் இல்லை என்பதை அவளுக்குப் புரிய வைக்க முயல வேண்டும்!

''அவள் மனதில் விழுந்த கருப்பு புள்ளி நீங்குமா?'' சிந்தனைகளோடு அவள் பூ முகத்தை கண்ணில் நிறுத்தி உறங்க முயன்றான்.

7



கண்களுக்கு எட்டாத கடற்பரப்பிற்கு அப்பால் சூரியன் விடிவெள்ளியின் தீர்ப்பில் விடுதலை செய்யப் பட்டு மேலெழுந்த நேரத்தில் ஜாகிங்கை முடித்திருந்த துடன், டைனிங் டேபிளின் முன் அமர்ந்தான். அம்மா நாயகி டிபன் தட்டுகளுடன் வந்து மகனுக்குப் பரிமாறி னார்.

அவன் வழக்கத்திற்கு மாறாக அமைதியாக உண வருந்திக் கொண்டு இருந்ததைக் கண்டு, ''என்ன மதனா



உடம்புக்கு ஏதும் சரியில்லையாப்பா?'' என்றார் கவலை யுடன்.

''இல்லேம்மா நல்லாத்தானே இருக்கேன்.''

''உன் அசைவை வைத்தே நான் கண்டு பிடித்து விடுவேன் மதனா இன்று உன் முகமே சரியில்லை. பொதுவாகவே நீ இருக்கும் இடம் களை கட்டுமே ஏதும் பிரச்சனையா?''

''அலுவலக வேலையில் இருக்கிறேன் யோசனை யாய். அதனால் உங்களுக்கு அப்படித் தோன்றியிருக் கலாம். மற்றபடி வேறு ஒன்றும் இல்லையம்மா.''

''எனக்கென்னவோ என் அன்பு மகன் யாரிடமோ எக்குத் தப்பாய் மாட்டிக் கொண்டான் என்று தோன்று கிறது உண்மையா?''

''என்னம்மா இது? கிண்டல் செய்துகிட்டு.''

''இந்தக் காலத்து பிள்ளைங்களுக்கு மனசில் ஆயிரம் ஆசைகள் இருக்கு. ஆனா இந்தக் கிழவிக்கு என்ன தெரியப் போகுதுன்னு நினைப்பு அப்படித்தானே?'' நாயகி குறும்பாய் கண்ணைச் சிமிட்டினார்.

''நீங்க பெரிய மனோ தத்துவ டாக்டரா இருக்க வேண் டிய ஆளும்மா!''

''மகனைப் புரிஞ்சிக்க டாக்டராத்தான் இருக்கணுமின்னு அவசியம் இல்லை. மனம் நிறையப் பாசம் இருந்தா போதும். சொல்லு யாரையாவது விரும்புறீயா?''

''போங்கம்மா எனக்குத் தலைக்கு மேல வேலை கிடக்கு.''

"ஆமாமா தலைக்கு மேல தான் விவகாரம் போயிருக்கு! அதான் ரஞ்சனி ரஞ்சனின்னு தூக்கத்துல புலம்பினி யாக்கும்" கேட்டு விட்டு வாய் மூடிச் சிரிக்கும் தாயின் முகத்தைப் பார்க்க வெட்கப்பட்டான். "நிஜமாகவா?"

"இல்லேன்னா எனக்கெப்படி அந்த பேரைத் தெரியும்? திருட்டுப் பயலே கல்யாணமாவது சொல்லிட்டு செய் வியா?"

"போங்கம்மா" என்று எழுந்து நழுவிய மகனைப் புன்னகையுடன் பார்த்தார் நாயகி.

பெற்றோருக்கு எப்போதும் ஒரே வேண்டுதல்தான் தன் பிள்ளைகள் மகிழ்வுடன் வாழ வேண்டும் என்பது தான் அது. எப்போதும் வேலை வேலையென்று ஓடிக் கொண்டிருந்த மகனிடம் இது நல்ல மாற்றம் தான். ரஞ்சனி நல்ல பெயர். ஆனா பெண் எப்படி இருப்பாளோ தெரியவில்லையே. இத்தனை பெரிய ஆபீஸ் நிர் வாகத்தையே திறம்பட நடத்தும் அவனுக்கு தன் எதிர் காலத் துணையைத் தேர்ந்தெடுக்கத் தெரியாதா என்ன என்றெண்ணியபடியே மௌனமானார் நாயகி.

"அம்மா மதிய உணவு எனக்கு தயார் செய்ய வேண் டாம். முக்கியமான கிளையண்ட்ஸ் சந்திக்க வேண்டி யிருக்கிறது. அதனால் வெளியிலேயே சாப்பிட்டு விடு வேன். இரவு தாமதமாகும். நீங்கள் சிரமப்பட வேண் டாம்." தாயிடம் விடை பெற்று சீயல்லோவை உசுப்பி னான்.

இனி அம்மாவிடம் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும். முகத்தை வைத்தே மன மாற்றத்தைக் கண்டு பிடித்து விட்டார்களே. ரஞ்சனி நீ மட்டும் என்னைப்



புரிந்து கொண்டால் நான் எத்தனை சந்தோஷம் அடை வேன் தெரியுமா?

"சித்ரா சித்ரா!" வாசலில் நின்று தன் மைத்துனரின் மகளை வாஞ்சையோடு அழைத்தார் சிவசு.

"என்ன மாமா?" கேட்டபடியே வந்த சித்ரஞ்சனி பாவாடை தாவணி உடுத்தியிருந்ததைக் கண்டு "என் னம்மா அமெரிக்காவில் வளர்ந்தது ஜீன்ஸு"ம் டாப்ஸு" மாய் இருப்பேன்னு பார்த்தா, நம்ம ஊர்ப் பொண்ணு மாதிரி உடுத்திண்டு இருக்கியே?"

"இதுவா மாமா ராதாவோடது அத்தை தந்தாங்க. நல்லாயிருக்கா மாமா."

"என்ன வசந்தா இவகிட்டேயும் உன் வேலையை ஆரம்பிச்சிட்டியா அங்கேயெல்லாம் அவ சுதந்திரமா வளர்ந்திருப்பா. அது செய் இது செய்யுன்னு அவளை விரட்டிண்டு இருக்காதே."

"நான் ஏங்க கட்டாயப்படுத்தறேன். அவ தான் ஆசையா இருக்குன்னு கேட்டா. ஆனா சும்மா சொல்லக் கூடாது எத்தனை டிரஸ் வந்தாலும் பொம்பளைக்கு அழகு புடவையும், தாவணியும் தான்!" சித்ரஞ்சனிக்கு கன கச்சிதமாய் பாவாடை தாவணி பொருந்தி இருந்தது.

"ஆமா, சாரதி எங்கே நேத்து நைட் பார்த்ததோட சரி ஆளையே காணோம்?"

"அப்பா முக்கியமான பிஸினஸ் மீட்டிங்கிற்காக போயிருக்கார் மாமா."

"நீ சாப்பிட்டியா சித்ரா."

"ம்... ஆச்சு அத்தை கையால சுடச்சுட வெண் பொங்கலும், மிளகு சாம்பாரும்."

"அப்படியா உன் அத்தைக்கு வெண் பொங்கல் செய்யத் தெரியுங்கிறதே நீ வந்த பிறகு தான் எனக்குத் தெரியுது."

"எங்க இப்படி பொய் சொல்றீங்க அப்புறம் வெறும் சுடுகஞ்சி தான் ஆமா."

"அச்சச்சோ ஆயிரம் தான் சொல்லுடி உன் கைப்பக்குவத்தை அடிச்சிக்க வேற ஆளே இல்லை தெரியுமா?"

"வழியாதீங்க டிபனை டேபிள் மேல் எடுத்து வைச்சிருக்கேன். கை, கால் அலம்பிட்டு சாப்பிட வாங்க. பிள்ளையில்லாத வீட்டிலே கிழவன் துள்ளி விளையாண்டானாம். வயசு பிள்ளைங்க இருக்க ஒரு அடி தள்ளி நின்னே பேசுங்க" முகத்தை தோளில் இடித்தபடி வசந்தா உட்புறம் நகர, சிவசு மாமா சித்ராவைப் பார்த்து புன்னகைத்தவாறே கொல்லைப்புறம் சென்றார்.

கேலியும், கிண்டலும் நிறைந்த அந்த குடும்பமும், வயதான அத்தம்பதியினரின் ஊடலும் கூடலும் நிமிட அவகாசத்தில் மாறி மாறி வர அதை சுவாரஸ்யமாய் அனுபவித்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தவளின் கவனத்தை ஈர்த்தது ராதாவின் உடையலங்காரம்.

"ஏய் எங்கே கிளம்புறே உன் டிரஸ்ஸைப் பார்த்தா ஆபீஸ் போறவ மாதிரி தெரியலையே."

"கத்தாதே சித்து இன்னைக்கு ஒரு முக்கியமான பங்ஷன் இருக்கு. அதான் ஆபீசுக்கு ஆப்டே லீவ் போட்டுட்டு வந்திருக்கேன்."



"எங்கே போற ராதா?"

"போறே இல்லை போறோம் நீயும் தான் கூட வர்றே."

"நா வர்லேப்பா."

"ஏய் ப்ளீஸ் நீ வந்தாத்தான் அம்மா ஒத்துப்பாங்க இல்லேன்னா எல்லாமே வேஸ்ட்டா போயிடும்."

"அப்படின்னா எங்க போறோமுன்னு கரெக்டா சொல்லு."

"என் ப்ரண்ட்டோட பிறந்த நாள் விழாவிற்குப் போறோம்."

"சீக்கிரம் கிளம்பு சித்து அப்புறம் விளக்கு வைச்ச நேரமின்னு அம்மா வெளியே அனுப்பமாட்டா. இன்னொரு விஷயம் நாம கச்சேரிக்கு கலையரங்கம் போறோமுன்னு அம்மாவிடம் சொல்லி இருக்கேன் ரெடியாகு" அவள் வெளியேறினாள்.

"ப்ரண்டோட பிறந்த நாள் விழாவிற்கு போறதுக்கு எதுக்காக கச்சேரின்னு பொய் சொல்லணும்?" யோசித்தபடியே பெட்டியைத் திறந்து அந்த ஆகாய வண்ண நீலநிற புடவையை எடுத்தாள்.

சித்ராஞ்சனிக்குப் பிடித்த நிறம் அது. மதனை கண்ட போது கூட இந்த உடையணிந்து இருந்தபோதுதான். மிக மிருதுவான மெல்லிய புடவை நட்சத்திர வடிவில் சிறு சிறு கற்கள் பொருத்தப்பட்டு இருக்கும். கைகளில் நீல நிற கண்ணாடி வளையல்களும், கழுத்தில் நீல நிற லாக்கெட் பதித்த தங்கச் சங்கிலியும் அதற்கு பொருத்தும்

வண்ணம் கம்மல்களும் அணிந்து கூந்தலை தளர்வாய் பின்னினாள்.

''டிரஸ் மாத்திட்டியா'' என்ற கேள்வியோடு உள்ளே நுழைந்த ராதா,''வாவ்'' என்றாள் தன்னையும் அறியாமல்.

''சித்ரா ரொம்ப அழகு நீ'' கண்ணடித்தாள்.

வசந்தாவிடம் கூறிவிட்டு புறப்படவும், ''சித்ரா! வந்ததும் உனக்கு திருஷ்டி சுத்திப் போடணும்மா!''

''எத்தனை அம்சமாயிருக்கே! இவளும் இருக்காளே எந்நேரமும் உறையை மாட்டிகிட்டு!'' என்றார்.

ராதா தங்க நிறமணிகள் வேலைப்பாடு அமைந்த சல்வார் அணிந்து கூந்தலை போனிடைல் போட்டு இருந்தாள்.

''கொஞ்ச இரேன்'' என்று உள்ளே சென்று வசந்தா கையில் கல் வைத்த பில்லைகள் இருந்தன. சித்ராவின் கூந்தலின் பின்னல்களுக்கு இடையில் குத்திவிட அது மேலும் அழகு சேர்த்தது.

''எதுக்கு அத்தை இதெல்லாம்?''

''பார்க்க நல்லாயிருக்கு சித்ரா! போயிட்டு சீக்கிரமா திரும்பிடுங்க'' விடை பெற்றுக் கொண்டு அவர்களிருவரும் பேருந்து நிலையத்தை அடைந்தார்கள். அங்கே தனக்கொரு புது அனுபவம் நேரப்போவது தெரியாமல் குதூகலமாய் அத்தை மகளுடன் பயணம் செய்தாள் சித்ரஞ்சனி.



# 8



பயண நண்பனான, அரசு பேருந்து தி.நகர் நிறுத்தத்தில் பயணிகளுடன் தன் நட்பை முறித்துக் கொண்டான். ராதாவும், சித்ராவும் பேருந்தில் இருந்து உதிர்ந்தனர்.

நடேசன் தெருவில் உள்ள அந்த குட்டி பங்களா விழாக்கோலம் பூண்டிருந்தது. நட்சத்திர வடிவ விளக்குகள் இருளை விரட்டியே தீருவோம் என்று சபதம் கொண்டதைப் போல வெளிச்சம் பரப்பின.

உள்ளே நுழைந்த மறுநிமிடமே வெள்ளை நிற குர்தா அணிந்த அவன் ஆவலாய் இவர்களை எதிர் கொண்டான். ஆறடிக்கும் சற்று குறைவான உயரம், ஒல்லியான தேகம், குழந்தை முகமுமாய் ''வா ராது வா எங்கே நீ வரமாட்டியோன்னு நினைச்சேன்'' கனிவாய் பேசியவன் அருகில் நின்ற சித்ரஞ்சனியைக் கண்டதும் ''யேய் இவங்கதான் நீ சொன்ன சித்ராவா ரொம்ப அழகா இருக்காங்களே!''

''அப்படியா?'' ராதா அவன் காது மடல்களை செல்லமாகப் பிடித்துத் திருகினாள்.

''சித்ரா இது ராஜேஷ்! வர்மா அட்வடைஸிங்கில் சீப் கேமிராமேன்! இவர்தான் இன்று பர்த் டே பாய்.

''மெனி மோர் ஹேப்பி ரிட்டன்ஸ் ஆப் த டே ராஜேஷ்.''

''தேங் யூ. பை தி பை'' சித்ரா என்னுடைய ப்ரெண்ட்ஸ் எல்லோருக்கும் ராதாவை இண்ட்ரடியூஸ் பண்ணனும். நாங்க போகட்டுமா ப்ளீஸ்.''

அவள் சரியென்று தலையசைக்கவும் அவர்கள் நகர்ந்தனர். ராதாவும், ராஜேஷும் பழகுவதைப் பார்த்தால் இருவருக்கும், நட்புக்கும் மீறி ஏதோவொன்று உள்ளது. காதலென்றால் கட்டுப்பெட்டியாய் இருக்கும். அத்தை எப்படி இதற்கு ஒப்புக் கொள்ளுவார்?

காதல் எப்போதும் எங்கே வளரக்கூடாதோ அந்த இடத்தில் தான் வளரும். எதிரெதிர் துருவங்கள் ஒன்றோ டொன்று ஈர்க்கும் என்பதுபோல, காதலைப் பற்றிய எண்ணம் தோன்றும் பொழுதே சித்ராவிற்கு மதனின் நினைப்பு எழுந்தது. அளவாய் வெட்டப்பட்ட புல்தரை அவளின் மலர் பாதங்களை உள்வாங்கிக் கொள்ள மெல்ல நடந்து பூச்செடிகளின் பக்கம் சென்றாள்.

ரம்மியமான அந்த இளம் ஒளியும், மலர்களின் நறுமணமும், டேப்ரிக்கார்டரில் ஒலித்த மெல்லிய இசையும் மதனை அவளுக்கு வலுக்கட்டாயமாய் நினைவூட்டின. அவனின் வசீகரமான சிரிப்புனுள் தான் கட்டுண்டு கிடந்தது. அன்றைய தினம் மதனை சந்திக்கும் நேரம் தன் அன்பை கோடிட்டு காட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் சென்றாள்.

ஆனால் அவனோ நண்பனிடம் பந்தயம் அல்லவா கட்டினான். நல்லவேளை உண்மையான காதலுடன் நான்



நெருங்கி இருந்தால் கூட அவன் என்னை ஏளனமாகத் தானே பார்த்து இருப்பான்.

காதல் சிலருக்கு மட்டும் தான் இன்பம். வேர்கள் இனித்தாலும் விதைகள் கசக்கிறதே. எத்தனையோ ஆண்களை சந்தித்திருந்தாலும் நான் மயங்கியது மதனிடம் தானே. சிந்தனைகளின் வலைப்பின்னலில் சிலந்தியாய் அவள் மனம் சிக்கிக் கொண்டது.

''ரஞ்சனி!'' திடீரென எங்கோ அதல பாதாளத்தில் மதனின் குரல்! அதே கனிவான அழைப்பு! எதிரே மதனின் கம்பீர உருவம்! சித்ரஞ்சனிக்கு எல்லாம் மயக்கத்தில் நடப்பது போல் பிரமிப்பாக இருந்தது.

இது மதன் தானா இல்லை அவனைப் பற்றியே எண்ணிக் கொண்டு இருந்ததால் உண்டான பிரதி பிம்பமா அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. எதிரே நின்ற மதனின் காந்த கண்கள் அவளைக் கட்டிப்போட்டன.

''ஏய் சித்து என்ன நின்னுகிட்டே தூங்குறே?'' ராதாவின் உசுப்பலில் திடுக்கிட்டவளுக்கு ஐந்து நிமிடங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''வாங்க ஸார்!'' என்று அருகிலிருந்த மதனை வரவேற்றான் ராஜேஷ்.

''இவர் தான் எங்க எம்.டி. மிஸ்டர் மதனவர்மன்! ஸார் இது ராதா இவங்க அவளோட கஸின் பேரு சித்ரஞ்சனி.''

''வணக்கம்'' - மதனவர்மன்.

''ஸார் நீங்க தானே மாமல்லபுரம் கடலில் சித்ராவை காப்பாத்தினீங்க. அன்னைக்கு ஒண்ணுமே சொல்லாம போயிட்டீங்க. இவதான் யாரு யாருன்னு கேட்டு என்னை

துளைச்சி எடுத்திட்டா'' அவன் சிரிக்க, சித்ரஞ்சனிக்கு தன் கண்களைத் தன்னாலேயே நம்ப முடியவில்லை. வியப்பாய் இருந்தது. கற்பனையில் தூவப்பட்ட விதை நிஜத்தில் மரமாய் முளைத்து இருந்ததைப் போல், மனதிற் குள் ஆயிரம் பூக்கள் ஒரு சேரப் பூத்தது போலிருந்தது.

''ப்ளீஸ் ஸார் சாப்பிட வாங்க!'' ராஜேஷ் அழைக்க, சித்ரஞ்சனியின் பக்கம் ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு நகர்ந்தான் மதன்! அச்சிரிப்பு அவளை ஈர்த்ததை விட கலவரப்படுத்தியது தான் அதிகம்.

அது பஃபே முறையிலான விருந்து! ஆளுக்கொரு தட்டில் வேண்டியதை எடுத்துக் கொண்டு நின்றபடியே உண்டார்கள். சித்ரா சிறிதளவு நூடுல்ஸ் மட்டும் எடுத்துக் கொண்டாள். அதுவும் தொண்டைக்குள் இறங்க மறுத்தது.

அதோ அங்கே சிலருக்கு நடுவில் பளீரென்று வெண்நிற பற்கள் காட்டி என்ன வசீகரமாய் சிரிக்கின்றான். பேச்சுக்கிடையே அவனின் கண்கள் இவளை மொய்த்தன.

கையில் உணவுத்தட்டுடன் அவனும் இவளை நோக்கி வந்தான்! சித்ரஞ்சனிக்கு கை, கால்கள் உதறின. ஒரே நாளில் மடக்கி விடுவேன் என்று திமிராய் பேசியவனா யிற்றே! இன்று அவன் முன்னால் போய் என்னை மறந்து நின்றேனே ச்சே!

''என்ன ரஞ்சனி மனசுக்குள்ளேயே என்னைத் திட்டு கிறாயா?''

''உங்களைத் திட்ட நான் யார்?''

''இன்னும் என் மேல் கோபம் தீரவில்லை போல! பரவாயில்லே! இரண்டு தடவை உன்னை ஆபத்தி



லிருந்து காப்பாற்றி இருக்கிறேன் ஒரு நன்றி கூட இல்லை.''

''நன்றி'' ஒற்றைச் சொல்லுடன் அவள் நகரவும், சிறு மணல் திட்டு அவள் கால்களை தடுக்க மதனவர்மன் தன் கரங்களால் அவளை விழாமல் பிடித்துத் தாங்கினான்.

''உனக்கு எதிலும் அவசரம் தான் நீ விழுந்து இருந்தால் அந்த மணல் திட்டில் இடித்துக் கொண்டு பல் உடைந் திருக்கும். நன்றாய் இருக்கும் பெண்களுக்கே மாப்பிள்ளை கிடைப்பது கஷ்டம் நீ வேறு பல்லை உடைத்துக் கொண்டால் என்னாவது?''

''மைண்ட் யுவர் பிஸினஸ்.''

''ம்... இதுவும் என் வேலை தான், உன்னைக் காப் பாற்றியது இது மூன்றாம் தடவை.''

''இதற்கென்றே அலைவீர்கள் போல!''

''அப்படி மோசமான ஆளில்லை நான்! உன்னை காப் பாற்ற உன்னைத் தொட்டதை தவிர வேறெதுவும் செய் தேனா? என்னை சபலிஸ்ட் லிஸ்ட்டில் சேர்த்து விட் டாயே?''

சித்ரஞ்சனி ஏதோ சொல்ல வாயெடுக்கவும் ''நேரமாச்சு கிளம்பலாம் சித்து'' என ராதா வந்து நின்றாள்.

''இந்த இனிய சந்திப்பு மீண்டும் தொடர விரும்பு கிறேன்'' என அழுத்தமாய் சித்ராவிற்கு புரியும் விதத்தில் கூறினான் மதனவர்மன்.

வீடு வந்து சேரும் வரை எதுவுமே பேசவில்லை சித் ரஞ்சனி. ''என்ன சித்ரா அமைதியா இருக்கே?''

''நத்திங்! லேசா தலைவலி அவ்வளவுதான்.'' உடனேயே நைட்டிக்கு மாறி மொட்டை மாடியில் தஞ்சம் புகுந்தாள்! ராதாவிற்கு அவளின் செய்கை வியப்பை அளித்தது.

# 9



வான சந்தையில் மேகக் கூட்டத்தின் நடுவில் நட்சத்திர மீன்களை விற்கத் தயாராகினாள் நிலாப்பெண். அவைகள் தன்னுடன் ஏதோ மௌன மொழி பேசுவது போல் தோன்றியது சித்ரஞ்சனிக்கு மனது மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு மாறியிருந்தது.

யாரை வாழ்நாளில் காணவே கூடாது என்று நினைத்திருந்தாளோ அவனே எதிரில் வந்து நிற்கிறான். இதைத் தான் விதியென்பதோ? வெளியே என்ன தான் அவனை வெறுப்பதாய் மனம் கூறினாலும், அவளின் இதயத்தில் சிம்மாசனமிட்டு மதன் வீற்றிருப்பது சித்ராவால் மறுக்க முடியாத ஒன்று.

மனம் ஒரு குரங்கு என்பது உண்மை தான். மும்பை ஓட்டல் அறையில் அவன் தன் நண்பனிடம் உரையாடிய சொற்கள் நெஞ்சில் நெருஞ்சியாய் குத்தியது. இன்றோ அவன் சந்திப்பு இனிக்கிறது. அப்படியெனில் மதனை என் மனம் உள்ளூர நாடுகிறதா? என் வீம்பு தான் அவனை விலக்கி வைத்ததோ?



ஆனால் நான் மதனை உண்மையாய் உயிராய் தானே நேசித்தேன்! இரு நண்பர்களுக்குள் நடந்த வார்த்தை விளையாட்டில் மதன் கூறிய வார்த்தைகளை நான் தான் தவறாகப் புரிந்து கொண்டேனா.

இன்று கூட அவன் கண்களில் காதல் இருந்ததா? அவனின் அழைப்பில் என்னை மறந்து நின்றதைக் கூட ஏளனமாய் நினைத்திருப்பானா? எண்ணங்கள் ஒன்றோடு ஒன்று போட்டியிட குழம்பிப் போய் அமர்ந்திருந்தாள்.

''என்ன சித்ரா ஏதும் ஆழ்ந்த யோசனையா?''

''ச்சே அதெல்லாம் ஒன்றுமில்லை அப்பா வந்துட்டாரா?''

''இன்னும் இல்லை நான் உன்கிட்டே கொஞ்சம் பேசணும்'' ராதா.

''ராஜேஷ் பத்தி தானே'' சித்ரஞ்சனி.

''எப்படி கண்டுபிடிச்ச?''

''உன் வெட்கத்தைப் பார்த்தாலே தெரியுதே என்ன பேசணும் சொல்லு.''

''ராஜேஷை உனக்குப் பிடிச்சிருக்கா?''

''பார்வைக்கு நல்லவராய் தான் தெரியறார்.''

''ஆனா அதை மட்டும் நம்பிடாதே. காதல் ரொம்ப பொல்லாதது. அது கடல் போல ஆழம் அதிகம். மீள்வதும் கடினம்.''

''இல்லே சித்ரா ராஜேஷ் ரொம்ப நல்லவர்.''

''சரி. இதையெப்படி வீட்டில் சொல்லப்போறே.''

''அதை நெனைச்சாத்தான் கை, கால் எல்லாமே நடுங்கியது. நான் உன்னைத்தான் நம்பியிருக்கேன்.''

''கவலைப்படாதே. நான் உடனே இதைப்பற்றி அப்பா விடம் பேசி மாமாகிட்டே பேசச் சொல்றேன் போதுமா.''

''அய்யய்யோ.''


''பயம் வேண்டாம். அப்பா ஸ்மூத்தா பேசுவார். டோண்ட் வொர்ரி ராஜேஷ் நல்ல வேலையில் இருக்கார் நல்ல குணம் வேறென்ன வேணும்.''

''தேங்க்ஸ் சித்து. ஆமா நான் உன்கிட்ட அப்பவே கேக்கணுமின்னு நினைச்சேன். நீயும் மதன்சாரும் ரொம்ப டீப்பா பேசிகிட்டு இருந்தீங்களே உங்களுக்குள்ளே ஏற்கெனவே பரிச்சயமா?''

ராதா அப்படியொரு கேள்வியைக் கேட்பாள் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. சித்ரா அவளுக்கு என்ன பதில் சொல்வது என விழித்துக் கொண்டு இருந்த நேரம்.

''சித்ரா!'' கீழேயிருந்து சாரதியின் குரல்! தப்பித்தோம் பிழைத்தோம் என்று குதித்தோடினாள் சித்ரஞ்சனி.

## 10



கண்காட்சிக்கு வைக்கப்பட்ட பொம்மைகள் போல ஏகப்பட்ட விமானங்கள் பல சைஸ்களில் பறக்க காத்



திருந்தன. மடிப்பு கலையாத உடைகளுடன் மக்கள் சற்று பரபரப்பாய் அங்கும் இங்கும் நடக்க விமான நிலையத்தின் மேற்கூரையில் ஒளிந்து கொண்டிருந்த ஸ்பீக்கரில் இனிமையாய் மிதந்து வந்தது அறிவிப்பு.

ஏர் இந்தியா போயிங் விமானப் பயணிகள் பாதுகாப்பு மற்றும் பரிசோதனைக்காக அழைக்கப்படுகிறார்கள்.

சாரதி தன் மகளின் கரத்தை நெருக்கமாய் பற்றியபடி இருந்தார். சித்ரஞ்சனியின் கண்களில் கண்ணீர் மெல்ல எட்டிப் பார்த்தது. சாரதி ஸ்டேட்ஸ் திரும்பும் நாள் என்பதால் சித்ரா தந்தையை விட்டு ஒரு நொடி கூட அகலவில்லை. கிளம்பும் நேரம் அத்தை வசந்தா கண்கள் கலங்க, அண்ணனின் மேல் தமக்கை கொண்ட பாசம் மகளைச் சிலிர்க்கச் செய்தது. அவள் மட்டும் விமான நிலையம் வரை சென்று வர தீர்மானித்தாள்.

''சித்ரா எங்க உடல்தான் அங்கே இருக்கும். மனசு எப்பவும் உன்னைச் சுற்றித்தான் வலம் வரும் ஊருக்குப் போனதும் அம்மாவும், நானும் போன் பண்றோம்மா.''

''சரிப்பா நீங்க உடம்பை பார்த்துக்கோங்க. என்னைப் பற்றிக் கவலைப்படாதேன்னு அம்மாகிட்டேயும் சொல் லுங்க. அப்புறம் ராதா விஷயம்... அவள் இழுக்க.''

''டோன்ட்வொர்ரி மைடியர் என் ப்ரண்ட் சன் ரங்க ராஜன் கிட்டே அந்த பையனைப் பற்றி விசாரிக்கச் சொல்லியிருக்கேன் நல்ல ரிசல்ட் வரட்டும். நானே அத்தானிடம் பேசறேன் அது வரையில் ராதாவிடம் கூட சொல்லாதே.''

''சரிப்பா.''

"45 நிமிடங்களில் போர்டிங் குளோஸ் செய்யப்பட்டது. விமானம் தன் இறக்கைகளை விரிக்கத் தொடங்கியது. முதன் முறையாய் தந்தை தாயைப் பிரிந்த சோகம் மனதை அப்பினாலும், இனம்புரியாத படபடப்பு அவளுக்கு, மனம் திடீரென வெறுமையானாற் போல் இருந்தது.

பிரிவுத் துயரை விரும்பி ஏற்றாலும் ஏனோ தாய் தந்தையின் அரவணைப்பிலேயே வாழ்ந்தது நினைவிற்கு வந்தது. ஆதரவில்லாத வனத்தில் அநாதையாய் விடப் பட்ட புறாவைப் போல் கலங்கினாள்.

"நாலு பேர் வந்து போற இடத்தில் இப்படி கண்ணைக் கசக்கினா பாக்கிறவங்க என்ன நினைப்பாங்க கண்ட்ரோல் யுவர் செல்ப் ரஞ்சனி" மதனின் குரல்.

"நீங்களா" அவள் விழிகள் நீரின் பளபளப்போடு விரிந்தன.

"ஏன்? நானெல்லாம் ஏர்போர்ட்டுக்கு வரக்கூடாதா என்ன?"

"ஸாரி! உங்களுடன் பேசும் மனநிலையில் நான் இல்லை."

"வெளியே நல்ல மழை. இரவு நேரம் வேறு, பெற் றோரை விட்டுப் பிரிந்துள்ள உன் மனநிலை வேறு சரி யில்லை. வா நானே டிராப் பண்றேன்."

"உங்களுக்கு ஏன் சிரமம். வெளியே ஆட்டோ கிடைக் கும் நானே போய்க்கிறேன்."

"இவ்வளவு தயக்கம் ஏன்? ரஞ்சனி நானென்ன உன்னை தோளிலா சுமக்கப் போகிறேன் கார்தானே சுமக்கப் போகிறது வா போகலாம்."

சித்ரஞ்சனி மேற்கொண்டு ஏதும் விவாதம் செய்யாமல் காரினுள் அமர்ந்தாள். ஏனோ இன்று அவன் அரு



காமையை மனம் விரும்பியது அவன் தோளில் தலை சாய்த்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

"ரஞ்சனி என்மேல் உனக்கு இன்னும் கோபம் தீர வில்லையா? என்னைப் புரிந்து கொள்ளவே மாட்டாயா? பார்த்த முதல் நாளே என்னுள் நுழைந்தவள் நீ! என்னுடன் பேசமாட்டாயா?"

"உங்கள் வலையில் பெண்களை வீழ்த்த இதை எத்தனை பேரிடம் சொல்லி இருப்பீர்கள் மதன்?"

மதனவர்மனின் தாடை இறுகியது. அவன் ஏதும் பேசாமல் வண்டியின் வேகத்தை அதிகப்படுத்தினான். நெரிசலுடன் கலகலப்பான மாம்பலம் வந்தது.

தெருமுனை வந்ததும் சித்ரா வாய் திறந்தாள். "இங் கேயே இறங்கிக் கொள்கிறேன்" கார் ஓரமாய் நிறுத்தப்பட நன்றி என்றாள்.

"ரஞ்சனி உண்மைகள் எப்போதும் தூங்கிக் கொண் டிருக்காது உன்னுள் உறங்குவதுபோல் பாவனை செய்யும் என் நினைவுகளை நான் கட்டாயம் தட்டி எழுப்புவேன்" அவன் விருட்டென்று காரை கிளப்பவும் சித்ரஞ்சனி சிலையாய் நின்றுவிட்டாள்.

## 11



தனிமை மனித வாழ்வில் பெரும்பங்கு வகிக்கிறது. பிறக்கும் நேரம் யாரும் பின்னணி பார்ப்பதில்லை.

…கும் தருவாயிலும் அதேநிலைதான். இடைப்பட்ட சில வருடங்களில் மனிதன் என்னென்ன அனுபவிக்கிறான். தனியே பிறக்கின்றான். அழுகையில், தாயாய் பெண் துணை கொண்டு தாகம் தணிக்கிறான்.

நண்பனின் சிநேகம் கொண்டு தாவித்திரிந்த நாட்களில் பட்டாம்பூச்சியாய் பறக்கிறான். இளமை பொழுதில் கவிதைப் பெண்களை கண்டு அவர்களில் காதற் சுகம் காணுகின்றான். ஆடாத ஆட்டம் முடிந்து இறக்கும் நேரம் சுற்றிய உறவுகளையும், உயிர் சுமந்த உடலையும் விட்டு ஜீவன் பிரிகிறான். அப்போது வெறுமை தனிமை அது சில நேரங்களில் மட்டுமே இனிமை தரும். ஆனால் காதலர்களுக்கு முதல் எதிரியே இத்தனிமைதான்.

ஒரே நாள் பார்த்ததும் அவன் மேல் காதல் பூத்தது எப்படி? கல்லூரியில் அத்தனை ஆண்கள் மத்தியில் அவர்களை ஏறிட்டும் பார்க்காத நானா மதனிடம் அடிமையானேன்?

மதன் நெருங்கிய போதும் சித்ரஞ்சனி விலகியே போனாள்.

மதன் என்மேல் கொண்ட காதல் உண்மையெனில் அதை முதலில் அவன் எனக்கு உணர்த்தட்டும்.

திரும்பிப் பார்ப்பதற்குள் ஒரு வாரகாலம் ஓடிவிட்டது. இடையில் பெற்றோர்களிடம் போனில் பேசினாள் சித்ரஞ்சனி.

''சித்ரா!'' அத்தை மகளின் குரலுக்கு செவி சாய்த்தாள் சித்ரஞ்சனி.

''என்ன ராதா மணி ஆறாகப் போகுது இந்நேரம் எங்கே போறே?''



''சனிக்கிழமையாச்சே லலிதா லீவு தானேன்னு நெனைச்சேன். ஏதோ கல்யாண ரிசப்ஷன் போகணும் அம்மாதான் தயாராக சொன்னாங்க. உன்னை கேட்டா நீ வரலைன்னு சொல்லிட்டியாமே ஏன்?''

''அத்தை காலையிலேயே சொன்னாங்க நான் மறந்திட்டேன். அதுவுமில்லாம தலைவலி வேறு.''

''சித்ரா ஆர் யூ ஆல்ரைட்''

''ஏன் அப்படி கேக்குறே?''

''நீ இங்கே வந்தப்போ இருந்த கலகலப்பு மிஸ்ஸிங் என்னாச்சு உனக்கு? அத்தை நெனைப்பு வந்திருச்சா போன் போட்டு பேசினாயா?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை ராதா. நேற்று கூட அவர்களிடம் பேசினேன். நேற்று சிற்பக்கலை ஆராய்ச்சியாளரும், விரிவுரையாளரும் ஆன ஜேம்ஸை சந்தித்தேன். அவர் எனக்கு உபயோகமான நிறைய குறிப்புகளை தந்தார். அதையெல்லாம் கம்ப்யூட்டரில் ஏதேனும் சில போட்டோஸை பிரிண்ட் போட கொடுத்தேன் அதைப் போய் வாங்கணும்.''

''ஏய் சொல்ல மறந்திட்டேன். நேத்து ஆபீஸில் இருந்து வரும் போதே வாங்கிட்டு வந்திட்டேன்.''

''நீயெப்படி?''

''அன்னைக்கு ராஜேஷ் பிறந்தநாள் விழாவில் எடுத்த போட்டோஸ் எல்லாம் ரெடியா இருக்குன்னு போட்டோகிராபர் மேன் ஆனந்த் சொன்னான். போனபோது உன்னுடையதும் ரெடின்னு சொல்லவும் வாங்கிட்டு வந்திட்டேன். அந்த டிராவில் இருக்கு பாரு.''

''அப்புறம் இன்னைக்கு ஆறு மணிக்கு ராஜேஷை மீட் பண்றதா சொல்லியிருந்தேன்! வரவே ஒன்பதாகும். அவன் செல் ரீச்சாகவில்லை. விஷயத்தை அவன்கிட்டே சொல்லிடு. இதிலே அவன் செல் நம்பர் இருக்கு'' அவசரமாய் காகிதத்தை திணித்துவிட்டுச் சென்றாள்.

நேரம் எட்டைக் கடந்திருந்தது. ஹாட் பாக்ஸில் வைத்திருந்த சாதத்தை பெயரளவு கொறித்துவிட்டு அறைக்குள் நுழைந்தவள் ராதா தன் கையில் திணித்துவிட்டு சென்ற காகிதத்தைப் பிரித்தாள்.

அடக்கடவுளே எப்படி மறந்தேன். அவசரமாய் தொலைபேசியை நெருங்கி அவ்வெண்ணை தொடர்பு கொள்ள அம்முனை சிணுங்கியது. இரண்டு வினாடிகளுக்குப் பின் ''ஹலோ'' என்ற அந்தக் குரலில் சித்ரஞ்சனியின் உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை இனம் புரியாத ஒரு உணர்வு.

''ஹலோ மதன் ஹியர்...''

''இது ராஜேஷின் நம்பர் என்றாளே?''

இவன் ஏன் போனை எடுக்கின்றான். அவனைப்பார்க்க மாட்டோமா என்று துடித்த மனதிற்கு அக்குரல் ஆறுதலளித்தது.

''யார் பேசறீங்க?'' இம்முறை குரலில் சற்று அழுத்தம் இருந்தது.

''நான்... நான் சித்ரஞ்சனி.''

''இம்முறை அந்த பக்கம் கனத்தமௌனம் நிலவியது. சில விநாடிகளில்.''

''என்ன விஷயம்?''



''ராஜேஷிடம் பேச வேண்டும்.''

''நானும் மனுஷன்தான் என்னிடமும் பேசலாம்.''

''இது பர்சனல்.''

''ஓஹோ பர்சனலாகும் அளவிற்கு பழக்கமோ? சரி அரைமணி நேரம் கழித்துப் பேசு'' பட்டென இணைப்பை துண்டித்து விட்டான்.

சித்ராவிற்கு ஏமாற்றமாய் இருந்தது. இத்தனை நாட்கள் கழித்து அவனின் குரலைக் கேட்டவுடன் என்னிடம் எழுந்த சந்தோஷம், மலர்ச்சி அவன் குரலில் இல்லையே எந்நேரமும் மதன் நினைவிலேயே உருகிக் கொண்டு இருக்கிறேனே! என் நினைவின் தாக்கம் கூட அவனிடம் இல்லையே?

அரைமணி நேரம் கடந்த பிறகும் அவள் ராஜேஷிற்கு போன் செய்யவில்லை. திரும்பவும் மதனே எடுத்து ஏதும் பேசாமல் இருந்துவிட்டால் அதை தன்னால் நிச்சயம் தாங்கிக் கொள்ள முடியாது. மேசை டிராயரை இழுத்தாள். உள்ளே வெள்ளை நிற கவர், அன்று பிறந்த நாள் விழாவில் எடுத்த புகைப்படங்கள், நேரடியாக மதன் நிற்பது போல் இருந்தது. அதை மட்டும் உருவிக் கொண்டு மற்ற அனைத்தையும் உள்ளே வைத்தாள். கண்களில் நீர் திரையிட்டது.

ஆண்கள் காரியவாதிகள். சட்டென மனதை மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டவர்கள் இல்லையென்றால் அன்று காதல் பார்வை பார்த்துவிட்டு இன்று பேசாமல் கூட இருப்பானா? மதன் நிமிடத்திற்கு நிமிடம் மாறுகிறீர்களே. ஏன்? உங்கள் மனதில் என்ன தான் உள்ளது?

படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.
மதன் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

## 12



இரவு நேரம் ஒன்பதைக் கடந்திருந்தது. இருட்டை போர்வையாய் போர்த்தியிருந்த அறையில் வெளிச்சத்தை வழிய விட்டாள் ராதா. தன்னை மறந்து சித்ரா உறங்கிக் கொண்டிருக்கும் நிலை, அதென்ன அவளருகில் ஏதோ மினுமினுப்பாய், அது, மதனும், சித்ராவும் இணைந்திருந்தார்கள் புகைப்படத்தில்.

இதை வைத்துக் கொண்டு அதுவும் தலையணைக்கடியில்! அப்படியெனில் சித்ரா மதனவர்மனை விரும்புகிறாளா? இது மதனுக்குத் தெரியுமா? எடுத்த இடத்திலேயே புகைப்படத்தை வைத்துவிட்டு சித்ராவின் பெட்டியைத் திறந்து அவளின் டைரியை எடுத்தாள்.

அடுத்தவரின் டைரியைப் படிப்பது நாகரீகமான செயல் இல்லையென்றாலும், சித்ராவின் மனதை தெளிவாய் அறிந்து கொள்ள இது உதவியாய் இருக்குமென்ற நினைப்பில் அதைப் படித்தாள்.

நடந்த அத்தனை நிகழ்வுகளையும் அதில் கொட்டியிருந்தாள் சித்ரஞ்சனி [illegible] ...த்து முடிக்க



பின் இவ்வளவு நடந்திருக்கிறதா. சித்ரா சைடு பக்காவா ஓ.கே.! ஆனா மதன் ஸார் எப்படியோ? முதலில் ராஜேஷைப் பார்த்து இதைப் பற்றி பேச வேண்டும். டைரியை பெட்டிக்குள் வைத்துவிட்டு படுத்துவிட்டாள்.

''வர்மா அட்வடைசிங்'' விளக்குகள் உயிர் பெற்றன. வண்ண வண்ணப் புடவைகள் அடுக்கடுக்காய் தொங்கிக் கொண்டு இருக்க, ''லைட்ஸ் ஆன்'' என்ற மதனின் குரலுக்கு மஞ்சள் நிற விளக்குகள் உயிர் பெற்றன.

பச்சை நிறப் புடவைக்கு பின்னால் இருந்து வெளியே வந்தாள் சசிரேகா தன் பளிங்கு மேனியில் பட்டு புடவையோடு, ''பாரம்பரியம், பவித்ரம்'' ''ராதா சில்க்ஸ்'' என்று டேப்பின் குரலுக்கு வாயசைத்தாள். கொஞ்சினாள். மயக்கும் பார்வையோடு சிரித்தாள். இறுதியில் கை குவித்தாள்.

''லைட்ஸ் ஆப். ஓ.கே.!''

''பர்பெக்ட் சசி ரொம்ப நல்லா வந்திருக்கு.''

''தேங்க்யூ மதன்.''

''இந்த அட்வடைஸ்மெண்ட் எப்ப ரிலீஸ் பண்ணி சௌண்ட்ஸ் அரேஜ்மெண்ட்ஸ் எல்லாம் முடிப்பீங்க?''

''நாலு நாளில் அப்பறம் சசி, அமெரிக்கன் தமிழ் அசோசியேஷன் கிளப்பில் இருந்து ஒரு நியூஸ் ரீல் பண்ணிகிட்டு இருக்கோம் இல்லையா? அதில் பாதி வேலை முடிஞ்சிருக்கு. இன்னும் மதுரை, தஞ்சை தான் பாக்கி. இப்போ நியூஸ் ரீல் ஓடும் போது ஹோம்லியான பெண் காம்பயரிங்குக்கு வேணுமின்னு கேட்டிருக்காங்க.''

''வாவ்...''

"நான் இந்த பிலிமைத் தான் சேம்பிள் பீஸா அனுப்பப் போறேன். ஸோ எனக்கு உன்னுடைய கால்ஷீட் பத்து நாளுக்கு மேல் தேவைப்படும். அது சம்பந்தமான ஒப்பந்தத்தை நான் ராஜேஷிடம் கொடுத்து அனுப்பு கிறேன். ஸோ வேறெந்த கம்பெனியையும் ஒப்புக்க வேண்டாம்."

"ஷ்யூர் எப்போ கால்ஷீட் வே'ணும்?"

"வெல்! மதுரைக்குப் போக. இன்னும் டேட் பிக்ஸ் பண்ணலை. பண்ணதும் சொல்லிடறேன். பேமண்ட் டீடெய்ல்ஸ் எல்லாம் ராஜேஷிடம் பேசிடு ஓ.கே."

"ஓ.கே. மதன் டூர் எப்போன்னு த்ரீ டேஸ் முன்னாடி சொல்லிடுங்க. ஏன்னா மத்த கம்பெனீஸோட அட்ஜஸ்ட் பண்ணிக்க சரியா இருக்கும். அப்போ நான் ட்ரஸ் சேஞ்ச் பண்ணிட்டு கிளம்பறேன்" சசிரேகா நகரவும், மதன் எடிட்டிங் அறை நோக்கிச் சென்றான்.

## 13



சென்னை பீச் ஓப்பன் ரெஸ்டாரெண்ட்!

சூடான பிற்பகலை குளிர்விக்க மலர்ந்த குடையின் கீழ் குளிர்பானம் அருந்திக் கொண்டிருந்தார்கள் இளஞ்ஜோடி கள். கொஞ்சிக் கொஞ்சி பேசும் பெண்களின் விழிகளில்



மயங்கி பர்ஸ் காலியாவது தெரிந்தும் சொல்ல இயலாமல் முகத்தில் ரெடிமேட் சிரிப்பு சிரிப்பதில் ஆண்கள் கைதேர்ந்தவர்கள்.

இரண்டு பைக்கின் இடைவெளியில் அவசரமாய் தன் ஸ்பௌண்டரை சொருகிவிட்டு ராதா இருக்குமிடம் தேடிச்சென்று அவள் முன்னால் நின்ற ராஜேஷ் அதிர்ந் தான். "ஏய் இத்தனை ஐஸ்கிரீம் கப்ஸா?"

"நீ வரும் வரையில் நான் என்ன செய்ய முடியும். டைம் பாஸாக வேண்டாமா?"

"அடிப்பாவி அதுக்காக அரைமணி நேரத்திலே ஐந்து கப்பா?"

"இது கம்மி தான் உக்காரு."

"ஆமா எதுக்காக அவசரமா போன் பண்ணி வரச் சொன்னே?"

"ஒன் மினிட் பேரர் அகெய்ன் டூ கப்ஸ்."

பேரர் அவளை ஒரு மாதிரியாய் பார்த்துவிட்டு சென் றான்.

"ஏன் அவன் அப்படிப் பார்க்கிறான்?"

"இந்த சாப்பாடு ராமிய கட்டிகிட்டு இவன் எப்படி காலம் தள்ளப் போறானோன்னுதான்."

"யூ ஸ்டுப்பிட் ஆப்ட்ரால் ஐஸ்கிரீமிற்கா இப்படி பேசுறே? போன வாரம் ஹாட் சிப்ஸ்ஸில் இரு நூறு ரூபாய் நான் செலவு பண்ணேனே."

"சரி சரி, ரெண்டு பேருக்கும் சாப்பிடற விஷயத்திலே யாவது ஒற்றுமையிருக்கே சந்தோஷம்! என்னமோ முக்கியமான விஷயம்?"

"அதுவா நேற்று சித்ராவின் நிலை, அவளின் டைரியைப் படித்து மதனவர்மன் மேல் அவள் கொண்ட காதல்" இவை பற்றி சகலமும் ஒப்பித்தாள் ஐஸ்கிரீமை காலி செய்தபடியே.

"நிஜமாகவா மதன் ஸாரா அப்படி பேசினார்?"

"எஸ்! ஆனா எனக்கு தெரிய வேண்டியதெல்லாம் உங்க பாஸ் லேடீஸ் விஷயத்தில் எப்படி?"

"ஹீ இஸ் நைஸ் ஜெண்டில்மேன்."

"ஒரு பாஸ்ங்கிற லிமிட்டில் தானே நீ பழகியிருப்பே, மேலோட்டமா பார்க்கிறதுக்கும், உள் மனசுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு ராஜேஷ்."

"ச்சீ... மதன் சார் எல்லாரிடமும் பிரெண்ட்லி ஆகத் தான் பழகுவார். இன்பேக்ட் அவர் மனசில ஒரு பொண் ணுன்னா என்னாலயே நம்ப முடியலை. சசிரேகான்னு லீடிங் மாடல்.

நீகூட அவ நடிச்ச விளம்பரமெல்லாம் பார்த்து இருப் பியே. அவ எப்படி மதன் ஸாரை கவுக்கறதுன்னு நேரம் பார்த்துகிட்டு இருக்கா."

"சும்மா சொல்லக்கூடாது ராது! அவ ஸ்டரக்ஸர் நீ பார்க்கணுமே. கண்லே செக்ஸ் வழியும் அவ்ளையே மதன் திரும்பிப் பார்த்ததில்லை."

"ஏய் நீ ஏன் முறைக்கிறே?"

"இடியட் என் முன்னாடியே இன்னொரு பொண்ணைப் பற்றி வர்ணிக்கிறே! நான் இல்லேன்னா என்னவெல்லாம் பண்ணுவியோ, ராஸ்கல்!" கப்பை அவன் முகம் நோக்கி வீச,



"எஸ். அயம் எம். யுவர் ஸ்வீட் ராஸ்கல்" என்றான் அதைக் கையில் பிடித்தபடி.

"விளையாட்டு போதும் டியர் ராது நான் என்ன பண்ண ணும் இதில்?"

"மதன் நல்லவர்ன்னா, சித்ரா மீது அன்பு கொண் டிருந்தால் மட்டும் அவரையும், அவளையும் சேர்த்து வைக்கணும்."

"ஆனா எப்படி?"

"மூளையைக் கசக்கி யோசி. கொஞ்சம் கஷ்டம் தான். இருந்தாலும் வேறு வழியில்லை?" அவன் முறைத்தான்.

"ஐடியா!"

"என்னது?" ஆவலாய் கேட்டாள் ராதா.

"அமெரிக்கன் தமிழ் அசோசியேசனில் இருந்து எங்க கம்பெனிக்கு ஒரு ஆர்டர் வந்திருக்கு. அதாவது இந்திய நாட்டின் பழமை வாய்ந்த கலைகள் குறித்த நியூஸ் ரீல் ஒண்ணு ரெடி பண்ண சொல்லி இருக்காங்க.

அதுக்காக மகாபலிபுரம், சிதம்பரம், காஞ்சி, தஞ்சைன்னு ஒரு பெரிய டூரே நடந்துகிட்டு இருக்கு. நம்ம மேனேஜர் வாசன் தான் இதை கவனிச்சிகிட்டு இருக்கான்?"

"அடுத்த விசிட் மதுரை தான், ஏற்கனவே போன போட்டோகிராபருக்கு ஏதோ பிராப்ளம். அதனாலதான் நான் போகப்போறேன். சித்ராவுக்கும் சிற்பக்கலையில் விருப்பமின்னு சொல்றே. நீயும், சித்ராவும் ஏன் எங்ககூட, வரக்கூடாது?"

"நாங்க மட்டும் வந்து என்ன பண்றது?"

"அவசரக் குடுக்கை மாதிரி பேசாதே. அசோசியேட் மெம்பர்ஸ் மதுரைக்கு வர்றாங்க. அசைன்மெண்ட் சைன் பண்றதுக்கு. இந்த ப்ராஜெக்ட் இதோட முடியறதால நிச்சயமா என்னோட மதன் ஸாரும் வருவார். நாம் ஏன் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கக் கூடாது?"

"நல்ல ஐடியா! பரவாயில்லை, ராஜேஷ் உனக்கு கூட மூளையிருக்கு."

"நன்றி. வெறும் பாராட்டு மட்டும் தானா வேற ஒண்ணும் இல்லையா?"

"நீ மட்டும் சித்ராவையும், மதனையும் சேர்த்து வைச்சிரு. உனக்கு செம கவனிப்புதான்." கண்ணடித்தான்.

"இப்பவே சித்ராவிடம் பேசிடறேன்" சர்ட் பாக்கெட்டில் இருந்து செல்போனை எடுத்து எண்ணை அழுத்தினான்.

"ஹலோ சித்ரா ஹியர்!" போட்டோ ஷாப்பில் தான் சேகரித்த தகவல்களும் மத்தியில புகைப்படங்களை இணைத்து வைத்துக் கொண்டு இருந்தவள் போனின் மணியடிக்கவும் யாரோ என்றெண்ணி எடுத்தாள்.

"நான் ராஜேஷ்."

"ராதா வீட்டில் இல்லையே ஆபீஸில் இருப்பா!"

"நானும், ராதாவும் ஒண்ணாத்தான் இருக்கோம். நான் உங்ககிட்டே பேசத்தான் போன் பண்ணினேன்."

"என்னிடமா? என்ன விஷயம்?"

சில நிமிடங்களில் விஷயத்தை சொன்னான் ராஜேஷ்.

"ரொம்ப தேங்க்ஸ் ராஜேஷ் நிச்சயமா இது எனக்கொரு நல்ல வாய்ப்பு."



"சித்ரா நீங்களும் எனக்கொரு உதவி செய்யணும்."

"உதவியா?"

"உங்க கூட ராதாவையும் கூட்டிட்டு வரணும் முடியுமா?"

"ஓஹோ அப்படியா விஷயம்? கவலைப்படாதீங்க. மாமா அத்தை கிட்ட நான் பர்மிஷன் வாங்கிடறேன்."

"நன்றி. வர்றீங்க தானே!"

"....."

"தேங்க்யூ" செல்லை அணைத்தான்.

"என்னாச்சு?"

"ஓ.கே. சொல்லியாச்சு."

"இப்போ நெக்ஸ்ட் மீட்டிங் மதன் ஸாரிடம் நான் என்ன சொல்லப் போறே ராஜேஷ்?"

"நானா ஸாரி? மதன் ஸார்கிட்டே நீதான் பர்மிஷன் கேக்கணும்."

"ஏன்?"

"அவர் கிண்டல் பண்ணுவார்."

"சரி வா. அவன் கிளம்பவும், இரு இந்த கப்புக்கெல்லாம் எவன் காசு கொடுக்கிறது? லவ் பண்றதுக்கு முன்னாடி பணம் சேர்த்துக்கணுமின்னு என் பிரண்டு சொன்னது சரியாத்தான் இருக்கு."

அவன் வண்டியை ஸ்டார்ட் செய்ய பில்லியனில அமர்ந்தாள் ராதா. "ஏய் கொஞ்சம் முன்னுக்கு நகர்ந்து உக்காரேன் கிக்கா இருக்கும்."

"இப்ப வண்டியை எடுக்கப் போறியா? இல்லை நான் ஆட்டோவில் வரட்டுமா?"

"ச்சீ போடி தயிர் சாதம்?"

அடுத்த 19வது நிமிஷம் முடிவில் அவர்கள் மதனவர்மனின் முன் நின்றார்கள்.

"வாங்க ராதா என்ன திடீர் விசிட்? ராஜேஷ் ஒழுங்கா வேலை செய்யறானான்னு டெஸ்ட் பண்ண வந்தீங்களா? உங்க கசின் வரலையா?" அவன் கண்கள் அவளையும் மீறி சித்ரஞ்சனியைத் தேடின. ராதா தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"அவ வீட்டில் இருக்கிறா. இன்பேக்ட் அவ விஷயமாத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்."

"என்ன விஷயம்! உக்காருங்க ப்ளீஸ்."

"ஸார் நான் நேரடியா விஷயத்துக்கு வந்திடறேன். உங்க புராதன கலை ஷூட்டிங் பற்றி ராஜேஷ் சொன்னான். கஸின்கூட இது பற்றி ஆராய்ச்சி செய்யத்தான் வந்திருக்கா."

"அவளுக்கு உங்க கூட வரணுமின்னு ஆசை. சில தகவல்கள் அவளுக்கும் கிடைக்குமில்லையா? எங்களிருவரையும் சேர்த்துக் கொள்வதில் உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே?" கேட்டு முடித்தவுடன் மதனவர்மனின் முகத்தில் ஆயிரம் ஒளிக்கற்றைகள்.

"ஷ்யூர் தாராளமா வரலாம் எனக்கு எந்த விதமான தடையுமில்லை."

"தேங்க் யூ ஸார்! அப்போ நாங்க கிளம்பறோம்! இது சித்துவுக்கு தெரிஞ்சா ஷீவில் பி வெரி ஹேப்பி. நாம



என்னைக்கு கிளம்பறோமின்னு ராஜேஷ்கிட்டே சொல்லியனுப்புங்க."

மதன் சந்தோஷமாய் தலையசைத்தான். இண்டர்காம் மூலம் வாசனை அழைத்து பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்யக் கூறினான்.

## 14



"வர்மா அட்வடைசிங்" களைகட்டி இருந்தது. எறும்பினைப் போல் சுற்றித் திரிந்தான் வாசன். மளமளவென காரியங்கள் நடந்தேறின. கேமிராவும், கையுமாய் வெளியே வந்த ராஜேஷ், "என்ன வாசன் ரொம்ப பிஸியா?"

"உனக்குத் தான் தெரியுமே பெர்பெக்ட் எல்லாமே பர்பெக்கட்டாய் இருக்கணும் இல்லேன்னா கோபம் வருமே."

"ரியல்லி யூ ஆர் ஏ சின்சியர் ஒர்க்கர்."

"தேங்க் யூ ராஜேஷ்."

"பொய் சொன்னாக் கூட உடனே நீ ஒத்துக்கிறே வாசன்!"

"ஏய்... உனக்கென்னப்பா நீ உன் ஆளை கூட்டிகிட்டு ஜாலி டிரிப் வர்றே ஏன் பேசமாட்டே?"

"அவகிட்டே ஒரு இஞ்ச் கூட மூவ் பண்ண முடியாது கொன்னுடுவா நீ இன்னும் ராதாவைப் பார்க்கலையில்லே?"

"இல்லைடா நான் தான் உன் பிறந்த நாள் விழாவிற்கு வரலையே."

ராதாவும், சித்ராவும் ஆட்டோவில் இருந்து இறங்கினார்கள். கையில் சிறிய சூட்கேஸ். அதோ கிரீம் கலர் சல்வாரில் வர்றாளே அவ தான் ராதா.

பெண்களிருவரும் அருகில் வந்ததும் அவர்களின் வாசனை அறிமுகப்படுத்தினான். பரஸ்பர அறிமுகம் முடிந்தவுடன், "வாசன் நாம எப்படி மதுரைக்கு போறோம் டிரையின்லேயா?"

"இல்லேப்பா! ஸார் இந்த புராஜெக்ட்டுக்கு கம்பெனி வேன் தந்து இருந்தார். நாம அதிலே போயிடலாம். அவர் மட்டும் காரில் வர்ற மாதிரி பிளான்!"

தன் மனம் கவர்ந்த மதன் வருவானா இல்லையா என்று கவலையடைந்திருந்த சித்ரஞ்சனிக்கு இப்போது தான் இயல்பாய் மூச்சுவிட முடிந்தது. அவள் ஒப்புக் கொண்டதற்கு காரணமே மதனை சந்திப்பதற்குத் தானே? அவள் இதயமும், விழிகளும் அவன் வரவை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருந்தன.

நேற்றிரவு கூட ராதாவிடம் மதன் வருகிறாரா என்று நேரடியாக கேட்க அச்சமாக இருந்த வேளையில், ஜாடைமாடையாக அவள்"யார் யாரெல்லாம் வர்றாங்க ராதா?" எனக் கேட்க,

"யார் வந்தா நமக்கென்ன சித்ரா! உனக்கு இந்த டூர் ரொம்பவும் யூஸ்புல்லா இருக்கும். நீ வந்ததில் இருந்தே ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்கே. இதாவது உன் மூடை மாற்றுதா பார்ப்போம்."



சிவசு, வசந்தாவிடம் அனுமதி பெறுவது அத்தனை கடினமாக இல்லை. ராதாவிற்கு ஒரு வாரம் விடுமுறையும் எளிதாக கிடைத்து விட பயணம் உறுதி செய்யப்பட்டது.

வசந்தா மட்டும் "பெண் பிள்ளைகள் மட்டும் தனியா வெளியே போய் தங்குறதா" என்று லேசாய் தயங்கினாள்.

"இந்தக் காலத்துப் பெண்களுக்கு தன்னை காப்பாற்றிக் கொள்ள நன்கு தெரியும். நம்மை விடவும் அவர்கள் உஷாராகத்தான் இருப்பாங்க.

நீ சும்மாயிரு. அங்கங்கே பொய் சொல்லிட்டு ஊர் சுத்தறதுகள். ஆனா நம்ம பிள்ளைகள் கோயில், குளமின்னு தானே போறாங்க. தவிரவும் நாம யாரையும் ரொம்பவும் கண்ட்ரோல் பண்ணக்கூடாது வசு அவர்கள் போக்கில் விட்டுடு."

"உங்க பேச்சுக்கு என்னைக்குங்க நான் மறுப்பு சொல்லியிருக்கேன். போறது பெரிசில்லை. டெய்லி போன் பண்ணுங்க. என்னதான் காலம் மாறினாலும் பாசம் மாறாது."

"மூர்த்தி" வேன் டிரைவரை அழைத்தான் வாசன் "எல்லாம் ரெடியா இருக்குல்லே பாஸ் எந்நேரமும் வரலாம்."

"இருக்கு ஸார்."

"ராஜேஷ் உங்க லக்கேஜ்களை எல்லாம் வண்டியில் ஏத்திட்டு உக்காருங்க."

"தன் கனத்தப் பெட்டியை ராஜேஷிடம் திணித்தாள் ராதா."

"எம்மா எப்படியும் கல்யாணத்துக்குப் பிறகு இதெல்லாம் இவன் தான் செய்யப் போறான். இப்பவாவது பிரீயா விடக்கூடாதா?"

"இல்லை வாசன் இது ட்ரைனிங்" சிரித்தபடி கூறினாள் ராதா.

அந்த நீல நிற ஜிப்சி காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாய் காம்பவுண்டு கேட்டைத் தாண்டி வந்தது. வாசன், ராஜேஷ் இருவரும் விறைப்பானார்கள்.

அதிலிருந்து பிரவுன் நிற ஷர்ட்டும், வெள்ளை நிற பேண்ட்டுமாய் இறங்கினான் கம்பீரமாக மதனவர்மன். சித்ரஞ்சனியின் இதயத்தில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் ஒன்றாய் பறப்பது போலிருந்தது.

அவனருகில் செல்ல வேண்டுமென்று எழுந்த ஆவலை வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். ஜிப்சியின் வலது பக்க கதவைத் திறந்து இறங்கினாள். அந்த நவநாகரீக யுவதி, இறுக்கமான ஜின்ஸும், 'கிஸ் மீ' என்னும் வாசகம் பொறித்த கையில்லா பனியனும் அவளின் உடலோடு ஒட்டி இருந்தன.

பிறரைக் கவர வேண்டும் என்று வெகு சிரமப்பட்டு தன்னை அலங்கரித்து இருப்பாள் போலும். மதனின் அருகில் ஒரு வித மதர்ப்புடன் வந்தாள். கண்களில் ஏராளமான அலட்சியம் தொனித்தது.

இவர்கள் இருக்குமிடம் வந்த மதன் சித்ராவிடம் பார்வையைத் திருப்பாது வாசனிடம் நின்று, "எல்லாம் ரெடியா? கிளம்பலாமா?" என்றான்.

"எஸ் ஸார்."



"நீங்க எல்லாரும் வேனில் வந்திடுங்க. நானும் சசியும் கார்ல வந்திடறோம்" அவன் உத்தரவென வாசனிடம் பிறப்பித்து விட்டு நகர்ந்தான். அந்த பதுமையும் அவன் பின்னாலேயே நடந்தது.

மூர்த்தி வண்டியைக் கிளப்பினான். "ராஜேஷ் யாரந்த பொண்ணு?" ராதா.

"விலைக்கு வாங்கின சனியன்!

பேரு சசிரேகா கம்பெனி மாடல்."

"ஆமா வாசன்! இவ எதுக்கு நம்ம கூட வர்றா இந்த புராஜெக்ட்டுக்குத்தான் லேடீஸ்ஸே இல்லையே!"

"அதான் எனக்கும் புரியலை. நேற்று புரோகிராம் அரேஜ்மெண்ட்ஸ் பத்தி பேசிய போது கூட இவ வர்றான்னு என்கிட்டே சொல்லலையே!"

ராதா ராஜேஷை தன் புறம் இழுத்தாள். "மதனை சுற்றி வர சசிரேகா இவதானா?"

"ஆமா ராது! ஆள் எப்படி அம்சமா இல்லை?"

"இருக்கா குதிரைக்கு பேண்ட் போட்ட மாதிரி!"

"உனக்குப் பொறாமை! நீயெல்லாம் இப்படி டிரஸ் பண்ணினா அவளை விட நூறு மடங்கு அழகா இருப்பே."

"ஆமா சுடிதார் போடறதுக்கே அம்மா திட்டுவாங்க. இன்னும் இதெல்லாம் போட்டா அப்புற நீயென்னை மார்ச்சுவரியில் தான் பார்க்கணும்."

"உங்கம்மா அத்தனை கண்டிப்பா?"

"நம்பலைன்னா சித்ராவைக் கேளு" தனக்குப் பின் இருக்கையில் இறுகிய முகத்தோடு இருந்த அவளைப்

பார்த்தான் ராஜேஷ். ''ஏய் சித்ராவைப் பாரேன்.'' ராதாவையும் உசுப்பிட,

சித்ரா எங்கோ வெறித்தபடி அமர்ந்து இருந்தாள். ''மதனைக் கண்ட நேரம் அவளுள் எழுந்த உற்சாக ஊற்று அவன் தன்னைப் பாராமல் சென்று மறுநிமிடமே காணாமல் கரைந்து போனது.''

''ஏய் சித்ரா இவன் என்ன சொன்னான் கேட்டியா?''

''கவனிக்கலையே! என்ன ராஜேஷ்?''

''சரியாப் போச்சு நீங்க இந்த உலகத்திலேயே இல்லை போலிருக்கே! ஹேப்பி! சித்ரா. மூடியா இருந்தா எல்லாடக்குமே கஷ்டம்.

''இந்நேரம் சசிரேகா அந்த காரில் பாஸை உண்டு இல்லேன்னு பண்ணிகிட்டு இருப்பா!'' வாசன் திரும்பவும் அப்பேச்சை ஆரம்பிக்க தன் உணர்வுகளை முகத்தில் காட்டாமல் இருக்க மிகவும் சிரமப்பட்டாள் சித்ரா.

''ஆமா மதுரையில் நாம எங்கே தங்கப் போறோம்?'' பேச்சை மாற்றினாள் ராதா.

பாஸுக்கு 'பல்லவன் குடில்'ன்னு ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு. எத்தனை அற்புதம் தெரியுமா! சுற்றிலும் தோட்டம் நடுவிலே வீடு ஏஸி இல்லாமயே குளு குளுன்னு இருக்கும். அது பெரிய கலா ரசிகர்களோட வீடு போல சுவரில் கூட அற்புதமான ஓவியங்கள் இருக்கும்.

''மூன்று வருடங்களுக்கு முன்பு தான் அதை ஏலத்தில் எடுத்தார் பாஸ்'' வாசன் முழு விவரம் கூறினான்.



# 15



வேன் அந்த சாலையின் முடிவில் ''பல்லவன் குடில்'' என்று மரத்தில் செதுக்கப்பட்டு இருந்த வீட்டின் முன் நின்றது. பின்னாலேயே காரும்! ஒன்றன் பின் ஒன்றாய் தத்தம் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு இறங்கினார்கள்.

சிறிய வீடாய் இருப்பினும் அதன் கம்பீரம் வீட்டை அரண்மனையாய் காட்டியது. கதவு ஜன்னல் முகப்பு என அனைத்திலும் மரவேலைப்பாடுகள் இருந்தன. பூக்களுக்கு நடுவில் ஒற்றை சூரிய காந்தியென பளிச்சிட்டது. அனைவரும் பிரமிப்பு அகலாத நிலையில் அமைதி பூண்டிருக்க, சசிரேகா மட்டும் அமைதியைக் கலைத்தாள்.

''என்ன மதன் இது நம்மளை மாதிரி ரிச் பீப்பிள் தங்கறதுக்கு பைவ் ஸ்டார் ஓட்டலில் ரூம் எடுப்பீங்களா? இந்த மாதிரி ஒரு வீட்டைப் போய் பிடிச்சு இருக்கீங்களே?''

''ஓல்டு இஸ் கோல்டுன்னு சொல்லுவாங்க'' வாசன்.

''அது உங்களை மாதிரி ஆளுங்களுக்கு எனக்கில்லைய்யா?''

''சரி விடு சசி. தங்கற இடம் மட்டும் முக்கியம் இல்லை. நமக்கு வேலை நல்லா நடக்கணும். அதுவும் எனக்கு பிடித்தமான இடம் குறை சொல்லாதே.''

''ஓ.கே. மதன் நீங்க சொல்றீங்களேன்னு தான் இங்கே தங்க ஒத்துக்கறேன் என் ரூம் எங்கே?'' அவள் மிடுக்கா கேட்டபடி உள்ளே சென்றாள்.

எல்லாரும் ஒருவித எரிச்சலோடு இதுக்கு நீ தானே காரணம்? என்பது போல மதனைப் பார்த்தார்கள்.

அவன் உட்புறம் நோக்கி ''லோகம்மா'' என்று அழைத் தான். வெளிவந்த பெண்மணிக்கு நாற்பது வயதிருக்கும். சற்றே நரைத்த தலைமுடியை சீராய் வாரி சாய்வாய் கொண்டையிட்டு இருந்தார். நெற்றியில் ஐம்பது பைசா அகல குங்குமப் பொட்டும், வாய் நிறைய சிரிப்புமாய் வந்தார் அவர்.

''வணக்கம் தம்பி நல்லாயிருக்கீங்களா?''

''நீங்க எப்படி இருக்கீங்க?''

''உன் புண்ணியம் தம்பி அம்மா எப்படி இருக்காங்க?''

''நல்லாயிருக்காங்க. இவங்க எல்லாரும் நம்மாளுங்க தான். வாசன், ராஜேஷ் உங்களுக்குத் தெரியும் இது ராதா. சித்ரஞ்சனி'' பெண்களிருவரும் கை கூப்பினார்கள். எல்லாரையும் கவனிக்க வேண்டியது உங்க பொறுப்பு.''

''சரி தம்பி.''

''நீங்க எல்லோரும் குளிச்சிட்டு வாங்க டிபன் தயாரா யிருக்கு.''

காலை உணவாய் பூரிக்கிழங்கும், குருமாவும் செய் திருந்தார் லோகம்மாள். ருசி மிகவும் அருமையாய் இருந்தது. அனைவரும் ரசித்து உண்டனர். சசிரேகா மட்டும் குறை கூறிக் கொண்டே உண்டாள். மதனை விட்டு இந்த பக்க



மும், அந்த பக்கமும் நகரவில்லை. அவனை அட்டை யாய் ஒட்டிக் கொண்டிருந்தாள்.

''இன்னைக்கு புல்லா ரெஸ்ட் எடுங்க, வேலையெல் லாம் நாளைக்குப் பார்க்கலாம்'' மதன் முன்னே சென்றுவிட, சசியும் பின்னாலேயே பதுங்கி விட்டாள்.

வாசனிடம் மட்டும் மாலை ஒரு சின்ன மீட்டிங்குக்கு ஏற்பாடு பண்ண சொல்லியிருந்தான்.

உணவு உண்டவுடன் ராதாவும், ராஜேஷும் ஊர் சுற்றிப் பார்க்க கிளம்பிவிட வாசன் தன்னறைக்கு சென்று விட் டான். சித்ரா சாப்பிட்ட பாத்திரங்களை ஒதுக்க லோகம்மா விற்கு உதவினாள்.

''அய்யோ நீ எம்மா இந்த வேலையெல்லாம் செய் யறே?''

''பரவாயில்லைம்மா! எனக்கும் இங்கே பொழுது போகணுமே. உங்க சமையல் ரொம்பவும் ருசியாக இருந்தது.''

''நன்றிம்மா நீ இரு நான் போய் இந்த கஞ்சியை குடுத் திட்டு வரேன்.''

''யாருக்கு?''

''என் புருஷனுக்கு அவருக்கு பக்கவாதம் நடக்க முடியாது அதான்.''

''எப்படிம்மா? டாக்டரிடம் காட்டினீர்களா?''

''எல்லாம் ஆச்சும்மா மதன் தம்பி புண்ணியத்திலே வாரம் ஒரு டாக்டர் வர்றாங்க உட்காரு இதோ வந்திட றேன்'' அவர் பாத்திரத்துடன் சென்றார்.

சித்ரஞ்சனி வெளிப்புறம் நோக்கினாள். மதன் ஏதோ பைலைப் புரட்டிக் கொண்டிருக்க, சசிரேகா புத்தகம் படிக்கும் சாக்கில் வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்திருந்தாள். சித்ராவிற்கு எரிச்சலாய் இருந்தது.

'இவளை எங்கேயிருந்து கூட்டி வந்தார்? இவர் நேரில் மட்டும் உருகி பேச வேண்டியது. காலையில் இருந்து என்னிடம் ஒரு வார்த்தை ஏன் ஒரு சிரிப்பு கூட இல்லை. சரியான கல்நெஞ்சம் முன் பின் அறியாதவர் போல நடந்து கொள்கிறாரே.'

நேரம் மாலை ஏழரையை நெருங்கிக் கொண்டிருக்க, அங்கிருந்த காய்கறிகளை எடுத்து நறுக்கலானாள்.

சசிரேகாவின் அருகில் இருந்தாலும் மதனின் பார்வை என்னவோ சித்ராவைத்தான் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவளிடம் தனிமையில் மனம்விட்டு பேசி தன் மேல் கொண்டுள்ள தப்பான எண்ணத்தைப் போக்க வேண்டும் என எண்ணினான். ஆனால் அவனை விட்டு ஒரு நிமிடமும் அகலாமல் நந்தியாய் இருந்தாள் சசி.

சசியைப் பார்ப்பதற்கு ஒரே சிரிப்பாகத்தான் இருந்தது மதனிற்கு. இவளும் நான்கு வருடங்களாக என்னை சுற்றுகிறாள். சசிக்கு என் மேல் உள்ள அன்பைவிட, என் பணம், புகழ் மேல் உள்ள ஆசையே அதிகம்! சசிரேகாவும் அழகுதான் ஆனால் ஆபத்தைத் தரக்கூடிய அழகு.

சித்ரா ஒரு பாலருவி அவளின் அழகு பூஜிக்கக் கூடியது. 'நீ என்னை நேசிப்பது எனக்குத் தெரியும். இந்த டூர் முடிந்து போவதற்குள் நீயே அதை ஒப்புக் கொள்வாய்' அவளிடம் பேசுவது போல் எண்ணி மனதிற்குள்ளேயே பேசிக் கொண்டான்.



''ஸார் எல்லோரும் தயாராக இருக்கோம்'' வாசன் அழைத்ததும் மதன் அறைக்குச் சென்றான்.

''வாசன் நீ நாளைக்கு காலையில் பூஜா டெக்ஸ்டைல் போ உன் கூட சசியையும் கூட்டிட்டு போ. நான் ஏற்கனவே அவங்களுக்கு தகவல் சொல்லிட்டேன். டார்க்கலரில் மூன்று பட்டுப்புடவைகள் அதற்குப் பொருத்தமாய் நகைகள் எல்லாம் அப்ரூவலில் கொண்டு வந்திடுங்க.''

''ராஜேஷ் நீ நாளைக்கு மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு போ ஒரு சின்ன ஷூட் பண்ண அவங்க கிட்ட பர்மிஷன் வாங்கிகிட்டு நல்ல இடம் செலக்ட் பண்ணிட்டு வந்திடு.''

''பாஸ் சசிரேகாவை ஏன் கூட்டிக் கொண்டு வந்தீர்கள்?''

''என்னடா இன்னும் கேக்கலையேன்னு பார்த்தேன். நாம இது வரையில் ஷூட் பண்ணியிருந்த காப்பியை அவர்களுக்கு அனுப்பியிருந்தேன். கூடவே ஹோம்லியா ஒரு பெண் மாடல் இதை தெளிவா எடுத்துச் சொன்னா நல்லாயிருக்கும்னு பீல் பண்ணாங்க.''

''பீல் பண்ணதெல்லாம் சரி ஆனா அதுக்கு சசிதான் கிடைச்சாளா?''

''நாம. ஒரு மாடல் சி.டி. அனுப்பினோமே அசோசியேஷனுக்கு அதிலே சசிதானே ஆக்ட் பண்ணி இருந்தா. அதனால அவளையே பிக்ஸ் பண்ண சொல்லிட்டாங்க. சரி கண்டினியுட்டி மிஸ்ஸாக வேண்டாமேன்னு நானும் ஓ.கே. சொல்லிட்டேன்.''

''சரி நைட் சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுங்க. காலையிலேருந்து வேலை ஆரம்பிச்சிடணும்.'' அவன் விடை கொடுக்க அனைவரும் அகன்றனர். உணவு வகைகள் அனைத்தும் மேசையின் மேல் பரப்பி வைக்கப்பட்டு இருந்தன. அதன் வாசம் அனைவரும் அழைப்பதற்கு முன்னரே ஆஜர் ஆகி இருந்தார்கள்.

சாம்பார், தக்காளி ரசம் இரண்டு வகையான பொரியல் என அத்தனையும் சேர்த்து வெஜிடபிள் ப்ரைடு ரைஸ், சிப்ஸ் வகையும் இருந்தது. ''ப்ரைடு ரைஸ் அற்புதம் லோகம்மா! நீங்க எப்ப நவீன ரக உணவெல்லாம் தயார் பண்ண கத்துகிட்டீங்க?''

''நான் செய்யலை தம்பி நம்ம சித்ரஞ்சனிதான் செஞ்சது. அவள் தட்டில் கோலமிட்டுக் கொண்டிருந்தாள்.''

''ரஞ்சனி உணவு ரொம்ப பிரமாதம்! எனக்கு இன்னும் வேணும்'' ருசித்து உண்டான்.

வாய் மூடி இருந்தவனின் திடீர் பாராட்டு சித்ரஞ்சனியை திக்குமுக்காட செய்தது ஏனோ மனதிற்குள் சந்தோஷப்பூக்கள்.

## 16



கனமான இருள் கரைந்து மிதமான விடியல் பூத்தது. மேக மூட்டத்தில் மூழ்கியிருந்த சூரியன் மெல்ல மெல்ல தலை நீட்டி எட்டிப் பார்த்தான்.



காலை உணவை முடித்துக் கொண்டு அவரவர்கள் வெளியேறி விட மதனவர்மன் கையில் ஒரு கோப்புடன் சித்ரஞ்சனியின் அறைக்கு வந்தான்.

பதமாக இருந்த சுடுநீரில் குளித்துவிட்டு, டவலால் உடம்பை போர்த்தியபடி குளியல் அறையை விட்டு வெளியே வந்தவள் அறைக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டவுடன் லோகம்மாவாய் இருக்கும் என்ற அலட்சியத்தில் ஈர உடலோடு நைட்டியை அணிந்தாள்.

கூந்தலில் இருந்து நீர் சொட்ட, கதவைத் திறந்தவள் ஒரு கணம் கண் இமைக்க மறந்தாள்.

அறைக்கு வெளியே நின்ற மதனவர்மனின் நிலையும் அப்படித்தான். காலைப் பனியின் தூறலில் நனைந்திருந்த ரோஜாவாய், கார்மேகம் என நீண்டிருந்த கூந்தலும் கண்களில் மானின் மருட்சியும், துடித்த ஆரஞ்சு நிற அதரங்களும் மதனை கிறங்கடிக்கச் செய்தன.

ஈரமான உடலில் ஒட்டியிருந்த ஆடை 'என்னை கவனி' என்பது போல் அவளின் உடலை மூடியும் மூடாமலும் வெளிச்சம் போட்டு காட்டின.

.மதன் அவளை மேலும் கீழுமாய் பார்வையில் நனைத்தான் எண்ணை தேய்த்த சிற்பம் போல் அவள் உடல் மினுமினுத்தது. சித்ரஞ்சனி அவஸ்தையாய் நெளிந்தாள்.

''ரஞ்சனி.''

''ம்...''

''நீ உடை மாற்றிய பின் டைனிங் டேபிளுக்கு வா உன்னிடம் பேச வேண்டும்.''

அவள் அருகில் சென்றான். சித்ராவின் உடல் நடுங்கியது. உணர்வுகள் அலைமோத மதனின் உஷ்ணமான மூச்சுக்காற்று முகத்தில் மோத கண்களை மூடிக் கொண்டாள். அவளின் முகத்தில் விளையாடிய முடிக் கற்றைகளை ஒதுக்கி விட்டான். பின் அங்கிருந்து சென்று விட்டான் மதனவர்மன்.

சித்ரஞ்சனிக்கு ஏமாற்றமாய் இருந்தது. காதல் கொண்ட மனம் எத்தனையோ நினைவுகளை சுமந்திருக்கும். நகரும் அத்தனை நிமிடங்களும் மதனின் ஆதிக்கம் நிறைந்து இருப்பதை உணர்ந்து இருந்த நேரம் அவனைக் கண்டதும் அவள் மனதில் சொல்வொண்ணா கிளர்ச்சி எழுந்தது. குளிர்ந்த நீரில் மிதந்த பூவுடல் அவனின் அணைப்பை எதிர்பார்த்தது.

''சித்ரா தனக்கு பைத்தியம் தான் பிடித்து இருக்கிறதோ என அஞ்சினாள். முட்டாள் மனமே அவன் எண்ணம் அறிந்தும் அவனிடம் மயங்குவது ஏன்?'' என அதை அதட்டினாள்.

மெல்லிய இலை பச்சை வண்ண ஷிபான் சேலை யணிந்து அலைபாயும் கூந்தலை கிளிப்பினால் அடக்கி விட்டு டைனிங் டேபிளுக்கு வந்தபோது அங்கு அவளுக்காய் மதனும், சூடான தேநீரும் தயாராய் இருந்தது.

''ஒரு முக்கியமான மீட்டிங் போகணும், நீயும் கூட வந்தா நல்லாயிருக்கும்.''

''நானா? நான் எதுக்கு உங்க சசியை கூட்டிட்டு போக வேண்டியதுதானே! தவிரவும் நான் ஒண்ணும் உங்க செகரட்டரி இல்லையே?''

மதனவர்மன் சத்தமாக சிரித்தான்.



''இப்ப எதுக்காக சிரிக்கிறீங்க?''

''உன்னுடைய ஆராய்ச்சிக்கு இது உதவியா இருக்கும். என் மேல் நம்பிக்கை இருந்தால் உனக்கு பயமில்லைன்னா நீ வரலாம்.''

''நான் ஏன் பயப்படணும்? உங்களுக்காக இல்லைனாலும் என்னுடைய ஆராய்ச்சிக்காக நான் வருகிறேன்.'' இருவரும் கிளம்பினார்கள். கார் வெண்ணையாய் தரையில் வழுக்கிக் கொண்டு சென்றது.

இருவரும் மௌனமாய் பயணித்துக் கொண்டிருந்தாலும் அந்த இரண்டு ஜோடிக் கண்களும் தன்னிச்சையாய் அடிக்கடி ஏக்கத்தோடு சந்தித்துக் கொண்டன.

மதன் மறுபடியும் சிரித்தான்.

''எதற்காக இப்போது சிரிக்கிறீர்கள்?''

''ஒண்ணுமில்லை. சொன்னால் என்னோடு கோபம் கொண்டு சண்டையிடுவாய்?''

''சண்டையிட மாட்டேன் ஏன் சிரித்தீர்கள்?''

''வற்புறுத்துகிறாய் அதனால் சொல்கிறேன் பெண்களுக்கு இயல்பான சுபாவம் தனக்குப் பிடித்தமானவர்களை அடுத்தவர்களுடன் பார்த்தால் கோபம் வரும். காலையில் நீயும் கோபமாய் சசியை கூட்டிப் போக சொன்னாயா அதான் சிரித்தேன்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் யாருடன் பேசினால் எனக்கென்ன?'' என்றாள் விட்டேத்தியாய்.

மதனவர்மன் காரை நிறுத்தினான். அந்த பழங்காலக் கட்டிடத்தின் முன்பு வெள்ளை வேஷ்டி சட்டையில் இருந்த மனிதர் அவனை வரவேற்றார்.

''வெல்கம் மிஸ்டர் மதன்!''

''தேங்க் யூ ஸார்!''

''ஐ'ம் குமார். அமெரிக்கன் சேம்பர்ஸ் அசோசியேஷன் மெம்பர் ப்ளீஸ் பீ ஸீட்டட்'' இருவரும் அமர்ந்தார்கள்.

''மேடம் உங்க...'' அந்த மனிதரின் கேள்விக்கு மதனவர்மன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று ஆவலாய் காதை கூர்மையாக்கியவள் அவன் அலுவலக வேலையில் பேச்சை மாற்றவும் சுரத்திழந்தாள்.

''உங்க கேசட் பார்த்தேன் மதன். ரொம்ப நல்லாயிருக்கு. நான் சொன்னாற் போல ஹோம்லியா ஒரு பொண்ணு இருந்தா இன்னும் நல்லாயிருக்கும்.''

''ஏற்பாடு பண்ணியிருக்கேன் ஸார். எங்க கம்பெனி மாடலும் கூட வந்திருக்காங்க. சில சேஞ்சஸ் நோட் பண்ணியிருப்பதா சொன்னீங்களே.''

''யெஸ் ஒன் மினிட்'' என்றவர் இண்டர்காமை தட்டி கூல்ட்ரிங்ஸை வரவழைத்த பின்பு அவ்வறையின் மூலையில் இருந்த கலர் டெலிவிஷனை உயிர்ப்பித்தார்.

அவர் சில கோணங்களை மாற்றி அமைக்க சொல்ல ''சித்ரா அவற்றையெல்லாம் குறித்துக் கொள்ளேன்'' என்றான் மதன்.

எல்லாம் முடிந்த பிறகு அவருடன் கை குலுக்கி விடை பெற்று காரில் அமர்ந்தனர். ''ரஞ்சனி இதுவரை வந்திருக்கும் காட்சியமைப்புகள் எப்படி?''

''ரொம்ப பிரமாதம் நேரில் பார்த்தது போன்ற பிரமை வாசகன் திறமைசாலி.''



''உண்மை தான், சித்ரா! ராதாவையும், ராஜேஷையும் பார்த்தால் எனக்கு பொறாமையா இருக்கு.''

''ஏன்...?''

''தெரிந்து கொண்டே தெரியாதது போல் கேட்கிறாய். பெண்களின் மனம் பனியில்லை பாறாங்கல்.''

''தேவையற்றவைகளை அகற்ற அப்படி இருப்பது நல்லது தான்.''

# 17



சசிரேகா குறுக்கும் நெடுக்குமாய் ஹாலில் கேட்வாக் செய்து கொண்டிருந்தாள். 'காலையில் வெளியே சென்றவர்கள் சித்ராவும், மதனும் இன்னும் வரவில்லை, இந்த பெண் வந்த நாளில் இருந்தே மதன் என்னை ரொம்பவும் அவாய்ட் செய்கிறான்.'

அதற்கு முன்பும் மதன் இவளிடம் வழிந்தது இல்லை. இவளாகத்தான் அவன் மேலே விழுவாள். சசி ஓரளவு வசதி கொண்டவள் என்றாலும் மதனின் அளவிற்கில்லை. அவனை தன் வலையில் வீழ்த்தி மணமுடித்துவிட்டால் பணமும், பணக்கார வீட்டு மருமகள் என்ற அந்தஸ்தும் கிடைக்குமென்று எதிர்பார்த்தாள்.

கிணற்று நீர் தானே என்று லேசாக இருந்த நேரத்தில் தான் சித்ரா நுழைந்து விட்டாள். இனி மதனை விடக்

கூடாது என்ற முடிவோடு காத்திருந்தவள் அவர்கள் இருவரும் காரிலிருந்து இறங்குவதையும் மதன் அவளின் கையைப் பிடிப்பதையும் பார்த்தாள்.

''விடுங்க மதன் என்ன இது?''

''ஏன் நான் உன்னைத் தொடக்கூடாதா? எனக்கந்த உரிமையில்லையா?''

''யார் உங்களுக்கு அந்த உரிமையைக் கொடுத்தது?''

''நீ தான் உன் கண்கள்தான். என்னை ரொம்பவும் தொந்தரவு செய்கிறாய் ரஞ்சனி.'' அவள் மதனின் கைகளை உதறிவிட்டு உள்ளே ஓடி விட்டாள். மதனவர்மன் புன்னகையுடன் நுழைந்தான்.

''என்ன மதன் உங்கள் காதல் லீலை! அருமையாய் இருக்கிறதே. ஏன் உங்களுக்கு வேறு பெண்ணே கிடைக்கலையா?''

''சசி நீ உன் வேலையை மட்டும் பார்த்துக் கொண் டிருந்தால், நல்லதுன்னு நான் நினைக்கிறேன்'' மதன் அங்கிருந்து அகன்று விட்டான்.

சசிக்கு எரிகிற நெருப்பில் எண்ணை விடுவதைப் போலிருந்தது! 'மதன் என்னையா எடுத்தெறிஞ்சு பேசு கிறாய்? இரு உன்னைக் கவனிச்சுக்கிறேன்!' மனதிற்குள் கறுவினான்.

இரவு உணவைத் தயாரித்துக் கொண்டு இருந்தார் லோகம்மா. ''என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள். வாசனை பலமாயிருக்கே?'' என்றபடியே உள்ளே நுழைந் தாள் சித்ரஞ்சனி.



''மத்தியானம் யாருமே வீட்ல சாப்பிடலை கண்ணு. இப்பவாவது சாப்பிடுவாங்களேன்னு தான் நெய் கத்திரிக்கா குழம்பு. அவியல், அடை எல்லாம் செய்தேன்.''

''நான் உதவட்டுமா?''

''வேணாம் கண்ணு.'' அவர் சமையல் பாத்திரங்களை கழுவித்தர, அதை துடைத்து மேடையில் அடுக்கினாள் சித்ரஞ்சனி!

''உங்க வீட்டுக்காரருக்கு எம்மா பக்கவாதம் ஏற்பட்டது?''

''அது ஒரு பெரிய கதை! சித்தும்மா அவர் பெரிய பணக்காரர்! காசு சேர்ந்தாத்தான் தேவையில்லாத சங்கதி களும் கூட சேருமே. எங்கப்பா இவர்கிட்ட கடன் வாங்கி யிருந்தார். அதை அவரால அடைக்க முடியலை. இதுதான் சமயமின்னு இவரும் என்னை திருமணம் செய்துக்கிறதா சொல்லவும், பணக்கார இடம் பையன் கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் பரவாயில்லைன்னு சம்மதிச்சிட் டார்!''

''அப்புறம்...''

''அப்புறம் பிடிக்காத கல்யாண வாழ்க்கை ஒரு பெண் ணுக்கு மனசுக்கு பிடிச்சவன் தான், கணவனா அமை யணும் சித்ராம்மா! அப்படியில்லாம அமையற உறவு நீடிக்காது. அவருடைய ஊதாரித்தனத்தால தன்னோட எல்லாச் சொத்தையும் இழந்தார். கூட இருந்தவர் களுடைய துரோகத்தினால் அவருக்கு வாதம் வந்திடுச்சி.

''நானும் பாக்காத வைத்தியமில்லை. கடனில் இந்த வீடும் மூழ்கி ஏலத்தில் போக தங்க இடமில்லாமல் கூட

தவிச்சோம். ஆனா மதன் தம்பி நீங்க வெளியிலே எங்கேயும் போய் கஷ்டப்பட வேண்டாம் இங்கேயே தங்கிக்கலாம்னு சொல்லி, இந்த தோட்டத்தில் பூக்கள், காய்கறிகள் எல்லாம் போட்டு பராமரிக்கிற ஆளையும் வைச்சு வருமானத்துக்கும் வழி பண்ணி கொடுத்திச்சு.

''மனசார சொல்றேன் சித்ராம்மா. மதன் தம்பி நல்லாயிருக்கணும். அது மனசு போல வாழ்க்கை அமையணும். என் கதையை விடு. எல்லாரையும் சாப்பிட கூப்பிடும்மா!''

''தேவையேயில்லை. நாங்க எல்லாருமே வாசனை பிடிச்சிகிட்டே டைனிங் டேபிளில் தான் இருக்கோம்'' என்றனர். சித்ராவும், லோகம்மாவும் ஒவ்வொரு பொருட்களாய் கொண்டு வந்து அடுக்கினார்கள்.

''முக்கியமான ஆள் மிஸ்ஸாகுதே'' வாசன்.

''சித்ரஞ்சனி நீ போய் மதனையும், அந்த அல்டாப் சுந்தரியையும் கூட்டிட்டு வாயேன்'' - ராஜேஷ்.

''நீங்களே போய் கூப்பிடுங்க.''

''எனக்கும் ஆசை தான். ஆனா அவளை நிமிர்ந்து பார்த்தாலே கண்ணைத் தோண்டி விடுவேன் என்று ராதா என்னை மிரட்டியிருக்கிறாள்.''

''என்னைப் பாக்காதேம்மா. அந்த சனியன் கூட காலையில் இருந்து மாரடிச்சிருக்கேன்.

எனக்கு தெரிஞ்சு நீ அவளைக் கூப்பிடவே வேண்டாம். மதன் சாரை மட்டும் கூப்பிடு போதும். அதெல்லாம் பட்டினி கிடந்தால் தான் புத்தி வரும்.''



''பிடிக்குதோ பிடிக்கலையோ கூப்பிட வேண்டியது கடமை. அவ எங்கேயிருப்பா?'' சித்ரஞ்சனி.

''மதன் சார் எங்கேயிருப்பாரோ, இவளும் அங்கே தான் ஜொள்ளுவிட்டுகிட்டு இருப்பா!'' அவர்கள் விளையாட்டுக்கு பேசிக் கொண்டிருந்தாலும், சித்ராவின் மனம் கவலை கொண்டது.

அந்த சசியுடன் பழகி மதன் ஏன் தன் பெயரை கெடுத்துக் கொள்கிறான். மதனின் அறை நோக்கிச் செல்லும் போதே சசிரேகாவின் பேச்சுக்குரல் கேட்டது.

''மதன் இந்த ஸாரியில் நான் எப்படி இருக்கேன்?''

''ம்... நல்லாயிருக்கே.''

''என்னை நிமிர்ந்து பாருங்களேன்.''

சித்ரா மெல்ல அறையை எட்டிப் பார்த்தாள்.

அவள் பார்ப்பதை அறிந்த சசிரேகா விஷம எண்ணத்துடன் தன் மேலாடையை நழுவ விட்டு பூத்திருந்த அழகோடு ''என்ன மதன் அப்படியென்ன தான் எழுதுறீங்க. வாங்க'' என இழுத்து மேலே சரித்து கொண்டாள்.

''சசி என்ன இது விடு என்னை?''

''நோ மதன் நான் தானே வாங்க பிளீஸ்.''

அவள் மேலும் இறுக்கினாள். தன் பலங்கொண்ட மட்டும் அவளைத் தள்ளிவிட்டு, எழுந்தவன் அறை வாயிலில் சித்ராவைக் கண்டு அதிர்ச்சியுடன் நின்றான். அவள் தன்னைத் தவறாய் எண்ணி விடக்கூடாதே என்ற பதட்டம் அவனுள் எழுந்தது.

சசிரேகா தன் உடையை சரிபடுத்தியவாறே அதிகாரத் தோரணையில் ''உனக்கு இங்கென்ன வேலை! அறைக்

குள் வரும் முன் கதவைத் தட்ட வேண்டும் என்ற அறிவில்லை. இடியட்!'' என்று அவள் ஏக வசனத்தில் பேச, கண்ணீரோடு அவ்விடம் இருந்து நகர்ந்தாள் சித்ரஞ்சனி.

நிமிடத்தில் நடந்து விட்ட அந்நிகழ்வில் செய்வதறியாது திகைத்து நின்றான் மதனவர்மன்.

# 18



கண்ணீரால் தலையணையை நனைத்துக் கொண்டு இருந்தாள் சித்ரா. மெல்லிய விசும்பல்கள் எழுந்து அவளின் முதுகு குலுங்கியது.

ராதா எல்லாவற்றையும் கவனித்து கொண்டிருந்தாள். ஆனால் ஏதும் கேட்கவில்லை. மதனுடன் அவளுக்கு உண்டான காதலை தன்னிடம் சொல்லுவாள் என எதிர்பார்த்தாள். காதல் காதலிப்பவர்களுக்குத்தான் தெரியாதே தவிர மற்றவர்களுக்குத் தெரிந்து விடும். காதல் மல்லிகைப்பூவைப் போல மூடிவைத்தாலும் அதன் நறுமணம் தெரிந்திடுமே.

அதுபோலத்தான் சித்ரா தான் கொண்ட காதலை மனத்திற்குள்ளேயே பூட்டி வைத்திருந்தாள். இன்று சசிரேகா வந்ததும் அதுவெளியே வரத் துடிக்கிறது பாவம்



சொல்லத் தெரியாமல் தவிக்கிறாள். அழட்டும் மனதின் ரணங்களை கண்ணீர் ஆற்றிவிடும்.

இவர்கள் இருவரும் முதலில் தங்கள் ஈகோவைத் துறக்க வேண்டும். மதனின் நடவடிக்கைகளைக் கண்டால் அவனும் அவளை விரும்புகிறான் என்று தெரிகிறது. இவர்களின் காதலுக்கு இரண்டு எதிரிகள் ஒன்று அந்த ஈகோ வட்டத்தை விட்டு வெளியே வர மறுக்கின்றனர். மற்றொன்று அந்த மோகினிப் பிசாசு சசிரேகா.

முதலில் அவளை மதனிடம் இருந்து தொலைக்க வேண்டும். அதற்கென்ன வழி? யோசித்தாள். காலையில் ராஜேஷிடம் இதைப் பற்றி பேச வேண்டும் என்ற நினைவுடன் உறங்கிப் போனாள்.

''நீங்க ரெண்டு பேரும் என்ன சொல்றீங்க? என்னாலே நம்பவே முடியலை சித்ராவும், பாஸும் லவ் பண்றாங்களா?''

''ஆமா வாசன்! நாங்க சொல்றது நிஜம். இந்த ஊருக்கு நாங்க வந்ததே அவங்க இரண்டு பேரையும் சேர்த்து வைக்கத்தான்!''

''இப்ப அதிலென்ன தடை?''

''வேற யாரு சசி ரேகாதான் நந்திமாதிரி! மதன் ஸார் பின்னாடியே சுத்திகிட்டு இருக்காளே, அவங்க இரண்டு பேரையும் சேர்த்து வைக்கணுமின்னா முதல்ல அவளை விரட்டணும். அதுக்கு வழி பண்ணுங்க.''

''ராது நீ போய் சூடா ஒரு காபி போடு. நாங்க யோசனை பண்றோம்.''

''ஆனாலும் நீ ரொம்பத்தான் என்னை விரட்டுறே.'' முணுமுணுப்புடன் அடுப்படிக்குள் சென்றாள் ராதா.

மதுரை மீனாட்சி அம்மன் கோபுரம் வானளவில் உயர்ந்திருக்கிறது. நான்குபுற வாயில்களிலும் மக்களின் இறைபணி தொடர்ந்திருக்க, கோவிலினுள் நுழைந்தார்கள் மதனவர்மனின் குழுவினர்.

அழகான கம்பீரமான யானை ஒன்று வருவோர்க்கு வரவேற்பு தந்து ஆசியளித்தது. அதைத் தாண்டி உட்புறம் நகர்ந்ததும் பனியில் செதுக்கிய சிற்பமாய் கைலாச நாதர் சிலை வடிவிலும் லிங்க வடிவிலும் மின்னினர். அதைக் காண கண்கோடி வேண்டும். எதிர்முனையில் இருந்த விநாயகரின் முன்நின்று கைகூப்பி வணங்கினார்கள்.

சித்ரஞ்சனி கூடுமான வரையில் மதனின் பார் வையைத் தவிர்த்தாள். அவன் கண்கள் ஏதேச்சையாய் சந்திக்க நேர்வதைக் கூட அவளால் தாங்க முடியவில்லை.

மதனுக்கும் அவளின் நிலை நன்றாய் புரிந்தது. நான் ஒரு முட்டாள். அப்போதே அவளை சமாதானம் செய்து இருக்க வேண்டும். ஆனால் கோபமும், அழுகையும் கலந்த வண்ணத்தில் அறைக்குள் சென்று கதவைப் பூட்டிக் கொண்டாள்.

அந்நேரம் கதவைத் தட்டினால் பிறர் தவறாக எண் ணக்கூடும் என்று அமைதி காத்தான். ச்சே இப்போது தான் கொஞ்சம் நெருங்கி வந்தோம். அதற்குள் இப்படியொரு பிளவைத் தன் வாழ்வில் உண்டாக்கி விட்டாளே சசிரேகா.

தெப்பக்குளத்தில் நின்று மீனுக்குப் பொறியிட்டுக் கொண்டிருந்தவளின் அருகில் சென்றான் மதனவர்மன்!

அவனைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண் டாள். அச்செய்கை மதனிற்கு இன்னும் வலித்தது. பொற்



றாமரைக் குளமருகில் நீருக்கு நடுவில் தகதகவென ஜொலிக்க அதன் பின்னணியில் தெரிந்த கோவில் கோபுரமும், பார்க்க கொள்ளை அழகாய் இருந்தது.

''சித்ரா வா சாமி கும்பிடலாம்'' ராதா அவள் கைகளில் வெள்ளைத் தாமரையை அளித்தாள்.

கடவுளை கண்மூடி தரிசிக்கும் நேரம் சித்ரஞ்சனியின் கண்களில் கண்ணீர் வழிந்தது. ராதாவிற்கு அவளின் நிலை பரிதாபமாய் இருக்க அவளை அமைதிப்படுத்த அவள் தோளின் மீது கைவைத்து அழுத்தினாள்.

''அலோ நான் சாரதி பேசுகிறேன்.'' சித்ராவின் செல் அழைப்பை ராதா எடுத்தாள்.

''அங்கிள் நான் ராதா பேசறேன். நானே உங்களுக்கு போன் பண்ணனுமின்னு இருந்தேன். நல்லவேளை நீங்களே போன் பண்ணிட்டீங்க.''

''என்னம்மா அத்தனை அவசரமா? சித்ரா உன் காதல் விவகாரமெல்லாம் சொன்னா. என் பிரண்டு மூலமா விசாரிச்சேன். நல்ல ரிசல்ட்டுதான். இன்னும் இரண்டு மாசம் கழிச்சு நானும் மீனாவும் சென்னைக்கு வர்றோம். அத்தானிடம் உன் திருமணம் பற்றி பேச, என்னம்மா பேச்சையே காணோம்?''

ராதா நெகிழ்ந்து போயிருந்தாள். தன் காதல் விஷயத் தில் வெறும் வாய் வார்த்தையோடு நில்லாமல் செயலில் நடத்தியிருக்கும் சித்ராவின் குணம் அவளுள் மேலும் அன்பை ஊற வைத்தது. அவளுக்கு நிச்சயம் நல்லது நடக்க வேண்டும் எனும் உறுதியில், ''அங்கிள் நான் இப்ப பேச எண்ணியது சித்ராவைப் பற்றி.''

"என்னம்மா விஷயம்?" சாரதி பதட்டமாய் கேட்க,

அவள் சகலத்தையும் பத்து நிமிடத்திற்குள் சொல்லி முடிக்கவும், சிறிது யோசனைக்கு பின் "என் மகள் மேல் எனக்கு நம்பிக்கையுண்டு. அவளின் தேர்வு சிறந்ததாகவே இருக்கும். நான் அங்கு வரும் போது இரண்டு திருமணத்தையும் நடத்தி வைத்து விடுவோம். எனக்கு டபுள் சந்தோஷம்."

"நானும், மீனாவும் இன்று நியூயார்க் செல்கிறோம். சித்ராவிடம் சொல்லிவிடம்மா நான் பிறகு பேசுகிறேன்" என்று செல்லை அணைத்து விட்டார். ராதா, சித்ராவிடம் சென்றாள்.

## 19



நேரம் ஆறரைத் தொட்டு இருந்தது. சித்ரஞ்சனி கனத்த இதயத்தோடு தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தாள். கலர்கலராய் கண்களுக்கு விருந்தளித்த பூக்களின் வாசம் நாசியிலும் மணத்தது. எதிர்புறம் பவுண்டேஷனில் நீர் அருவியில் சிந்தும் அழகை விழிகள் ரசித்தாலும் மனம் அதில் லயிக்கவில்லை.

"காதல்' இந்த மூன்றெழுத்து எத்தனை மகத்தான சக்தி! ஒரு மனித சமுதாயத்தையே தலைகீழாய் புரட்டிப் போட்டு விடுகிறதே. காதலின் சர்வாதிகார ஆட்சியில் வாழ்ந்த



வர்களை விட தொலைந்தவர்களே அதிகம். நாம் அப்படித் தானே! காதல் காற்று சூறாவளியாய் மாறி என்னை மெல்ல சிதைக்கிறதே' சுய இரக்கம் கண்களில் நீரை வரவழைத்தது.

"என்ன ரஞ்சனி ஆழ்ந்த யோசனையா?" மதனின் குரல் அவன் முகம் பார்த்தால் தன் திடம் உடைந்து மதன் முன் அழக்கூடும் என்று நினைத்து மௌனித்தாள்.

"உன் கோபம் எனக்கு புரிகிறதே! நேற்று நடந்த நிகழ்ச்சிக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை."

"இதையென்னை நம்பச் சொல்லுகிறீர்களா?"

"ரஞ்சனி அன்றும் சரி இன்றும் சரி நீ மட்டும் தான் என் மனதில் இருக்கிறாய்."

"தனியறையில் வேறொரு பெண்ணை கட்டிப் பிடித்து உல்லாசமாய் இருப்பீர்கள். இங்கு என்னை காதலிப்பீர்களா? இப்படி பேச உங்களுக்கு எப்படி மனசு வருகிறது மதன்."

"ரஞ்சனி தயவு செய்து என்னைப் புரிந்து கொள். இது சசியின் சூழ்ச்சி. ஏற்கனவே ஒரு முறை தவறாய் புரிந்து கொண்டதனால் தான் நமக்குள் இத்தனை பெரிய பிளவு. மறுபடியும் அதே தவறை செய்யாதே."

"யார் தவறு செய்வது நானா? நீங்களா? பிடிக்கலைன்னா அவள் கன்னத்தில் அறைய வேண்டியது தானே? அந்த உரசல் உங்களுக்கு இனித்தது அதான் அமைதியாய் இருந்து விட்டீர்கள்?"

"ரஞ்சனி பிளீஸ்..."

“போதும் மதன். நீங்கள் என் மனதில் இல்லை பிளீஸ் போயிடுங்க.”

“பொய் எங்கே என் கண்களைப் பார்த்து சொல்லு நீயென்னை நேசிக்கவில்லை? காதல் இல்லாத இடத்தில் பொறாமை இருக்காது ரஞ்சனி! நேற்றிரவு என்னையும், சசியையும் அந்த நிலையில் கண்டதும் உன் மனம் கோபப்படுகிறதெனில் நீயென்னை விரும்புகிறாய் என்று தானே அர்த்தம்? இந்த நிமிடம் நீ சொல்ல வேண்டும். நீயென்ன விரும்புகிறாய் என்பதை!”

“என்னால் முடியாது நீங்கள் போகலாம்.”

மதனவர்மன் அவள் தோள்களைப் பிடித்து தன்புறம் இழுத்தணைத்து அவள் திமிரத் திமிர அவளின் அதரங்களை சிறைப் பிடித்தான். முதலில் துடித்த அந்த மலர் முடிவில் வண்டிடம் சரணடைந்தது.

ஒரு முழு நிமிடம் கழித்து அவளை விலக்கியவன். “இதைவிட என் காதலை சொல்ல சிறந்த வழியெனக்குத் தெரியவில்லை!”

சித்ரஞ்சனி தன் பூங்கரங்களினால் அவன் மார்பினில் குத்தினாள். “என்னை ஏன் இப்படி சித்ரவதை செய்கிறீர்கள்?”

“ரஞ்சனி இனி நான் ஏதும் பேசப் போவதில்லை. நம் காதல் நிஜமெனில் நிச்சயம் நீ எனக்கு கிடைப்பாய்” அவன் செல்ல கண்களின் நீர்த்திரை அவன் உருவத்தை மறைத்தது.

“என்ன மதன் இது என் கூட இத்தனை நாள் ஆசையாய் பழகிவிட்டு இப்ப அவளைப் பார்த்து உருகுகிறீர்களே இதென்ன நியாயம்?”



“பழகினேனா சசி! உன் மனதைத் தொட்டு சொல்! அலுவலக விஷயம் தவிர வேறெதுவும் நான் உன்னிடம் பேசினேனா?” அவன் குரலில் இருந்த கடுமை அவளை பயமுறுத்தினாலும், சற்றே உறுதியுடன்.

“இப்படிப் பேசி நீங்க என்னை ஏமாத்த முடியாது. நீங்க எங்கூட பழகுனீங்கங்கிறதுக்கு என்னால நூறு சாட்சிகள் கொண்டு வர முடியும்! இப்ப நீங்க ஒத்துழைக்கலைன்னா வெளியே சொல்லி உங்க மரியாதையை அழித்து விடுவேன்.”

“வாசன்” வெறிபிடித்தாற் போல் கத்தினான் மதனவர்மன்.

“எஸ்” ஸார்.

“இவ ரூமிற்குப் போய் பெட்டி படுக்கையோடு இவளுக்குச் சேர வேண்டிய அமவுண்ட்டையும் கொடுத்து அனுப்பு! இனிமே நம்ம கம்பெனி பக்கமே இவ தலைக் காட்டக்கூடாது. மீறி வந்தால் என் கவுரவத்தைக் குலைக்க முயன்றாய் என்று போலீஸிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்.

இன்னும் அரைமணியில் இந்த இடத்தை விட்டு நீ காலி செய்ய வேண்டும். இல்லேன்னா விளைவுகள் விபரீதமாக இருக்கும்.” மதன் சிங்கமாய் கர்ஜித்துவிட்டு தன்னறைக்குள் புகுந்து கொண்டான்.

சசிரேகா முற்றிலும் நடுங்கித்தான் போனாள்! மதன் சொன்னால் செய்யக்கூடியவன் அப்படியானால் என் நிலைமை? அய்யய்யோ, இதென்ன வம்பு? அவள்

யோசிக்கும் போதே வாசன் பெட்டிகளைக் கொண்டு வந்து அவள் முன்னால் வைத்தான்.

''இதோ பார் வாசன்! என்னைத் தூக்கி எறிஞ்சதுக்கு நிச்சயம் மதன் வருத்தப்படுவான்'' சபதம் செய்த கையோடு வெளியேறினாள் சசிரேகா.

''இப்பவாவது மதனை புரிஞ்சிக்கோ சித்ரா. பாம்பின் கால் பாம்பறியுங்கிற கதையா உன்னை முதன்முதலா மதன் சாருடன் பார்த்த அன்னைக்கே புரிஞ்சுகிட்டேன். நீ அவரை விரும்புகிறாயென்று. உன் டைரியைப் படிச்சப்போ அதை நான் உணர்ந்தேன்.

''இந்த நாலு நாளில் நான் பார்த்ததிலிருந்து சொல்றேன். மதன் உன்னை ரொம்ப நேசிக்கிறார் சித்ரா! வீணான எண்ணங்களுக்கு மனசில் இடம் கொடுத்து உன் வாழ்க்கையை நீயே வீணாக்கிடாதே.''

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும். ராதாவின் பேச்சில் சற்று தெளிந்தாற் போல் இருந்தாள் சித்ரா. ''இப்ப நான் என்ன செய்ய?''

''ம் பேசாமல் போய் தூங்கு. எவடி இவ? இப்பத்தான் சசியை விரட்டிட்டு மதன் ஸார் கோபமா இருக்கார். நீயே போய் பேசு. எல்லாம் சரியாயிடும்.''

''நீ போ! உன் தயக்கம் தானா தீர்ந்திடும்'' அவள் விரட்ட, சித்ரஞ்சனி மதனவர்மனின் அறையை நோக்கி நடந்தாள்.



## 20



மதனவர்மன் கன்னத்தில் கை வைத்தபடி கட்டிலில் அமர்ந்திருந்தான். சித்ரஞ்சனி அவனருகில் சென்று மதன் என்றழைக்க, நிமிர்ந்தவன் கணநேரமும் தாமதியாமல் அவளை இழுத்து தன் மேல் போர்த்திக் கொண்டான். அவள் எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் போகவே அவன் கைகள் அவளின் உடலில் பிடிப்பில்லாமல் இங்கும் அங்கும் அலைந்தன.

அந்த விரல்களின் ஸ்பரிசம் அவளை திக்குமுக்காட வைத்தது. இன்ப அவஸ்தையில் உடல் நெளிய கண்கள் மயக்கத்தில் சொருகுவதுபோல் சொருகின. அவன் அவளை குழந்தையாய் மடியில் கிடத்தினான்.

இடது கரம் மெல்ல அவளின் தலையை வருடிக் கொடுத்தது. அந்த இன்பத் தொடுதலுக்கு ஈடு இணையே இல்லையென்று அக்கணம் எண்ணினாள் அவள்.

''ரஞ்சனி'' காதலின் அழைப்பு! 'ம்'... ஈனசுரமாய் முனகினாள்.

''இப்பவாவது என்னைப் புரிந்து கொண்டாயா?'' அணைப்பிலிருந்து விலக்காமல் கேட்டான்.

''மன்னித்து விடுங்கள் மதன், நான் உங்களை மிகவும் நோகடித்து விட்டேன்.''

ம், என் பக்கமும் உண்டு! நான் உன்னை ரொம்பவும் நேசித்தேன் ரஞ்சனி. அன்றே நான் என் நிலையை உனக்கு விளக்கி இருக்க வேண்டும். ஆனால் நீ அதற்கு ஒரு சந்தர்ப்பம் கூட தரவில்லை.''

''நீ அன்று கோபமாய் பேசிவிட்டு சென்றதும் நான் மிகவும் துடித்துப் போனேன். இனி உன்னை சந்திக்கவே முடியாதோ என்று பயந்தேன்.'' அவன் மேலும் இறுக்க அவ்வணைப்பில் ஒண்டினாள்.

''ஸாரி மதன் சில சூழ்நிலைகள் அப்படி நினைக்க வைத்துவிட்டன. இனி ஒரு நிமிடம் கூட உங்களை விட்டுப் பிரிய முடியாதுன்னு உணர்ந்துட்டேன்.''

''எப்படி?''

''காலம் எல்லாவற்றையும் எனக்குப் புரிய வச்சிடுச்சு. நான் தான் அவசரப்பட்டு விட்டேன்.''

''முதற் பார்வையிலேயே என் உள்ளம் கவர்ந்தவள் நீ. உன் வெடுக்கென்ற பேச்சும், கோபத்தில் சிவக்கும் கண்களும், கன்னமும் ஆயிரம் கவிதைகள் பேசுது.''

''வர்ணனையெல்லாம் பலமாய் இருக்கிறதே?''

''சிற்பம் போல் உள்ள இந்த பெண்ணைக் கண்டால் பைத்தியத்திற்கு கூட கவிதை வருமே.''

''ஒரு வாரமாய் உங்களைக் காணாமல் நான் எத்தனை தவித்தேன். போனில் உங்கள் குரல் எதிர்பாராத விதமாய் கேட்டதும் எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? ஆனால் நீங்கள் தான் உடனே போனை கத்தரித்து



விட்டீர்கள்'' மதனின் மார்பில் வசதியாய் சரிந்து கொண்டு கேட்டாள்.

''நீ ராஜேஷைத்தான் கேட்டாய் அந்த கோபமெனக்கு.''

''ராஜேஷ் செல்லில் நீங்கள் பேசுவீர்கள் என்று நான் கண்டேனா?''

''தவறு தான் இருப்பினும் உன் வரையில் நான் தான் முதல் பிறகு தான் எல்லாமே'' அவளின் விரல்களை தன் கரங்களுடன் சேர்த்துக் கொண்டான். ''ரஞ்சனி நீயும் என்னை நேசித்தாய் தானே?''

''நீங்கள் என்னை இம்சித்தது நிஜம். ஆனால் உங்களிடம் சொல்ல எனக்குத் தயக்கம் நிறைய இருந்தது.''

''உன் தயக்கத்தை முன்பு போல் நான் போக்கட்டுமா?''

''ச்சீய்... ஆசைதான்! எந்த தைரியத்தில் அப்படி என்னிடம் நடந்து கொண்டீர்கள்?''

''நீ என்னவள் என்ற உரிமையில், கண்ணீரோடு உன் கண்கள் என்னிடம் காதல் மொழி பேசியதே அந்த தைரியம்.''

''ஆனாலும் நீங்க ரொம்ப மோசம்.''

''ஏன் காயமடைந்ததா?'' அவள் உதடுகளைத் தடவிக் கொடுத்தான்.

''அதில்லை. சசிரேகாவுடன் அப்படி இழைந்தீர்களே என்னை கண்டு கொள்ளவே இல்லையே.''

''அது வியாபார யுக்தி ரஞ்சனி! நாங்கள் யாரையும் பகைத்துக் கொள்ளக் கூடாது. தவிரவும், அப்படி காண்பித்துக் கொண்டதால் தானே நீ உன் காதலை வெளியே கூறினாய்.''

''மதன் உங்கம்மா நம்மை ஏற்பார்களா?''

''அம்மாவிற்கு மட்டுமல்ல தந்தைக்கும் தெரியும்.'' ராதா அவரிடம் இது பற்றி தொலைபேசியில் பேசி சம்மதமும் பெற்று விட்டாள்!''

''நிஜமாகவா?'' அவள் விழிகளை அகல விரித்தாள்.

''உன் மேல் அவருக்கு அபார நம்பிக்கை. உன் தேர்வு சரியாக இருக்கும் என்ற அளவிற்கு!''

''உங்கள் நினைவில் நான் பெற்றோரைக் கூட் மறந்து போனேன்.''

''அது தான் காதல்.''

''அப்படியா?'' கோரஸாய் உள்ளே நுழைந்தார்கள் மற்ற மூவரும்.

''வாழ்த்துக்கள்'' வாசன்

சித்ரா வெட்கத்தில் சிவந்தாள்.

''பாரு சித்ராவையும், பாஸையும், நமக்கு பின்னாடி லவ்வில் இறங்கினாங்க. இப்போ எங்கேயோ போயிட்டாங்க. நீ என்னை தொடவே விடமாட்டேங்கிறே'' என்று ராஜேஷ் கூற குறிப்பறிந்து இருவரும் விலகினார்கள்.



''சசி ரேகாவோட மூக்கை நல்லா உடைச்சி அனுப்பிட்டீங்க ஸார். வேற மாடலுக்கு நான் அரேஞ்ச் பண்ணட்டுமா?''

''வேண்டாம் வாசன்! இந்த ப்ராஜெக்ட்டை காம்பயர் பண்ண நான் ரஞ்சனியை தேர்ந்தெடுத்து இருக்கேன். இதுக்கு அவதான் பொருத்தமா இருப்பா. இனிமே என்னோட எல்லாச் செயலிலும் ரஞ்சனி கூடவே இருப்பா!'' அவன் பார்வை ரஞ்சனியின் மேல் படிந்தது.

அவள் மவுனமாய் புன்னகைத்தாள்.

''நீங்க எல்லாம் செட்டில் ஆயிட்டீங்க அப்ப எனக்கு?'' வாசன்.

''நீ வேணுன்னா சசியை டிரை பண்ணு.''

''அவளைக் கட்டிக்கிறதுக்கு நான் சந்நியாசம் வாங்கிக்கலாம்.''

''இந்த சந்தோஷத்தைக் கொண்டாட லோகம்மாவை வடை பாயாசத்தோடு சாப்பாடு செய்யச் சொல்லணும்'' என்றனர் அவர்கள்.

இருவருக்கும் தனிமை வேண்டுமென்பதை உணர்ந்து அனைவரும் திரும்பினார்கள்.

''அடுத்த இரண்டு மாசத்தில் இரண்டு ஜோடிகள் தயாராகிடும் மனது குதூகலிக்குது ரஞ்சனி.''

அந்த ஜோடிப் புறாக்கள் இரண்டும் அன்பு இறக்கைகள் கொண்டு காதல் விமானத்தில் பறக்கத் தயாராகின.

சந்திர பிம்பமான அந்த காதல் வெண்ணிலாவை கையி லேந்தினான் மதன்.

"இந்த பாறையையே உருக வைத்து விட்டீர்களே? சரியான கள்வன் நீங்கள்."

அப்போ நீ "கள்வனின் காதலியா?" இருவரும் இன்ப மாய் நகைக்க, இன்ப உலகம் அவர்களை ஆக்கிரமித்துக் கொண்டது.